உ

திருவருட்டுணை

# கயத்தாறு என்று பெயர் விளங்கிய
# திருவாரைத்தலபுராணம்.

இஃது

கரந்திகராம் ஸ்ரீலஸ்ரீ ஏகாம்பரதேசிகரவர்களால்

இயற்றப் பெற்ற

ஷை கயத்தாறு வில்லேஜ் முனிசீப் ஸ்ரீமாந்

அ. சுப்பிரமணியபிள்ளையவர்கள்

ஷை யூர் ஸ்ரீமாந்

வீரபத்திர பிள்ளையவர்கள்

இவர்கள் வேண்டுகோட்கிணங்க

சங்கர நயினார் கோவில் ஸ்ரீமாந்


ப. சங்கரநாராயணமுதலியாரவர்களால்

பார்வையிடப் பெற்று ஷையார் எழுதிய வசனத்துடன்

மதுரை விவேகாநந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பிலவங்க௵ தைமீ கஉ [இதன் விலை அணா 8.



கோதண்டராமேசுரர்.



கோதண்டராமேசுரர்.



அகிலாண்டநாயகி.

உ

சிவமயம்.

திருவருட்டுணை.

கயத்தாறு என்று பெயர் விளங்கிய

# திருவாறைத்தலபுராணம்.

## முகவுரை.

இது கயத்தாறு மகா-ள-ள-ஸ்ரீ. சண்முகம்பிள்ளையவர்கள் குமாரர் ஸ்ரீமத். வீரபத்திரபிள்ளையவர்களெழுதியது.

கடல் சூழ்ந்த இவ்வரிய நிலவுலகினுக்கின்றியமையாத சிறப்புற்றோங்கிய பதினெண்புராணத்துள் முதன்மை பெற்ற காந்தத்திற்கூறப்பட்டதாகிக் கயத்தாறெனப் பெயர் விளங்கிய திருவாறைத்தலபுராணம் காஞ்சி நகரத்திற் றிருநந்திதேவர்மரபிற்றோன்றி வைதீக தர்மபரிபாலனம்புரியும்ஸ்ரீமத் ஏகாம்பரதேசிகரவர்களாற் றமிழ்ச்செய்யுள் ரூபமாக மொழிபெயர்க்கப்பட்டிருந்ததை ஷை கயத்தாறு சப்ரிஜிஸ்தராரும் தமிழருமையறியும் பெருமானென்றியாவரும் புகலற்கிசைந்தவருமான மகா-ள-ள-ஸ்ரீ சுப்பிரமணியபிள்ளையவர்கள் பிதாவும், மகா-ள-ள-ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையவர்கள் குமாரரும் திருநெல்வேலி ஜில்லா இராசவல்லிபுர வாசியுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ சாமிநாத பிள்ளையவர்கள், ஷை ஏகாம்பர தேசி

கரவர்கள் பௌத்திரர் ஏகாம்பர தேசிகரவர்களாலரங்கேற்று வித்த ஏட்டுப்பிரதியொன்றகப்பட்டது.

அதை ஷெ கயத்தாறு வில்லேஜ் முனிசீபும் இச்சிவாலய தர்மகர்த்தாவுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ ஆ. சுப்பிரமணிய பிள்ளையவர்களு மியானு மிந்நகரவாசிகளு மொருங்குகூடி, திருநெல்வேலி ஜில்லா சங்கர நயினர்கோவில் கஸ்பாவிலிருக்கும் மகா-ள-ள-ஸ்ரீ எ. சங்கரநாராயண முதலியாரவர்களிடம் கொடுத்துச் சுத்தப்பிரதியாக்கி அச்சியற்றித்தரவேண்டுமென்றிசைத்தனம். அவ்வண்ணமே 1083-ளு தை-மீ 1-உ க்கு 1908-வு ஜனவரி-மீ 14-உ அச்சியற்றி யெங்கட் கீந்தருமை. இச்சிவாலயம் ஆதியில், இராமர், அகத்தியர், அனந்தகுணபாண்டியன், இராசசேகரபாண்டியன் இவர்கள் பூசித்தும் நேசித்தும் திருவருட் பேறுபெற்றவிடமாம். இவ்வாலயத்தின் முன்பு பலவரசர்களரசாண்டு தகர்ந்துபோய்க் கிடக்கும் கோட்டைகளும், அதனுள் மூடுபட்டிருக்கும் பல தடாகங்களும், சரிந்துபோன கூபங்களும், யானைகட்டுகிறதறிகளும், மூழ்கிப்போன வரண்மனைகளும், மேடிட்டுக்கிடக்குஞ் செய்குன்றுகளும், கோட்டையைச் சூழ்ந்திருக்கும் நிலைதெரியாதழிந்த வகழ்களும், அக்கோட்டை வாயில்கடோறும் பொருந்திய பலதேவதைகளும், இன்னும் பற்பல வதிசயங்களும் வேறு வேறுவகையாய்த் தாறுமாறுகக்கிடப்பதை இன்றும் பார்க்கலாம்.

ஆண்டான் கவிராசர் பாடிய,

"பாளைமணங் கமழுகின்ற கயத்தாற்றுப் பெருமாளே பழிகா ராகேள், வேளையென்று விவ்வேளை பதினாறு நாழிகைக்கு மேலா யிற்றென், றோளைமுறித் ததுமன்றி நம்பியானையுங்கூடச் சுமக்கச் செய்தாய், நாளையினி யார்சுமப்ப ரென்றுரு முன்கோவி லைசந் தானே"

என்ற விச்செய்யுளை யறியாரியாருமிலர். இவர் வாக்கின்படி பாழாய்க்கிடக்கும் சிகரிகளையுடைய பெருமாள் கோவில் மேற்சொல்லிய கோட்டையினுட் பிரதேசத்திலி யாவருக்கும் புலப்படக்கூடியதாயிருக்கும். ஆனாலிவைகளெலலாம் ஈறிலாதவனீசனொருவனே யென்னு மான்றோரனுபூதிப் பிரமாணத்தைக் கற்றார்க்குங் கல்லார்க்கும் பிரத்தியட்சப் பிரமாணமாகக்காட்டி நின்றன. மேற்கூறிய சிவாலயத்தின் முன்பக்காலங்களினு மிடையறாதோடிக்கொண்டிருக்குங் கயத்தாற்றினும் இவ்வாலயத்துட்டென் கீழ்த்திசையிலுள்ளகோடிதீர்த்தமெனுங் கூபத்தினுந் தீர்த்தமாடி, கோதண்டராமேசுரர், அகிலாண்ட நாயகியார் இவர்களை நிர்மல சித்தராய்த் தெரிசிப்பாராயி னவர்கட்கங்ஙன் இகலோக பாக்கியமும் பரலோக சாம்பிராச்சியத்திச்சையும் உண்டாகித் திருவருளினனுபூதி கைகூடுமென்பது திண்ணம்.

ஆகையாற் கிடைத்தற்கரிய மானிட தேகமெடுத்ததனருமை சிவானுபவைசுவரிய மடைவதுதா னென்றறிந்த

நம்மவர்களே! உங்களையமென்பதை நீக்கி இத் திருவாரூத்தல புராணத்தை வாங்கிப்பார்ப்பதுடன் ஆங்குச்சென்று தெரிசிப்பீராயின், அங்கிமிடமே, நித்தியானந்த வாழ்வைப் பெறுவீரென்பதுண்மை யுண்மை யுண்மை.

செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
வம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே.

என்னும் சிவஞான போதத்தை யுணருஞ் சான்றீர், மும்மலசுத்தியுடன், தலையன்புடைய சிவநேசர்களோடு கூடிச் சிவ வேடத்தையும், சிவாலயத்தையுமே பரமேஸ்வரனுகத் தொழுவது என்பதுதான், மேற் சூத்திரக்கருத்து.

ஆதலாலிவற்றைப்பற்றுக் கோடாகக்கொண்டு இப்புத்தகம் வேண்டுவோர் என்னிடத்திலும் ஷை கயத்தாறு மகா-௱-௱-ஸ்ரீ வில்லேஜ் முனிசீபு ஆ. சுப்பிரமணிய பிள்ளையவர்களிடத்திலுஞ் சுலுபமான விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

இங்ஙனம்,
சிவானந்தநேயன்,
சூ. வீரபத்திர பிள்ளை,
கயத்தாறு.

உ



கயத்தாறு என்று பெயர் விளங்கிய,

# திருவாறைத்தல புராணம்.

## பாயிரம்.

### விநாயகர்துதி.

பூங்கனிவெண் பிறைக்கீற்றுப் பொன்னீவிருஞ் சடைமௌலிப் புனித னன்பர், பாங்கனிர சதவரையோ னருண்மதலை மேருபருப் பதத்திற் கோட்டாற், றுங்கனிவாய்ப் பாரதத்தைப் பொறித்தந்தத் தந்தையீர் பாற்சார் பாக, மாங்கனிலாங் கியதந்தி யானனன்றன் மலர்ப்பதத்தை வணங்கல் செய்வாம். (க)

## இதுவுமது.

சதத்தானு மகத்தானும் விதித்தானு மளித்தானுந் தானே வேண்டும், பதத்தானும் பரைதானும் பயந்தானும் பருமுனிவோர் பணியுந் தெய்வ, முதற்றூனப் பெரியோனை யாறைநகர்க் குரியோனை முடிவி லோனைச், சிதத்தானை யடியவர்க்குச் சிதத்தானை முகத்தானைச் சிந்தை செய்வாம். (உ)

## கோதண்டராமேசுவரர் துதி.

திருவாழும் புயனுமல ரயனுமுணர் வரியதொரு தெய்வமூலம், பெருவாழ்வு கருணைமிகுந் தருவுருவக் குறியுமொருபெயரு மாகி, மருவாழும் பொழில்புடைசூழ் தென்னுறைமாநகரில் வளருஞ் சோதிக், குருவாழு மமிர்தகோ தண்டராமேசனடி கூறு வோமே. (ந)

## இதுவுமது:

திருப்பொலியு மதிச்சடையுந் திகழ்வதன மண்டலமுந் திரையக் கண்ணுஞ், சுருப்பொலியு நருவிதழி மணிமார்புங் கச்சரவுந் துலங்கு மேலோர், விருப்புறுகுஞ் சிதபதமு மகிலாண்ட மாதொருபால் விளங்கு மாறை, யிருப்பரையன் கோதண்ட ராமேச னடிக்கமல மிறைஞ்சு வோமே. (ச)

## அகிலாண்டநாயகியார் துதி.

சரிதையா லயமாகத் தவுறுத பூசனையுந் தவழ்ம் மான, கிரியையெனக் காட்சிதருந் திருமேனி யோகமெனக் கிருபை

தாங்கி, யருமைதரும் பெருங்கருணை ஞானமென வவனிபுக ழாறை யேவுந், திருவளரும் விசயம்வள ரகிலாண்ட நாயகி யைச் சிந்தை செய்வாம். (௫)

## இதுவுமது.

கந்தமலர்க் குந்தளமுங் கருணைபொழி திருமுகமுங் காதார் கண்ணுஞ், சந்திரநாண் கந்தரமுந் தனகிரியுஞ் சிற்றிடையுஞ் சரணப் போதுஞ், சுந்தரமா யெழுஞ்சோதிக் கோதண்ட ராமேசர் துணையோர் பங்கில், வந்தவளுஞ் சூழாறை யகிலாண்ட வல்லிபதம் வணங்கல் செய்வாம். (௬)

## தலவிநாயகர் துதி.

வேதண்ட நீண்டவரை விளங்கியசீ கத்தர்திரு வாறை மேவுங், கோதண்ட ராமேசர் தம்புரா தனநூலின் கொள்கை கூற, மூதண்ட முகடுவரை மொய்குழலா டிருவுதர முங்கை வந்து, தீதண்ட வரப்பொரு ளெமக்கருள்வா ரணத்தி னடி சென்னி சேர்ப்பாம். (௭)

## சுப்பிரமணியர் துதி.

தும்பிமுகக் கடவுளுக்குஞ் சிறவிதியைத் துணித்தவர்க்குந் துணையி னானைக், கும்பமுனிக் கருள்சுரந்து மெய்ஞ்ஞான வுண்மைதனிலே கூறி னானை, நம்புதலை யுள்ளவர்க்கோ ராறுதலை பானையிபி னடத்தி னானைச், செம்புவள வாய்க்குறத்தி வள்ளிமோ கனைப்பணிந்து சிந்தை செய்வாம். (௮)

## வீரபத்திரர் துதி.

### வேறு.

கயிலாயத் தரும்பெருமான் கனலோங்கு நுதற்கண்ணில்
வியனாகத் தனியெழுந்தோர் விமலனா ரருளின்றிச்
சயவேள்வி யிணைப்புரியுஞ் சிறுவிதியைத் துணித்தருளு
முயர்வீர பத்திரனா ருடையமலர்ப் பதம்பணிவாம். (கூ)

## திருநந்திதேவர் துதி.

### வேறு.

எங்குநிறை பொருளறிவுக் கடங்காத திரசதவெற் பிடத்திற் காண, மங்கையுடன் கலந்தருளி மன்னுயிர்கட் கின்பருள வல்லா ரென்றுந், தங்கியஞா னந்தருநற் றிருமேனிப் பெருமோகந் தணியா தாகி,யங்கணவர் சன்னிதிகாத் தெமையாளு நந்திபத மகத்துட் கொள்வாம். (௰)

## சரஸ்வதி துதி.

சங்கரற்கு மாமகளாய் மாயவற்கு மருமகளாய்ச் சதுரவேதப், புங்கவற்கு மனையவளாய்க் கலைஞானச் சருக்கரையாய்ப் புனித வெள்ளைப்,, பங்கயா சனத்தவளாய்ப் பளிங்கொளிநற் றிருவுருவாய்ப் பூ யணிவோர் நாவிற், றங்கமுற வளரமுதைச் சொற்றமிழ்க்கு வழுவாமற் றுதிசெய்வாமே.

## திருஞானசம்பந்தமூர்த்திகள் துதி.

பொன்வள்ளத் தருளுமையாள் பாலமிர்தங் கறந்தரு ளிப் புரிந்து நோக்கி, யென்பிள்ளை யெனவூட்ட வின்றவரு மீதறியா தென்கொ லென்ன, வன்கள்ள னெனதுள்ளங் கவர்காழி வள்ளலென மகிழ்ந்து பாடு, மன்புள்ள வருண்ஞான ப்பிள்ளையா ரடிக்கமல மகத்துட் கொள்வாம். (கஉ)

## திருநாவுக்கரசுநாயனார் துதி.

செப்பூதி பத்திநிலை பெற்றதடி யார்வணக்கஞ் செயலே யென்றன், றப்பூதி யடிகளுஞ்சேய்க் கப்பர்பே ரிடுமகிமைக் கரவால் வீடத், தப்பாதப் படிவருமோ வெனப்பிரான் றனைப்பாடுந் தகைமை யாலன், றெப்போதும் போற்றிறப் பித் தானெந்தை யிணையடிக ளிறைஞ்சு வோமே. (கங)

## சுந்தரமூர்த்திநாயனார் துதி.

### வேறு.

மழவிடை யுடையான் றில்லை மன்றுளே திருக்கூத் தாடுங், குழகனைக் கொவ்வைச் செவ்வாய்க் கோதைபாற் றாது போகப் பழகிய தோழ னுரைப் பரிவிடை நடத்தப் பாடு, மழகுசுந் தரரா மெங்க ளையனைப் போற்றல் செய்வாம். (கச)

## மாணிக்கவாசகசுவாமிகள் துதி.

வேறு.

மாறன் றந்த பொருட்குநல் வாசியாய்
வேறு வேறு நரித்திர ளின்மிசை
யேறு மேற்றனை யீண்டு வரச்செய்த
தேறு ஞானிதன் சேவடி சிந்திப்பாம். (கரு)

## அறுபத்துமூன்றுநாயன்மார்முதலாயினோர் துதி.

வேறு.

தில்லைவா ழந்தணர்கள் முதலாயுள்ள திருநாவ லூர்க்கோனென் றெப்வமீறு, வல்லதிருத் தொண்டர்மல ரடிகள் போற்றி மற்றுமணி கண்டிகைவி பூதி சாத்திச், சொல்லுமோ ரெழுத்தஞ்சும் மனத்தால் வாக்காற் றொடுத்தசெபஞ் சகசமாத் தொடுக்குந் தொண்டர், நல்லமலர்த் துணைப்பதமெம் மிதய நாட்டி நனவகத்துங் கனவகத்து நயந்து வாழ்வாம். (கசு)

## திருமாளிகைத்தேவர்முதலிய பதின்மர் துதி.

வேறு

அன்னதிருமா ளிகைத்தேவ ரரியசேந்த னாரன்பின்
மன்னுகருவூர் வருந்தேவர் மறுவிலிகாட நம்பிகள்சீர்
பன்னுகண்ட ராதித்தர் வேணாட்டடிகள் பதம்போற்றித்
துன்னுதிருவா லியர்புருடோத் தமர்சேதியரைத் துதிசெய்
வாம். (கஎ)

## ஆசிரியர் துதி.

### வேறு.

வெள்ளிவரைச் சிவபெருமான் மெய்ஞ்ஞான வுண்மை
ருள் விளங்கு ஞான, முள்ளபடி கண்டுகுரு நந்தியுமோர்
பருங்கருணை யுவந்து நோக்கிக், கள்ளொழுகும்பூஞ்சோலைக்
ஞ்சிதலத் தெம்மரபிற் கலந்தா னந்தத், தெள்ளியநங் குரு
வகாம் பரநாத னிணையடிகள் சென்னி சேர்ப்பாம். (கஅ)

## நூற்பயன்.

திருவாறைப் புராணத்தை வாசித்துத் தேசித்துத் தி
ரானிப் போர்சொல், மருவாரைச் செயமடைவ ரூழ்வினையின்
வல்லமையை மாய்ப்பர் வாழு, வருவாரைத் தள்ளிவிடா ரீங்
கெல்லா முடையரப்பான் மாலே மற்கு, வெருவாரைக் கிய
மடைந்து வாழ்ந்திருப்பர் சிவபோக வீட்டிற் றானே. (க௯)

## வாழ்த்து.

### வேறு.

பாரிணங்கு மரசோங்கப் பிரிந்துமழை சொரிந்தோங்க
வாரணங்கள் மறையவர்க ளானினங்க டழைத்தோங்க
பூரணரா மேசர்தமைப் பூசிப்பாரி தழைத்தோங்க
காரணிபி னல்லறமுஞ் சைவமுமேற் றழைத்தோங்க. (௨0)

## அவையடக்கம்.

### வேறு.

சந்தனதிவ் வியவிருக்கம் முருகுயிர்க்கும் புடைமருங்
கிற் றருவுக் குள்ள, கந்தமலி நறையகன்று சந்தனமா நறை
கமழ்ந்து கலக்கு மாபோற், செந்தமிழ்தேர் கவிவாண ரிடஞ்
சேர்ந்தசகவாசச் சிறப்பா லாறை, யெந்தையிரா மேசர்கதை
வடமொழியைத் தென்மொழியி லியம்பி னேனால். (உக)

## நூற்சருக்கத்தைத்தொகுத்துச்சொல்லுதல்.

### வேறு.

நாடு நகரி தலந்தீர்த்த நணியி ராமன் வில்லிபுத்தூ
ராட லிவுளி யனந்தகுண மாற னறவோன் கும்பமுனி
சூடு மகுட ராசசே கரபாண் டியனுஞ் சொன்மூல (உஉ)
ரேடு டலராற் பூசித்த லென்னுந் தொகுதி யெட்டாமால்.

பாயிரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆகத் திருவிருத்தம் உஉ.

# நாட்டுச்சருக்கம்.

மேக மிந்திரன் வாலிப வுருவென விளங்கி
மாக மெங்கணும் பரந்துபோய் மறிகட லுப்பு
ணேக மாயுவாப் பிரளய மினிதுவந் தருந்திப்
போக மாமதன் போதக வுருக்கொடு போந்த (க)

நாடி வந்தெழு மெழிலிநெய்ச் சூர்வள நாட்டிற்
கூட மோங்கிய யானைமா மலைக்குவ டதன்மே
னீடு பண்ணைசூ ழாறையி னிறைநிறை கருணைப்
பீடு போலிடி முழக்கொடும் பெருமழை பெய்த. (உ)

பெய்யும் வானஞ்சொல் பிறங்கன்மேற் பெருகொலி யருவி
மொய்யு றத்திரண் டகிலொடு சந்தமு முத்தோ
டுய்ய வேவரு மியானைமா நதியெனு மொரு பேர்
வையம் போற்றிட வந்தது மால்புரப் பதுபோல், (ங)

வேறு.

பலவுயிரு மெத்தன்மைத் தாயினுமூர் தோறும் பரிந்த
ருளி ரட்சைபுரி பண்புடைய தாலும், கலைதரித்துப் படிந்
தாடு மவர்கட் காங்கே கனசவுக்கிய மாகமலங் கழிப்ப தாலு,
நல்முறவே சிவபெருமா னிருவரையுந் துணையாய் நயந்துதிரு

மேனியிலே யுவந்தணிந்த லாலும், மலைமகளென் றுயான வருட்கவுரி யெனவே மகிமைதர வந்ததொரு பெருமைநதி யிதுவாம். (ச)

வேறு.

மாலிட மாகவே பிறந்த வண்மையா
லேலவே யன்னத்துக் கிசைவ தென்பதாற்
கோலமாய்த் தோற்றமுண் டாக்குங் கொள்கையாற்
சீலநான் முகனெனச் செழித்து வந்ததே. (ரு)

வேறு.

கங்கை கால்பரந் தேரிக ணிறைந்துகா லிருபாற்
றங்கு றும்று காலுற வேரியிற் றலைப்பட்
டங்கண் மாமத கூடுபோ யணிவளை யூரு
மெங்க ணும்பணைப் பரப்பெலாம் பாயுமின் னமிர்தம். (சு)

வாச்சி யாயுதத் தபதியர் பணிப்படு மரத்தா
லாட்சி யாவுழு நிலமெலா மொல்லென வடுத்துக்
காய்ச்சி நீட்டயத் தாற்கொழுப் பூட்டியுட் களித்துச்
சூட்சி யிற்கயிற் றாற்கொடு பகடுழுத் தொடுப்பார். (எ)

ஏரு நாளுழத் தெய்வமே யெனத்தொழு மிசைப்புஞ்
சீரு ணர்ந்துழுஞ் சேற்றினங் கழிப்புறு சிலம்பும்
பாரு ழத்தியர் குரவையின் றெருபக ரொலியு
நீர்த டக்குறு மொலியுமே யெங்கணு நிறைந்த. (அ)

வித்து நற்கர ணைத்தினில் விரைப்பவ ராகை
யத்த னைத்தொழு தகன்பணை யாவையு முரஞ்சேர்
பத்தில் வித்தினம் பற்பல சாலிகள் பரப்ப
வொத்த பூம்பயிர் பச்சைமா லுருவென வுயிர்த்த. (௯)

வேறு.

காமுறு தடிக டோறுங் கரைநெடுங் குளங்க டோறும்
பூமலி வாவி தோறும் புனற்சிறு கிடங்கு தோறுந்
தாமரை நெய்தன் மட்டோர் தாமரை மலர்ந்ததென்கோ
பாமலி யிராகம் பாடு மளிக்களி பரிசென் பாமால் (௧௦)

வேறு.

நாற்றைச் சேற்றினி லுழத்தியர் குழுநிரை நடுவார்
தோற்று மம்புயக் களைகளைக் களைகுவர் தொகுப்பிற்
சாற்று மாதர்கட் கயலினைக் கயலெனத் தம்மின்
மாற்றங் கூறிய மள்ளர்கைப் படுத்திட மருள்வார். (௧௧)

வேறு

கன்னலு மோங்குறுங் கதலி யோங்குறுந்
துன்னிய கொடிகளுந் தெர்குப்பி லோங்குறு
மன்னுசூழ் வரப்பெலாம் வளமுத் தோங்குறும்
பன்னிய விரவினிற் பகலுண் டாகுமே. (௧௨)

வேறு.

பணைவ ரம்புசூழ் ஞாங்கரும் பற்பல சூதந்
தணிவு றுநெடுந் தாழைகள் பூகமின் றருக்கள்
துணர்கள் பூத்துநற் பலந்தரு கனிகளுந் துன்னு
மணிகொள்பூம்பொழிற்புயலினுக்கிருக்கையதாமால். (கங)

மங்கு றேய்பொழிற் சூழலிற் குரக்கினம் வலியாற்
றங்கு நேர்தருந் தாவுறப் பலமுதிர் சாறுங்
கங்கை யோடுதண் கழனியிற் பாய்தரக் கரும்பை
யுங்கு நேர்தர வளர்ந்தது சாலியி னளவு, (கச)

வேறு.

சாலிநெடுங் கதிர்பூத்த் தகைமை யோங்கித் தரும்பொ
திகாய் தலைபழுத்துச் சாயும் பண்பு, கோலமூ தறிவுடையோ
ர்காள கண்டக் குழகனடி யார்குழுவை பொருளாக் கொண்டு,
காலின்மிசைச் சிரம்வணங்கிக் கீழை தாழ்ந்து களங்கமறப்
பணிவதுபோற் கதிர்க ளெல்லாஞ், சிலநிறை பழனங்க டோ'
றுங்காட்டிச்செந்நெல்விளைந்தோங்குவதிச்செல்வ நாடு (கரு)

வேறு.

புன்னரி வாட்டொழிற் பயிற்றி யேயரி
துன்னிய சுமைகொடு சுமந்து போர்செய்து
மன்னிய கரும்பக டுழக்கி வைதெரிந்
தன்னெடு முடுக்கல்போ லுளப்பர் சாலியே. (கசு)

வேறு.

ஏலவார் குழலா யதனா ரிரும்புனல் விளையாட் டியக்குஞ்
சாலநீர்த் துறைக ளெங்குஞ் சந்தப்பூங் கந்தம் வீசுஞ்
சோலையின் மயில்க ளாடச் சொற்குயி லிராகம் பாடக்
கோலமார் சுரும்பி னங்க ளோத்தெனச் சுருதி கூட்டும்.(கள)

வேறு.

இன்ன தானவா சூர்வள நாட்டினி லியலபாயப
பன்னு மாமறை வேதியர் வேதத்தின் பண்பும்
மன்னர் காவலும் வணிகர்செய் தொழில்களும் மறையா
தன்ன மேயிடு மின்னவர் திறமுமே லறைவாம். (கஅ)

திருச்சிற்றம்பலம்.

நாட்டுச் சருக்கம் முற்றிற்று.

ஆகபாயிரமுட்படச் சருக்கம் க-க்குத் திருவித்தம் ௪௦.

# நகரச் சருக்கம்

தருவோங்கிய வாறைப்பதி தழைப்பமரு வெல்லா
மருவாகிய காற்றுடன் போகியய வெல்லாங்
கருவாய்மல ருருவாய்நிறை காதன்மண மாகிப்
பெருவாழ்வுறீ தேவர்க்குற வாகிலம் பெறுமே. (௧)

வேறு.

சித்திரப் புரிசை தினகரன் றேரிற் சென்றெதி ராசனங் கொடுக்குஞ், சத்திர மாகக் கொடியதன் மேலாய்ச் சார்ந்து நின் றுபசரித் திடுவ, வித்திற மான விஞ்சியைச் சுற்று மெழு கடல் கிடங்கது வாகும், புத்திரர் பட்டம் விடுவது மேற் போய்ப் பொன்னக ரெய்திடும் புதுமை. (௨)

இன்னகர் மாக்க ளினிதறஞ் செய்யு மியல்பினை யாதென வியம்பிற், கன்னிகை தான மகப்பெறு வித்தல் கமலநீர்த் தடாகமே செய்தல், மன்னிய வநாதர்க் குணவுடன் மகவை வளர்க்குத லையம்வெண் சுன்ணை, மன்னியர் துயரங் காத்தலுந் தண்ணீர்ப் பந்தரு மாவுக்கு முணவே. (௩)

அறப்பிணஞ் சுடுதல் தூரிய மளித்த லாவுரிஞ் சுதறியே வண்ணான்,சிறைப்படு வோருக் கன்னமே யிடுதல் தின்பண்ட நாவிதன் மாதர், நெறிப்படி போகம் விலங்கினுக் குணவு

நேத்திர மருந்து நோய மருநது, விறலுடனேறு விடுதலே
மடமும் விலேகொடுத் துயிர்கொடுமீட்டல். (௪)

வேறு.

கண்ணிடி காமேதாலே தலேக்கெண்ணெய் காய்தலிலா
வண்ணலறு சமயத்தார்க் கழுதூட்டலன்றியும்வான்
மண்ணூர்ந்த பூஞ்சோலே மகப்பிலு மாதுலர்க்குக்
கண்ணகன்ற சாலேயுடன் கற்றவர்க்கு முணவிடுதல். (௫)

வேறு.

இப்படி யெண்ணான் கறமுமே செய்து மிருப்பது மாறைமா நகரின், மெய்ப்படு புருட ரிவ்வழி நடக்கு மேம்படு புகழுதுக் கேற்பத், தப்பிலா மாத ரருந்ததிக் கொப்பத் தன்மமே செய்துவான் றிங்க, ளூப்பர வணிகோ தண்டரா மேசனடியிணே தொழுதுவாழ்ந் திருப்பார். (௬)

வேறு.

ஆடகம்மணி யாரகத் தின்றிரட்
கூட மோங்கு மறையர் கொலுவுயர்
மேடை மாடங்கள் கோபுரம் வெற்றிசே
ராடை யார்த்த கொடிகளு மாடவே. (௭)

வேறு.

புரவலன் கடமை போக்கிப் பொருந்துமை வகையிற் சுற்றம்,
மருவிய பிதிருந் தேவும் வரவுநல் விருந்துங் காத்து
விரவிய தான்மற் றொன்றில் வேண்டிய வளங்க டுய்த்துப்
பரவுபே ரறங்கள் போற்றும் பண்புடைப் பதிக ளெங்கும்.()

வீதிகள் விளக்க மெங்கும் வீறுமே தோ ரணங்க ளெங்குஞ்
சாதிமே லவர்க ளோமச் சடங்குசெய் சாலை யெங்கு
மாதுலர்க் கன்ன சாலை யமைதிக ளங்கெங் கெங்கும்
மாதவர் முனிவர் மேவு மடங்களாச் சிரம மெங்கும், (௯)

வேறு.

ஆனை மாமதத் தார்ப்பொலி யோசையும்
வானிற் பாய்பரி மாவரு மோசையும்
பூனி லத்தரை யுன்பொற்பு வீதியிற்
சேனை யோர்கள் சிலம்பமுஞ் சேணுறும், (௧௦)

சால வேதங்க ளோதருஞ் சந்தையுங்
கால காலங்கள் பாடிய கானமுங்
கோல மாதர் குலவிய பாடலுஞ்
சீல மேசுகஞ் செப்பிப் பயிலுமே. (௧௧)

வேறு–

நத்தி னங்களை யடுப்பென நயந்தது தன்னைச்
சுத்த பாத்திர மேந்திநீர் சொரிந்துதண் டுலங்கள்
முத்தி ளங்களா வித்துரு மக்கனல் மூட்டி
வைத்து நேர்விளை யாடுவார் சிறுசிறு மடவார். (௧௨)

வேறு.

அறமெனும் பயிர்க்கொரு வேலி யாயினோர்
மறமெனும் பாவவல் வினைக்கோர் வாளினோர்
திறன்மிகு மாநிதிச் செல்வ வாழ்வினோர்
நிறையொரு வசனமே நிறுத்து வோரெலாம், (௧௩)

திருச்சிற்றம்பலம்.

நகரச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௨-க்குக் கூடிய திருவிருத்தம் ௫௩.

# தலவிசேடச்சருக்கம்.

அரும்பர னிடங்க டோறு மறநெறிச் சூத னெய்தி
நிரம்பிய வருளி னாலே நேமிசா ரணிய மெய்த
வரம்புடைத் தவத்தி னோக்கு மாமுனிக் குழாங்க ளெல்லாங்
கரங்குவித் தெந்தா யென்றோ ராசனங் கூறித் தேத்தி. (௧)

வேறு.

எங்கண் மாதவப் பயன்கொலோ விங்கெழுந் தருளும்
பொங்கு மாதவக் கருணையீர் பூருவ மதனில்
மங்கை பாகர்தம் புராணங்க ளாதியா மற்று
மங்க ணுள்ளதோர் புராணங்க ளீரொன்ப தான. (௨)

இனிய சைவமே பவுடிக மார்க்கண்ட மிலிங்க
நனிகொள் காந்தநல் வராகமே வாமன மச்ச
மினிய கூருமம் பிரமாண் டிவைசிவ புராணம்
பனிய தாமரை யோன்கதை பிரமமே பதுமம். (௩)

கருது காருட நாரதம் விண்டுபா கவத
மரிய மால்கதை யாக்கினே யம்மழுற் கதையா
மிரவி யின்கதை பிரமகை வத்தமா மிவைதாங்
தெரிவு றும்பதி னெண்புரா ணங்களிற் றெரிந்தே. (௪)

சைவ நன்னெறிச் சிவகதை தரணியிற் றழைத்த
தெய்வ தானத்தின் மகிமையைத் தெரிந்துநீர் செப்ப
வுய்வ கைத்திறத் தூய்மையே யடைந்ததெம் முள்ளம்
மெய்வ கைத்தல மினுமருள் விரென விளம்பும். (௫)

வேறு.

ஆனகாவிய மான்மியக்கதை யனையகாந்தமுன் ஞானில்
வானமூடுயர்வேணுமாவனம்வரைநெல்வேலியின்மாக்கதை
தானதிற்புகழ்ச்சாலவொணுசதின் றுனமோர்வட புலமதாம்
மானமாபுர மத்தலத்துமோர் வடதிசைப்புல மாத்தலம். (௬)

எட்டினெட்டறு பத்துநால்வினை யாடல்செய்தரு ளீசன்வா
ழிட்டமாமது ராபுரித்தல மென்பதிக்கொரு தென்புலம்
வட்டவார்சடை யார்குற்றலர் மகிழ்ந்தவான்றிரி கூடத்தின்
சிட்டரோதிய வாசவன்றிசை யாயதென்கயி லாயமே. (௭)

நடுவிலற்புதமொ ராறையென்னுநகர் நல்லசேத்திரம
தன்கணே, கடுவிருந்தகள வமிர்தலிங்கமிகு கருணையார்
மகிமை கழறுணு, குடமுனிப்பொதிய வரைவடக்குநிமிர்
குன்றமியானைமலை யொன்றுள, தடமகத்யமடு வந்தவாறு
மலை சார்ந்தபெருமது வேய்ந்ததால். (௮)

வேறு.

ஆனை மாநதி யெனும்பொரு ளேகயத் தாறு
மானி லம்புகழ்ந் திந்தமா நதிக்குப்பேர் வகுப்பத்

தான லம்பெறு நாமமே நகருக்குஞ் சமைந்த
கோன வன்றிருக் கோயிலுட் காசியங் கூபம். (௯)

வேறு.

இன்னதன்மையரி தன்மையானதல மெண்ணெணுதவ
தி ரகசியம், முன்னனுதியுள தன்மையான்மொழிய முற்று
மோபெரு விருப்பினாற், பன்னுமேகனுமையு மகிலநாயகி பரா
பரைக்குள்வி சேடமு, மன்னகும்பமுனி தவம்வருந்தவரு
மருமையான திரு வுருவமே. (௧0)

வேறு.

தீர்த்த நதிசேர் சன்னிதியுந் திருந்து மாறைத் திருத்
தலமு, மூர்த்தி யுமைபாண் மூலமும்யான் மொழியத் தகு
மோ வம்மம்ம, கூத்தன் றனே யிருந்தருளிக் கொண்டற்
கருணே தேவர்தொழு, தேத்தச் சமைந்து பலயுகங்க ளிருந்
தான் மகிமை யென்சொல்வேன். (௧௧)

வேறு.

என்று சூதனு மியம்பிட மான்மியத் தலமென்
றொன்று நீர்சொலு முண்மைகேட் டுய்ந்தன முலகிற்
றென்ற னுதியன் றனே மாக்களாற் றெருக்து
முன்றன் மாமல ரால்வழி படுதன்மற் றுளவோ. (௧௨)

அருளு மென்றுபன் முனிவர்க ளடிபணிந் தறைய
மருளு றுதமே ரருளுடைச் சூதனு மகிழ்ந்தே

யொரு பெருந்தவ முனிவரே கேண்மின்முன் னுகத்திற்
றெருளுந் தேவர்க ளரக்கர்செய் துயரினுற் றிரண்டு. (கங)

அச்சு தன்புரி வைகுந்த லோகத்தை யடைந்து
பச்சை மாறனைப் பணிந்திரா வணன்பகைத் திறத்தை
வைச்சு ரைத்தன ராங்கவன் கேட்டொரு மாற்ற
மிச்சை யுந்துமக் காம்படி செய்வனென் றிசைத்து. (கச)

சிறிது நாளினி லிப்பது திரேதமாம் யுகந்தா
னறிவுற் றீரடற் றசரதன் மகவென வடைந்து
மறுவில் சேத்திர மாறைமா நகரினில் வந்து
நெறித ருஞ்சிவ லிங்கபூ சனைகளு நிரப்பி. (கரு)

அந்த நாதனு மகிழ்தலிங் கப்பொரு ளருளால்
வந்தி லங்கையி லிராவணன் வருப்பெலா மாள
முந்த வேசெகுத் துங்களுக் காம்படி முடிப்போ
மிந்த வாறுகேட் டவரவ ரிடம்புகீ ரென்றான். (கசா)

சென்ற தேவர்க ளவரவ ரிருக்கையைச் சேர்ந்தா
ரொன்று விட்டிரண் டாமுகஞ் சொற்றனு ளுறமுன்
றுன்று ரைத்தவச் சீதரன் றயரதன் சுதனு
யன்றி ராமனென் றுதித்தனன் றொழுதன ரமரர். (கஎ)

வந்த லாய்முடி சூடுநாட் டாயர்சொல் லியல்பே
சார்ந்து கானகத் தடைந்தன் றுகநீர்க் கொருநாட்

போர்த்த வெள்ளியித் தலமுறப் புவனநீ ரின்றி
யார்ந்த சிந்தையாற் பார்த்தனன யோத்திமால் ராமன். (கஅ)

உச்ச ரித்தவன் றியானத்தா லும்பன்மா மலைமேன்
மிச்ச மாகிய வகத்திய மடுவினீர் விளங்கக்
கைச்சி லைப்படு நதியினால் வரைந்திடக் கங்கை
யச்ச முந்தரு மணிகளுந் திரட்டிவந் தனவால். (கக)

வந்த மாநதி தன்னின்மா விராமனு மகிழ்ந்து
முந்த நானமுஞ் சந்தியும் விதிப்படி முடித்து
இந்து சேகரன் பூசனை செய்வனென் றெண்ணிச்
சிந்தை யன்பொடு தியானிக்கத் திருவரு ளிரங்கி. (உ0)

வேறு.

ஆறைநாயக ரமிர்தலிங்கர்த னருள்சுரந்தொரு கருணையா
லீறிலாவதி ரகசியப்பொரு ளின்றெனக்கரு ளாகியே
பேறளித்தன ரென்றிராமனும் பேணியேமன தாவலாய்
மீறியேமலர்ப் பாதமீதினில் மிக்கவுந்தொழுது வேண்டுவான்.

அன்பனன்புதனை யற்புதப்படவு மமிர்தலிங்கர்தரி யாது
பே, ரின்பமேமொழுகு மைந்துமாமுகமு மிந்துசேருமுடி
வேணியுந், துன்புநீதவரைய டாமலேவிடமு முண்டதூய
மணிகண்டமு, முன்புநூலிலகு மார்புமம்பதமு மூண்டெ
ருத்தின்மிசை தோன்றவே. (உஉ)

வந்துதேவர்புடை சூழ்ந்துநின் றுதுதி வாழ்த்திமாமலர்க ளேவேவே, சிந்தையன்பினொடி ராமனுந்துதிகள் செய்துகண் ணருவிபாய்தரத், தந்தைநீயதிக தாயுநீயடியர் தாழ்வுறாதருளு நீதிநீ, யெந்தையேகருணை வாரியேயெனவி றைஞ்சவேயி றைப்பி யம்புவான். (உங)

வேறு.

எம்மைநீ வணங்கும் பூசை யினைமகிழ்ந் தென்றுங் கொண்டோஞ், செம்மையி லிலங்கை வேந்த னிகலைநீ செயிக்கும் வண்ணம், வெம்முனைப் பகழி போக்கும் விசையகோ தண்ட மொன்று, தம்மின்வாங் கென்ன மன்னன் றாளினை தொழுதான் வாங்கி. (உச)

தொழுதமன னவனை நோக்கித் தோன்றுமித் தலத்தின் வீறு வழிபடுந் தியான ஞான வரம்புகண் டுயிர்கண் டண்ட முழுதுங்கா னலைப்போ லுர்கு மூர்த்திகள் சாலீப தன்றி யழகிய தவஞ்செய் திப்பூ வடிதொட்டோ ரெவருங் காண்பார்

இத்தன்மை யாகு மிந்த க்ஷேத்திரத் தியல்பாய் வந்த, மெய்த்தன்மை யானீ நாமும் வெளிவரக் கண்டா யென்ன, வுத்தம விராம னெங்கட் கொரு தெய்வ நீயே யென்ன,வத்த னு மகிழ்ந்தங் கன்னோற் கருள்செய்தவ் விலிங்கத் தார்ந்தான்.

மன்னவன் விடைகொண் டேகி வருதனி யிளவ லோடு மொன்னல ரிலங்கை வேந்தா மிராவண னுரிய சேனை, துன்

னிய வரக்கர் வியச் சிலைபிறைற் றுணித்து வென்றே, யன்ன
வன் றேவி யோடு மயோத்திமா நகரஞ் சேர்ந்தான். (உஎ)

இன்னவா றேயு கந்துக் கொருதர மெய்தி ராமன், பொ
ன்னவிர் சடையோ னுறைப் புனிதனைப் பூசித் தாங்கே, யன்
னவன் வரம்பெற் றேங்கு மனுதிபா மித்தலத்தைச், சொன்
னவர் கேட்டோர் யாருந் துன்புறா தருளிற் றோய்வார் (உஅ)

வேறு.

அதிக தலமா மித்தலத்தி லமல னிருக்கு மாலயத்துக்,
குதவு காத நான்கெல்லைச் சுற்று மாறை யுயர்தலமா, மிதனி
லொருநாள் வைகுமவ ரியாவ ரேனு மிருநிலத்தின், மதிமன்
னவரா யுலகாண்டு வருந்தாப் பதவி யடைவாரே. (உகூ)

வழியே நடந்து புகுவோரு மகத்தா மிந்தத் தலமிதித்
தா, விழிவுகுலத்து மரபினரு மெமதண் டனையில் லாதிற
ந்து, குழகன் சைவ நெறிதழைக்குங் குலத்தி லுதித்துச்
சிவபூசை, பழகி ஞானம் பகுத்தறிந்து பரம னருளைப் பெறு
வாரே. (௩0)

ஐந்து கடிகைச் சுற்றளவி லமிர்த லிங்கத் திருவுருவா,
மிந்த வெல்லை யினிற்பசித்தோர்க் கினிதோ தனமீந் தருநீர்
ப்பேரா, ரந்த வழகா புரியளிக்கு மாற்றற் குபேர னெனவாழ்
ந்து, சொந்த மான சிவகணமாய்த் தொல்லோன் கைலை ய
டைவாரே. (௩௧)

வேறு.

எண்ணெய்பா னெய்யும் பாகு மிளநீரும் பழநீர் தேனுங், கண்ணைமா லாக்கிப் போற்றுங் கடவுளுக் காட்டி னோர்க்கு, மண்ணினி லதிக வாழ்வு மட்டிலா வளமும் பொங்குந், திண்ணமாப் பிடிக்க வல்லார்க் கிருமையுஞ் சிறப்ப தாமே. (௧௨)

அன்னமாச் சியவற் கங்க ளாற்பரைக் களித்திட் டோர்கட், குன்னிய கருமா மெல்லா முடன்கைமேல் வரவுண் டாகிப், பின்னிய மணம்வ ருத்தாப் பெரும்பத மடைய லாகுஞ், சொன்னவாக் கென்று மோங்குந் துணிந்தவர் பெறுவா ரந்தோ. (௧௩)

திருப்பணி விடைத்தொண் டாளாய்ச் செய்துண்மை திருந்தி நாளும், விருப்பொடு பணிவோர் வெள்ளி விமலன்ற னுருவ தாவ, ரொருப்படு முள்ளத் தாலே யுயர்கொடி விடையுஞ் சுற்றிச், சுருப்பணி யராவைத் தாரைச் சூழுவோர் திருமா லாவர். (௧௪)

மருவிய சோம வாரம் வரும்பிர தோட காலந், திருகுசிந் தனைகள் விட்டுத் தெய்வமே யென்று போற்றிற், கருதிய வெவையு முண்டாங் கருத்தினி லன்பு பூண்டு, நரிபரி யாக்கி னோரை நினைப்பர்பா னமனுஞ் சேரான். (௧௫)

சித்திரை விசுவோ ணத்தி லாறைமா நகரிற் றேற்றவைப், பத்தியாய்ப் பூசிப் போரைப் பரன்றன தாகக் கொள்வ, னத்

தனை யிடப மாத விசாகத்தி லனுகிப் போதாற், சுத்தமாய்ப் பூசை செய்வோர் சூழ்பிற வியினை மாய்ப்பார். (கடசு)

ஆனியுத் திரமா நாளி லாறைநா யகற்குப் பாலும், பானிய நெல்லி சேர்த்துப் பரிவினு லாட்டி னோர்கண், மேனிநற் சாரூ பத்தை மேவிவெண் கைலை தன்னிற், ஞானமா யுகஞ்ச துர்த்தி காலமுஞ் சார்வ தாமே. (கஎ)

ஆடியி லம்ம வாசை பௌரணை யத்தநாளிற், பீடுற விதியி னோடும் பெரியகோ தண்ட நாதர்க், கேடல ரிதழிப் போதா லியைந்துபூ சனைசெய் வோர்கள், வீடுபெற் றுயர்ந்து கற்ப மேவுவர் கைலை மீதில். (கஅ)

ஆவணி மூல நாளி லாண்டவர்க் கமல னார்க்குப், பூவியந் துரைக்கச் சாறு புகழ்பட நடத்தி னோர்கள், காவல ராகி வையங் காக்குமா மனுவாய் வந்து, மேவலர் போற்ற வாழ்ந்து விமலனற் பதத்தைச் சார்வார். (கக)

கன்னிமா தத்தி லொன்பா னுளினுங் கருணை வாரி, யன்னையாள் கொலுவின் பூசை யருந்திரு விழாவ மாமன், முன்னமா கமத்திற் சொன்ன முறைமையால் வழிபட் டோர்க, டன்னையே தேவ ரென்று வேதங்க டகவாற் சாற்றும். (சo)

அற்பசி விசுவி லெந்தை யுறைநயம் பதியீ சற்கு, நற்பசுத் திரவி யங்க ளைந்துநன் மந்தி ரத்தாற், பற்புல செபித்த

லோடுங் குசையும்பா னியமுங் கூட்டிப், பொற்புட னமிடே யித்தாற் புலனைலம் பெறுவர் தாமே. (சச)

கார்த்திகைத் திங்க டோறுங் கருணையா றையிலீ சற்குச், சீர்த்திகழ் நல்ல வில்வஞ் செலுத்திடி லருள்சேர் ஞானங், கூர்த்திடும் பிறவித் துன்ப மேலினிக் கூடா வண்ணம், பார்த்தருட் டிருக்க ணோக்குங் குருவருள் படைப்பா ரன்றே. (சஉ)

தனுமதி முப்பா னுஞ் சாற்றுமா திரையி னுஞ், புனிதமாச் சைவா சாரம் பொருந்தியே விதிப்பா மற், கனிவுறுங் கருத்தாற் பூசை காலகா லத்திற் செய்வோர், நனிவரைக் கைலை மேவி நண்ணுவர் கற்ப காலம். (சஙு)

தையமா வாசை பூசத் தாரகை தனிலீ சற்கு, மெய்ம்மையாய்ப் பூசிப் போர்கண் மிக்கசா ரூபஞ் சேர்வர், துய்யவாங் கும்ப மூரகச் சிவநிசி தோன்று நாளின், மையில்கூ விளமர்ச் சித்து வணங்குவார் சிவத்தில் வாழ்வார். (சச)

திங்கண்மீ னத்தின் மிக்க சிறந்ததோ ருத்தி ரத்திற் கங்கைவார் சடையி னுக்குக் கருத்தினாற் பூசிப் போர்கள் பொங்கிய சுழுனை மேராம் பொருணடங் கண்டோரின்பந் தங்கிய போக மார்ந்து தம்மையுந் தானே காண்பார். (சரு)

சந்தனக் குழம்பி லிங்கம் பொதிந்திடச் சாத்தி யிண்டை, கந்தமா மலரාற் சூட்டிக் கருத்துற வில்வஞ் சாத்திச், சிந்தையிற் றிருந்தி யெங்க டெய்வமே யாறை மேவு, மெந்தையேயிறைவாவென் பாரிறைவராயிருப்பர்தாமே. (சசு)

தும்பைநாண் மலர்கள வில்வத் தூயபத்திரந்து ளாயுஞ், செம்பது மத்தி னோடுந் திருந்துநல் லறுகு கூட்டிச், சம்புவுக் கர்த்த சாமந் தனிற்பொதிந் தாடல் செய்வோ, ரெம்பெரு மானே யாவ ரிருதயச் சுத்தி யோடும். (சஎ)

யாதவன் போற்று மாறை வள்ளலா ரெந்தை பூசை, யேதுவாய்க் கூடா முன்ன மினிதுண்பான் றன்னை யிங்கோர், பாதக னீயே யென்று வைரவர் பாசத் தாலே, யாதனை செய்து தன்னூ னருந்திட வடித்துப் பின்னும். (சஅ)

கட்டியே தீயில் வாட்டிக் காலங்கள் பலவும் போக்கி
வட்டவார் சடையான் றாதர் மறலிதூ துவரை மாற்றி
விட்டிவன் றன்னை வெள்ளி வரையினின் மேவச் செய்வார்
சிட்டராலயபூசைக்குமுன் னுண்பார்சிலருண்டாமோ. (சகூ)

ஆலயஞ் சேவைக் கோர்நாட் கொருதர மன்புள் ளாரைக்
கால்னு மணுகிச் சேரான் கதிகளும் பெறுவ ரெங்கள்
பாலலோ சனனு மாறைப் பதிவளர் சிவக்கொ ழுந்தைச்
சாலநாடோறும்போற் றுந்தவப்பயன்சாற்றற்பாற்றே. (ருo)

### வேறு.

மாதரையா ரெனப்பணிவார் மாதரையா ளத்துணிவார்
வேதனையு மிவரென்பார் வேதனையு ருரென்பார்
போதகனீ யெனப்புகுவார் போதகனு மெனத் தகுவார்
பாதகம லங்கவென்ருர் பாதகம லங்கழன்ருர். (௫௧)

தேசுபொடிப் பூசுரரே திரைகடல்சூழ் பூசுரரே
யாசில்கண்டி தரிப்பாரே யரன்புரியிற் றரிப்பாரே
யீசரெனச் சடையாரே யினியுருவச் சடையாரே
பாசவினை கடப்பாரே பதிபுணர்வு கடப்பாரே. (௫௨)

### வேறு.

இத்தலத் துண்மை சூத முனி யியம்பக் கேட்டே
யத்தல முனிவோ ரெல்லா மற்புத மெய்தி யாறை
நித்தனை வந்து பூசை நிரப்பினோர் காட்சி பெற்றுச்
சித்தமுமகிழ்ந்துதங்கள்செய்தவத்தலத்தைச்சேர்ந்தார். ௫௩

திருச்சிற்றம்பலம்.

## முற்றிற்று

ஆகச்சருக்கம் ௩க்குக்கூடிய திருவிருத்தம் ௧௦௫

# தீர்த்தவிசேடச்சருக்கம்.

அருந்தவச் சூதரெய்த வடிபணிந் தறவோர் கேட்பார், பொருந்திய சிவதலத்திற் புனிதமா நதிவிசேடந், தெரிந்தருள் செய்வீ ரென்னச் செப்புமாங் கவனுந் தெய்வ, மருந்தெனப் பிறவி நோயை மாற்றுமா நதியொன் றுண்டால். (க)

என்றவ னருளிச் செய்ய விருடியர் வணங்கிப் பின்னு, நன்றிவை விரித்துச் சொல்வீ ரென்றலு நகைத்துச் சொல்வான், றென்றமிழ்தேன் றுறை யெங்கோன் றிருகுத்த சன்னிதியின் முன்பே, யென்றுமுள் ளதுபா தாள வாகினி யியல்பா மங்கண். (உ)

கோசலை நாட்டு வேந்தன் றசரதன் குமார ராமன்
வார்சிலை நுனியாற் கும்ப முனிவரை வடபாற் குன்றிற்
பேசுமா தங்க மென்னும் பிறங்க னின் றதன்பால் வந்த
தாசகல் விக்கு மம்மா வருமந்த நதிய தாமால். (ங)

பண்டுள நதியோ டொன்றாய்ப் பரமனா லயமுன் வந்த
தண்டுறை நதியில் ராமன் மூழ்கித்தற் பணஞ்செய் தெந்தை
யண்டக்கோ றுறை யீசற் கரியபூ சனையுஞ் செய்து
தொண்டடிபணிந்துநின் றுவரமொன் றுகேட்டுக்கொள்வான்.

தப்பிலா மகத்தைச் செய்யிற் சாரூப மதனைச் சார்வா
ரப்பணி சடையார் பூசைக் கரியசா யுச்ய மாமால். (௧௩)

ஆலயத் தருகு தன்னி லமைந்தருள் கோடி தீர்த்தந்
கோலமாய் மூழ்கிற் காசி முதலிய கோடி தீர்த்தஞ்
சாலவே விதியின் மூழ்குந் தவப்பயன் பெற்று ஞான
மூலமாங் கதிவீட் டின்ப வனுபவ முற்றுந் தானே. (௧௪)

செஞ்சொலா னதிவி சேடந் தெரிந்தருட் சூதன் சொல்ல
வெஞ்சலின் முனிக்கு ழாங்கேட் டுய்ந்திட வியம்பி னீரென்
றஞ்சலி செய்து போற்றி யாறையம் பதியிற் சென்று
தஞ்சமா நதியின்மூழ்கிச் சம்புவி னருளும் பெற்றார். (௧௫)

தீர்த்தவிசேடச்சருக்க முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆகச்சருக்கம் ௪க்குக்கூடிய திருவிருத்தம் ௧௨௧.

# இராமர்பூசித்தசருக்கம்.

தவம்வி ளங்கிய நைமிசா ரணியமெய்த் தலத்திற்
றிவிய மாதவ ரிடங்களிற் கலப்புறுந் தெளிவா
லுவமை யின்றியோர் தவப்பெருஞ் சூதன்வந் துறமற்
றவன்களிப்புறவி திப்படி வணங்கியொன் றறைவார். (௧)

நிலந்த னிற்சிவ தலத்துமான் மியங்களீர் நிகழ்த்தப்
பலம்பெ றப்பண்டு கேட்டுளம் பவித்திர மடைந்தோம்
தலங்க ளிற்பெரி தாறையா மித்தலத் தகைமை
நலங்கொ டுக்குமவ் விசேடமுந் தெரிவுற நவின்றீர். (௨)

அத்த லத்தினிற் றேவர்கள் பூசிப்ப தன்றி
மெய்த்த வும்பெற மானிட வடிவர்கள் விதியா
லொத்த பூசனை செய்துபே றடைந்தவ ருரிமைப்
பத்தி சேர்கதை பகரெனச் சூதனும் பகர்வான். (௩)

வேறு

முந்து திரேதா யுகத்திலந்த மூர்க்கனா மிராவணனைச்,
ந்த வடர்ந்து விசயமுறத் திருமா லயோத்தியரையன்பாற்,
சாந்த மிகவா யுற்பவித்துத் துறவோன் விசுவா மித்திரனுந்,
ந்த வுரைகொண் டொருசிலை தனைவிற் குழைத்து மணம்
ணர்ந்தான். (௪)

அன்னாள் பலவு மகன்றதற்பி னயோத்தி வேந்த னிராமனுக்கே, பொன்னார் மகுடஞ் சூட்டுவனென் றொருநாட் பொருந்திப் புகன்றிடவு, மின்னா டேவி கைகேசி வேட்ட தலைவன் றரும்வரத்தாற், சொன்னாண் மகவென் பரதனுக்கே சூட்ட வேண்டும் முடியென்றான். (௫)

அடல்வேற் றோன்ற விராமனையு மடவி புகுவிப் பீரென்று, தடையிட் டுரைக்கத் தசரதன்முன் சாபவிதியா னொந்தளவி, லுடலும்பதறி நடுநடுங்கி யுடனே மூர்ச்சித் துயிர்விடுமுன், றிடவி விராம னன்னையவள் செப்பு மொழியாற் கானடைவான். (௬)

கானம் புகுந்து மிராமனொடுங் கமலை சீதைப் பெண்பாலும், மான பரவே விலக்குவனும் மற்றும் பிரிவாற் றாமையினோ, ரான குழுவுந் தெண்டகா ரணிய முடைந்து தெய்வநதித், தான முயர்கோ தாவிரியில் விருப்பா வீசர் தாள்பணிந்தா

விருப்பா வீசர் விடைகொண்டு மிக்கோங் கியகா ளத்திமலைப், பொருப்பும் பணிந்து பொன்முகலிப் புனலி றானம் புரிந்தங்க, ணிருக்கு மயில்வேற் கடம்பனையு மிறைஞ்சிக் கரையிற் சிவலிங்கம், பரித்த ராமீச் சுரனென்றும் பதிட்டை பண்ணிப் பணிந்தேத்தி. (அ)

அங்கனகன்று காஞ்சிநக ரேகாம் பரனை யும்பணிந்து, செங்கண் விடையா ரருணகிரித் தேவை யிறைஞ்சி விருத்த

கிரிக், கங்கை முடியா ரடிபணிந்து கனக சபையுங் கண்டிறைஞ்சிப், பொங்கு வளஞ்சூழ் திருவாரூர்ப் புற்றீ சரையும் போற்றிசைத்து. (௯)

வேறு.

இடைமருதூ ரிறையவனை யிறைஞ்சி யேத்தி யெழிற் குடந்தை நகரீச ரிணைத்தாள் போற்றிச், சடைமுடியா வடுதுறையார் சரணம் போற்றித் தருங்கைலை யையாறர் தம்மைப் போற்றி, விடையூருந் தவத்துறைமேயப பொருளைப் போற்றி மிக்ககா விரித்துறையில் வியந்து மூழ்கிப், பொடியணியும் பொன்னுவலானைக் காவிற் புண்ணியனை யடிபணிந்து புகழ்ந்து போற்றி. (௧௦)

வேறு.

சம்புகேசுர ரானைக்காவினிற் சனகியுஞ்சிலை ராமனு
மம்புவார்சிலை யிளவல்பன்னக சாலைகட்ட வதன்கணத்
தம்பிகாவலு மாகவேசில நாளிருந்தனர் தகாதவாய்
வம்புபேசு மரக்கியைமுலை வாசநாசி யரிந்தனர் (௧௧)

வேறு.

அங்கபங்க மானபின் புரக்கிசூர்ப்ப நகியவண்
பொங்குவேக மாய்த்திரிசி ராவுடன் புகன்றிடச்
செங்கணங்கி சிந்திடச்சி னந்துதுன்று சேனையோ
டிங்குராமர் மேற்சமரெ திர்ந்துவாளி தூவினர் (௧௨)

அம்புமாரி சிந்துபோது மந்தராமர் சிந்தைதான்
வெம்புறும லேதிருச் சிரர்ப்பளி விமலனார்
தம்பத நினைந்துவெள்ள மேழிரண்டு தானையு
மும்பர்நாடு சேரவேயொ ரத்திர முடுக்கினார். (௧௩)

வந்தசேனை யாவையு மடிந்தசேனை யாக்கியே
சிந்துகா விரிப்புனல் சிறந்துமூழ்கி யன்பொடு
மெந்தைதாயு மீனாரை யிறைஞ்சியா மதுரையிற்
சுந்தரேசர் மாமலர்த் துணைப்பதம் வணங்குவார். (௧௪)

வேறு.

ஆலமன் றமரர்க் காக வமுதுசெய் தருள்வாய் போற்றி
காலனைக் காலாற் காய்ந்த கருணையங் கடலே போற்றி
பாலனும்பால்கொண்டேத்தப்பரிந்தருள்புரிந்தாய்போற்றி
சூலபா ணியனே கூடற் சுந்தரா போற்றி யென்று. (௧௫)

தேற்றமாய்க் கூடல் மேவுந் தேவனை விடைகொண் டப்பாற், றோற்றிய பரங்குன் றத்திற் சுரர்சிறை விடுத்த வேளை, யேற்றமாம் பொருளே யென்றென் றிணையடி தொழுது தென்பா, லாற்றனற் குடிகண் மேவி யமர்வில்லி புத்தூ ருற்றார். (௧௬)

வேறு.

வில்லிபுத் தூரினில்வந்து மேவுநா
ணல்லதோர் பன்னக சாலை நன்குற

வொல்லையிற் கட்டியே யோது பற்பல
வல்லநா ளிருக்கமற் றிலங்கை மன்னன்பால். (கஎ)

வேறு.

தங்கைசூர்ப்பநகி வந்துவேண்டுகுறை சாற்றவஞ்சனை செயுந்திறம், பொங்குவேகமொடு மாயமானுருவு போக விட்டதொர்மா ரீசனு, மிங்கிதாகுமென விவ்விருக்கையினி லேகினானிவனை நேடவும், பங்கயாசனமி னிராமர்தேவி மலர் பற்றிடும்பொழுது காண்குற. (கஅ)

கண்டுசீதையு மிலங்குமானிதெனக் கண்டதில்லையிது போலென, விண்டிராமனுட னேவிளம்பியிது வேண்டு மென்றது விரும்புறக், கொண்டராகவனும் விற்பிடித்தொரு கை கோனிறைத்தபொதி தூணிகொண், டெண்டிசைக்கு மிகுதிண்புவிக்குமினி தினியதென்றுமறிதலைவிடான். (கக)

வேறு.

அந்த மான்மறி சற்றகன் றகப்படு மாபோன்
முந்த கன்றெழு மாயையின் விறலை முயன்ற
விந்தை யோவெனக் குறுநகை கொண்டதை விரைந்து
சிந்தைமால்கொடுராமனுந்தொடர்ந்துபின்செல்வான். (உ0)

வேறு.

சென்றுயர்ந்ததென் னுறையின்கண்வந் தெய்து போது திவாவினி, லன்றுநாழிகை பத்திரெட்டட னுகு

நாழிகை யாகவு, மொன்றுதாகம் வருத்துபோதினி லுதக மங்க ணிலாமையா, னின்றிராமனக் கானகத்திடை நீர்வரக் கருதி நேர்வனுல். (உக)

வேறு.

அப்பொழுது பொதிகைவரைக் கடுத்த தாயோ ரானை மலை யெனும்வரையி னடிவா ரத்திற், றுப்புரவா ரகத்யமடுத் தீர்த்த மொன்று தோன்றுநா ளியல்புடைய சுனையி னின்று, மொப்பினதி வெகுமுகமாய்த் திரையு முத்து முயர்விருக்கம் பலதிரட்டி யொலித்து வெள்ளஞ், செப்பரிய வேகமொடு வந்த போது சீராமன் மூழ்கிமுறை செய்வா னன்றே. (உஉ)

நித்தியமாங் கர்மானுட் டானத் தோடு நேர்ந்தபிதிர் தர்ப்பணமு நியதி செய்து, வத்தியெனும் யானைநதி யென்று நாம மவன்மகிழ்ந்து வியந்துநதிக் கடைவே சாற்றிச், சித்தி தரும் புண்ணியமு மநேகங் கோடி சேர்ந்திடவுந் தீயபவந் தீர்க வென்றும். பத்தியொடு மிந்தநதி படிந்தார்க் கென்னப் பரன ருளா லசரீரி பகர்ந்த தன்றே. (உ௩)

பகர்ந்தமொழி நமதுதிருக் கோயின் முன்பு பண்பாக வரலா று பகர்ந்த நீடு, முகந்தழைத்த படியாலும் புண்ணியமா நதியா முனதுவிருப் பேகமக்கு மொத்த தாலே, சகந்தனிலே யிந்தநதி படிந்தா ரியார்க்குந் தப்பாதிப் படிப்பேறு தந்தோ

மென்னப், புகழ்ந்திரா மனு மற்பு தங்க ளெய்திப் போற்றி நிற்க யானை நதி புகுதுந் தென்பால். (உச)

சித்திரா நதியு நிறை கும்ப யோனி திகழ்கரகத் துறுந் தாம்ப்ர பன்னி யுஞ்சேர்ந், தத்திநதி யுடன்கடலிற் போந்த தாலே யந்தவா ருதிதனக்கு மப்பே ராகு, நித்தியமாஞ் சிவ பூசைக் கரசி ராம னெறியினெடும் பூசனைக்கு நினைந்தன் பான், சத்தியதி யானமுறைப் புரியுங்கேலை தகைமைவள ராறையிறை தரியா தங்கண். (உரு)

புவனுதி யரிபிரமற் கெட்டா நின்ற பூரணனே திருமே னி பொலிந்து தோன்றிச், சிவமான குறியமிர்த மயமாயன் பர் சிந்தையுளே நின்றுருக்குந் தெளிவா மிக்க, தவமுடிவின் பயனுகி நோக்க நோக்கச் சானித்ய வருளாகித் தழைத்துப் பொங்கி, யுவமையின்றிக் கருணைபொழிந் திலங்கு மேனி யோதரிய சிவலிங்க வொளியாய்த் தோன்ற. (உசா)

கண்டுவரி சிலைராம னழுதுளறிக் கூயென் கற்பகமே யொளியுதவுங் கண்மணே நாளு, மண்டுபெருங் காதலடி யாருள் ளத்தில் வளரொளியே மெய்யருளின் வாழ்வுள் ளானே, தொண்டரிடுக் கண்டரியாக் கருணை யானே சோதியே யினிமையுவல்லி பாதி யானே, அண்டரயன் முதலோர்க்கா யாலமுண்டோயடியனேற்கருள்புரிவா யையாவென் றும் (உஎ)

### வேறு.

போற்றிசைத்துச் சிவபூசை யன்பாய்ச் செய்யப் பூசை
யுபகரணங்கள் பொருந்தியமைத் தங்கணுற்றுநதி மஞ்சனங்
கொண் டபிடேகித்தா லதனில்வரு புற்புதங்க ளனுசிதமெ
ன்றெண்ணித், தோற்றுவட கங்கைநதி யீண்டுவர வேண்டிச்
சொற்பெரிய வயிர்தலிங்கந் துணைத்தாள் போற்ற, வாற்ற
லுடன் கார்முகங்கொண் டாலயத்துட் டென்கீழ் மூலைதனி
லூன்றுகின்றா னந்த வேலை. (௨௮)

தனுவூன்றப் பெருங்கூப மொன்ற தாகிச் சாலவுமக்
கங்கைநதி தானே பொங்கி,மனுவேந்தன் றனக்கெதிரே வாரி
யெழு மாபோல் வருவதுகண் டென்றரத்தால் மிக்க பத்தி,
யினிதடங்கி மட்டளவி லமையவென வேண்டி யிசைச்சுமந்
துப் படியடங்கு மினிய கங்கை, நனியகங்கை வருப்பொழுது
கோடிநதிவர்லானுமகரணங்கோடிதீர்த்தமெனநவில்வார்.

### வேறு

சித்தங் களித்து வியர்கந்தத் திருமஞ் சனங்கொண்
டபிடேக, மத்த னமிர்த லிங்கருக்கண் டமைத்து விதியின்
முறையாட்டிப், பத்தி யுடனே பொன்மலரும் பாலா மெருக்
கோ டெண்மலருஞ், சுத்த மாக வருச்சித்துச் சுவைப்பா
லமுது நிவேதித்து. (௩௦)

விதியாற் றாப திபங்கள் விழைவாற் கொடுத்து மிகு மம்பா, னதிநீ ரகநெற் றனமூன்று நாதனிடத்து நயந்த ளித்தது, மதிசேர் சடையா யமிர்தலிங்க வாழ்வே யடியார்க் கெளியபசு, பதியே யெனையா ளுமைபாகா பரனே யர னே யென்றென்றும். (௩௧)

வேறு.

ஐந்துதிரு மணிமுடியு மைந்துதிரு முகமு மைமூன்று திருவிழியு மையிரண்டு கரத்து, முந்தியரு ளப்படையும் வச் சிரமும் வாளுஞ் சூழுமழு வபயமுமோர் வலக்கரத்தி லிலங் கத், தந்தவிடப் பணியினொடு பாசமொலி மணியுந் தழலுங்கூ ரங்குசமுந் தரித்தவிடக் கரமும், வெந்தபொடி முண்டக மும் விளங்குபர்பான் மேனி மெய்ப்பதமுந் தியானித்து மிக வேண்டிக் கொள்வான். (௩௨)

வேறு.

சந்திரசே கரவெங்க ளர்க்கரு ரீச தவளவிடை வாகன னிருத்தகலி யாண, வெந்தையருள் பிட்சாடா காமபுர தகன வெமனையுதைத் தருள்கங்கா தரபரனே யுரித்தோய், சங்கர னம் வீரபத்திரா வரியாகி நாதத் தொழில்வேட கங்காள சண்டப்ர சாத, மூர்த்தியா லம்பொசித்தோ யரிக்காழி முயன்றோய் மூர்த்திவித்தி யேசுரருக் கருளுமாற் கந்த. (௩௩)

## வேறு.

அரிய பாதத் தொருவசுக் காசனு
பரிய தெட்சனு மூர்த்தியிவ் கோறபவா
பெரிய மாதுமைப் பெண்ணை யணைந்தவா
விருவர் தேடு மபிர்தலிவ் கேசனே. (௩௪)

என்னுந் தோத்திர மின்பமன் பாலெழுந்
தன்ன பேரருளெயடி யேனுக்கு
முன்னின் றுண்டரு ளென்ன மொழிந்திடு
மன்ன னுக்கு மகிழ்ந்து கருணையால். (௩௫)

## வேறு.

காதனு ரமிர்த லிங்கர் நதிமதிச் சடையுஞ் சங்கக்
காதணி குழையு ஞானக் கருணைமா முகமு மும்மைச்
சோதியாம் விழியுங் காள கண்டமு நான்கு தோளும்
பாதியாளுமையுஞ்செம்பொற்பாதமும்பரிந்துதோன்ற. (௩௬)

தேவரு முனிவர் தாமுந் தேவர்க டேவுந் தாருக்
காவரு மலரின் மாரி சொரிந்துபார் கலந்து சூழக்
கோவதி கார மாலு மயனுங்கை குவித்து நிற்பத்
தாவுவெள் விடைமேற் காட்சிதரவெழுந் தருளி னரே. (௩௭)

கண்டுசென் னிமின்மேற் கைகள் குவித்திரு கண்ணீர்
வார, மண்டிய கர்த லோடும் பரவச மாகி மன்னன், கொண்

டவா னந்த வாழ்வின் மொழிகளுங் குழறி யன்பாற், பண்டு
மற் றின்று மென்று முள்ளமெய்ப் பத்திற் றூழ்ந்து.(கஅ)

சங்கரா போற்றி யெங்க டாணுவே போற்றி யாடற்
பொங்கர வங்கை மீது கங்கணம் புனைந்தாய் போற்றி
யெங்களுக்கிறைவா போற்றி யெளியவர்க்கெளியாய் போற்றி
கங்கைசூ ழாறை மேவுங் கருணையங் கடலே போற்றி.(கக)

மின்னவிர் சடையாய் போற்றி வேதண்ட வில்லாய் போற்றி
சென்னிதன் மகவையூரச் சிந்தையி ரளித்தாய் போற்றி
மன்னிய கடுக்கை மாலை மார்பனே போற்றி தாவி
யுன்னுமான் கரத்தா யும்பூ னதியிணை யுடையாய் போற்றி(ச0)

சம்புவே வாசி யாக்குஞ் சம்புவே தருவே போற்றி
யும்பர்நா யகனே போற்றி யுயர்வெள்ளி வரையாய் போற்றி
செம்பொனே மணியே யெங்க டெய்வமே சிவமே போற்றி
நம்பனே யாறை மேவு ஞானவா ரிதியே போற்றி. (சக)

சொற்பதங் கடந்த ஞானச் சூட்சியே துணையே போற்றி
யுற்பல பதத்தாய் போற்றி யெம்மையா ளுடையாய் போற்றி
பற்பல வுயிர்கட் கெல்லாம் புருவம் பார்த் தருளு மூல
வற்புத வயிர்த லிங்க வரும்பெரும் பொருளே போற்றி.(சஉ)

### வேறு

என்று மன்னன் றுதித்தேத்த விறைவ ரமிர்த லிங்கேசர்
நன்றுன் பூசைக் குதிமகிழ்ந்தோ நலமி லரக்க னிராவணனைச்
சென்று நீயே சிரம்பத்தும் செகுத்தல் வேண்டும் விதியதனு
லன்றுவேண்டிங்கோ தண்டமளித்தோமிப்போதுனக்கென்ருர்,

தொழுது, வேந்தன் கோதண்டம் வாங்கிச் சூழ்ந்து துதித்தேத்திப்," பழுதா ருமலமையாளும் பரிசா மிதுவென் றடிபணிந்தே, யிழுதை யேற்குக் கோதண்ட மியைந்தா யெந் தா யுன்னுமம, மழகு சிறக்கக் கோதண்ட ராம லிங்க மாமெனவே. (௩௪)

வேண்டிக் கொள்ள நாதனுமுன் விருப்பே நமக்கும் விருப்பென்ன,மீண்டு வணங்கி மன்னவனும் விளம்பு நாமத் துதிவிரும்பி, யீண்டிங் கெமையாள் கோதண்ட ராம லிங்க மெனவிசைந்த, பாண்ட ரங்கா பரஞ்சோதி யென்று போற் றிப் பலதுதிப்பான். (௩௫)

நீறணி பாலா போற்றி நீள்சடை முடியாய் போற்றி
யேறுகே தனத்தாய் போற்றி யிமயுமா திடத்தாய் போற்றி
யாறையம் பதியின் மேவு மாதியே யுருளே போற்றி
கூழுமஞ் செழுத்தாய் நின்ற கோதண்ட நாதா போற்றி (௩௬)

வேறு.

எடுத்துப் போற்றுந் துதியுமகிழ்ந் திறைவ ரவர்க்கு விடைகொடுத்து, அடுத்த சோதி யிலிங்கத்தி னமர்ந்தா ரன்ன மன்னவனும், தொடுத்த கருமச் செயன்முடிக்க மறிமான் றேடித் தொடர்வனெனக், கொடுத்த சிலையுங் கொண்டுவிடை கொண்டு நடந்தான் குடதிசையில். (சஎ)

மேல்பா லடுக்குந் தென்பாலின் விரைந்து நாடி யம்மானின் பாலிற் செல்ல மறிமானும் பற்றி நிருத்த புரிநகர்ப்பாற் காலின் விசைபோன் மாரீசங் காட்டிச் செல்லக் கனன்றுகரக் கோலத்திரங்கொண்டெய்யவுமாரீசன்குறைபட்டுயிர்விடுமுன்.

பாரி லாதிப் பெருமானே யிவனு மென்னப் பலதுதிப்பான் சீரா மாபாற் கடன்மீது சேர்ந்த வறிவாற் றுயில்கொண்ட வாராவமுதேயென்னுசைப்பொறுப்பாயடியேன்றனைக்காப்பாய் தாரார்கமலக்கண்ணுடையாயிராமாசயிலக்குடையானே (சகூ)

மாயா வல்ல மணிவண்ணு வாசு தேவா வளைதரித்த, தூயா விரிஞ்சன் றனையளித்த தொல்லோய் கருடக் கொடியுடையாய், சேயா யயோத்தித் தயரதற்குச் செனித்தோய் கிரிப் பண்டயானே, வேயூ திய்ரா கவமுகுந்தா வெற்றிப் படையைக் துடையானே. (௬0)

திருமா மடந்தை மணவாளா தேவர் முனிவ ரியாவர்களும்
பரவு மரிய பொருளானே பணிமே லணையுஞ் சயனத்தாய்
பெருவாழ் வுடையாய் வைகுந்தப் பேரா ளாசீ தரராமா
கருமாமுகில்போன் மணிவண்ணாகண்ணாவெங்கள்காவலனே.

என்னுந் துதிகள் மாரீச னியம்பி யடியேன் செய்தகுறை
தன்னைப் பொறுக்க வேண்டுமெனத் தாழ்ந்து நலமே தருகென்னப்
பன்னுந் துதிகள் பலபோற்றப் பரிந்த கருணை யாலவனை
மன்னன் பார்த்தானவனடைந்தான் மற்றையந்தமால்ராமன் ()

திருத்த ராச புரிமானை நிறையம் பலத்தோர் நிர்மலனைக்
கருத்திலிருத்திக்கரணங்களொருப்பாடெய்திக்களிப்போடும்
பெருத்த பேரா லயமுன்பு வந்து பணிந்து பேரன்பாற்
றரைக்குளதிகசிதம்பரமுமிதுவேயென்னத்தகுமொழியால்.

வீழ்ந்து பணிந்து பிதக்கணங்கண் மிகவுஞ் சூழ்ந்து வே
தமுறை, யாழ்ந்த சிந்தை யகங்குளிர வன்பா லுருகி யானைச
யொடும், வாழ்ந்து களிப்பாய் மாதவத்தில் வலிய புலிக்கான்
மாதவனுஞ், சூழ்ந்த வுரகப் பதஞ்சலியுந் துதிக்க நடிக்கும்
பதந்துதிப்பான். (ருச)

### வேறு.

மனந்திருந்து மின்னசபை வாணு போற்றி மயலோ
ட்டும் கனகசபை மணியே போற்றி, கனிந்தனிர சதசபை
யில் வழுதிக் காகக் கான்மாறி யாடமருட் கடலே போற்றி,

யனந்தநடம் புரிதாம்ப்ர சபையா மெல்லை யரியதவத் துரி யநட மாடும் போற்றி, தினந்தவோ கிட்டையர்வாழ் திரிகூ டத்திற் சித்ரசபை நடராச தேவே போற்றி. (ருரு)

திருவாலங் காடுசிதம் பரம்வெண் காடு திகழ்பாரி சாத திரு வனத்தினுட னொரு, ரிருமைதருந் திருவால வாயும் பா தா ளீச்சுரமு மிடைமருதூ ரெழிற் குடந்தை நகரு, மரிய தல மாகுமிவை நவதலத்தி னடன மதிகநவ தாண்டவமும் புலிபாம்புந் தொழுவே, பெருநடன மிம்மானை யொன்றாகப் பத்தாய்ப்பேசுவதாமம்பலத்தின்பெருமைதிகழ்போற்றி.(ருசு)

## வேறு

இம்முறைமை மானைநக ரெம்பிரா னிணையடிக ளிறை ஞ்சி யிப்பாற், றம்முடைய கோதண்ட ராமலிங்க ராறைநகர் தன்னிற் சார்ந்து, செம்மைபெறத் தமியேற்குக் கோதண்ட மளித்தருளுந் தேவே யென்றென், றெம்மையா ளுடையவ னே கோதண்ட ராமலிங்கா வென்னப் போற்றி. (ருஎ)

ஆறைநகர்ப் பதியகன்று வடமேலாம் புலம்புன்னை யடர் பூங் காவி, லீறுமுடி வில்லாத வெந்தைபிரான் சிராசை பிறையோன் றன்னை,மீறுதவப் பயனாலே தெரிசித்து விடை கொண்டு வேழம் போற்று, நீறணிநம் பால்வண்ணர் தமை யுணங்கி நீங்கிவட நெறிபோம் போழ்து. (ருஅ)

அங்கணேற் றடிவிளங்குந் தெய்வத்தா னப்பொருளை
யன்பாற் போற்றிக், கங்கைவார் சடைமுடியார் புதல்வவ
யூத் தியநாதர் கழலும் போற்றிப், பொங்கிமிகு காதலினால்
வில்லிபுத்தூர் புகுநெறியிற் போந்த வேலை, செங்கைவிலி
பிள்ளையோனுடந்தெதிரேவந்துமொழிசெப்புகின்றான். (௫௯)

வேறு.

அய்யனே நின்றேவி யவரை யிங்கே யரக்கனிரா வண
ன்மாயை யாக வந்து, பொய்ம்மைதரும் மாயையபல வியற்
றித் தேரிற் புகவைத்துக் கொடுபோனான் போனானென்று,
துய்யபதத் தாளிணையின் முறையாற் போற்றித் துயரமிகப்
படைத்து வாய் புதைத்து நின்று, மெய்ந்நடுங்கக் கண்ணீ
ருந் துளிப்ப நெஞ்ச மிகப்புழுங்கி யழுதுரைக்க வேந்த
செல்வான், (௬௦)

தம்பிநீ மனக்கோட்டப் படுவதென்னே சலராசி கட
லிலங்கை தனைத்துள் செய்து, வம்பரக்கன் றனைச்செருக்கு
மிக்கோர் தண்ட வரலாறு கேளெனவே வகுத்துக் காட்டி,
வெம்புவதென் னுள்ளவினை விடுவதுண்டோ விரைந்திலங்கை
மேற்சமரம் விளைப்பேமோ மென்றே, யும்புவியிற் பயிற்
படைக் கலன்கள் கைக்கொண் டாறையினி லிருவரும்வ
தடைந்தா ரன்றே, (௬௧)

வந்தடைந்த சிலைராமன் றம்பி யோடு மாதங்க நதிமூ
ழ்கி மலையில் லானை, யெந்தையே கோதண்ட ராம லிங்கா
விகன்மாய்க்குங் கோதண்ட மீந்த கோவே, சிந்தையுறு
கொள்கையெலா முடிக்க வல்ல தெய்வமே யெனத்தொழுது
விடைகொண் டப்பான், முந்துதென்பாற் சித்ரநதி மூழ்கி
யெங்கண்முதல்வர்கயிலாசரையுமுறையாய்ப்போற்றி. (சுஉ)

வேறு.

ஏத்தித்தென் புலத்திற் றும்பர் பன்னியி னிருவர் மூழ்
கிக், கூத்தநெல் வேலி யீசன் குரைகழல் கும்பிட் டேத்தி,
வாழ்த்தியப் பாற்செந் தூரில் வதனவா ரம்ப மூழ்கிக், கார்த்
திகை யனைய ராறு கைகளைப் போற்றல் செய்வான். (சுஙு)

வேறு.

அயில்வேலா வாறுமுகத் தையா போற்றி யகத்தியமா
முனிக்கருளு மடிகள் போற்றி, மயிலூர்தி மலைதகர்த்த
வடிவேலானே மலர்க்கடப்பந் தாரணியு மார்பா போற்றி,
கயிலாச பதியருளுங் கண்ணே விண்ணோர் காவல்சிறை மீட்
டுமெங்கள் கந்தா சந்தச், சயிலாவன் சூரடர்க்குந் தலைவா
போற்றி சரவணப வாமந்த்ரி தலைவா போற்றி. (சுச)

திருப்பரங் குன்றுறையுந் தேவே போற்றி செந்தினகர்
கோகாச்செவ் வேளே போற்றி, விருப்பொடா வினன்குடியு

யிருப்பாய் போற்றி விளங்குமே ரகத்தமரும் விமலா போற்றி, சுருப்பலர்பூஞ் சோலைமலைச் சுவாமி போற்றி தோன்றுநெடுங் குன்றுதோ றுடல் போற்றி,மருப்பொன்றுற் பாரதமே ருவினிற் றீட்டும் வள்ளலாற் குற்றதுணை வலியாய் போற்றி. (௬௫)

இந்த்முறை பலபோற்றி விடையுங் கொண்டே யிதறகப்பால் வடபுலம்போ யீச வென்று, நந்தமையும் புரகருமுத்ர கோச மங்கை நாடறிபு மூதூரை நாடிக் கோயில்,வந்து மங்க ளேசுரனைப் பணிந்து போற்றி மாயர்திருப் புல்லாணி வழியிற் கூடிக், கொந்துறுடைக் கடல்சூழ்ந்த தானை யோடுங் குவவுத்தோட் படைத்தலைவர் கூடப் போந்தார். (௬௬)

வாரிதியின் கரையினடைந் தூகத் தாலே மலையரண்கள் பிடுங்கியணை வளர்த்து முன்பே, நாரவாரிதிகடந்தோ ரிலங்கைக் கும்போய் நனியடைந்த வனுமான்சொ னயந்து கேட்டுப், போர்புரியும் வகைவிபீ டணனுஞ் சொல்லப் பொருசிலைவே லிராமனிளை யவனு மற்றைச், சூரர்படைத் தலைவர்களு மிலங்கை மூதூர்ச் சூழலிற்போய்ச் சமர்செய்யத் தொடங்கும் வேலை. (௬௭)

வேறு.

இலங்கையிரா வணன்புதல்வ னிலக்கணனோ டிவன்முனிந்த்ரசெயித் திருவர்பொரு திறந்தனர்கள் மூல, பெலங்களு

டன் கும்பகர்ணன் பெரும்போர்செய் திறந்தான் பின்னுமிக விராவணனும் பெருமாக மடைந்தான், துலங்கவரு மிகு வெள்ளச் சேனையொடுந் தோன்றிச் சூதமரிற் பெரும்படை யைச் சிலைராமன் றுணித்துத், தலங்களினின் றண்டமுக டார்க்குங்கோ தண்டச் சரத்தி லவன்றலையைத் துணித் துளான் சமரில். (சுஅ)

சிலைராம னத்திரத்தா லரக்கர்குல மறுத்துச் சிறந்த புகழ் விடணன்முன் சேர்ந்ததுணை யதனூற, றலைவனிலங் காபுரிக்கு மரசிவன்று னென்று சாற்றியோ ரரசாட்சித் தன்மையவற் கீந்து,அலைகடலைக் கடந்துசெல்வோ மெனமிக ழ்ந்தி ராமனை னோவோருந் திரண்டுவர வருந்ததியை நேரு, நிலைபெறுகற் புடைமனைவி சீதையினை யோனு நிறைந்திடுசே னைக்கடலு நீழ்கடலுங் கடந்தார். (சுகூ)

வேறு.

கடற்கரையின் முனமுற ராமன் மனக்களிப்பா
லடற்றனுவின் கோட்டிரு லமைத்தபெருந் தீர்த்தந்
தடப்புனித காசிகதி தன்னையவ னின்றே
வடித்தெடுக்கும் பூசனைக்கு வேண்டிவர வழைத்தான். (எ0)

வேறு.

தனுவின் கோட்டா லுதித்ததனுற் றனுக்கோ டியு தார் தீர்த்தத்திற்,புனிதமுறவே ஈனமனுட் டர்க் கிரியை

புரிந்துளத்தி, லினியசிவனைப் பிரதிட்டை யியற்றிப் பூசை
விதிமுறையாற், கனியுமனத்தாற் செபமுமுள்ளக் கனிவான
முடித்துக் கழல்பேணி. (எக)

வேறு.

எந்தையே யிராம லிங்க மென்றொரு திருப்பேர் சாற்றி
முந்தைக்கோ தண்ட மீந்த முதல்வரு மிவரென் றேத்தி
யந்தமி லிலங்கை சேரு மரக்கரை யழிக்கும் வண்ண
மெந்தமக்கருள்செய்ராமலிங்கமேயிறைவாவென்று. (எஉ)

சேதுவி னெழுந்த வெங்க டெய்வமே சிவமே போற்றி
பாதுகாத் தெம்மை யாண்ட பசுபதி பரமா போற்றி
காதணி குழையாய் நீலக் கறைமிட றுடையாய் போற்றி
கோதிலாவமுதேயெங்கள்குரிசிலேபோற்றியென்று. (எங)

பற்பல துதிகள் செய்து பரமரை விடைகொண் டிப்பாற்
பொற்புறு கைவேல் ராமன் றம்பியும் புவியின் மிக்க
கற்புறு சீதை மாதுஞ் சேனையுங் கடந்தவ் வாறு
சொற்புகழயோத்தி யின்பாற் றோன்றினா ரண்டு ளோர்கள்.

பூரண கும்பம் வைத்துப் புதுநறுஞ் சுண்ணக் கோலஞ்
சீர்பெறத் திட்டிப் பொற்பாற் றிருநெடு வீதி யின்க
ணாரண முழங்க வாத்ய மவ்வயவை கறங்கிப் பொங்கத்
தேரினி லேறிப் போந்து சென்றனன் றேவர் போற்ற.(எரு)

பரதனு மெதிர்வந் துற்றுப் பாலாவுங் கன்று மொப்ப
விரவியே பணிந்து நிற்ப யாவரும் விரும்பி மொய்ப்பப்
புரவலர் திசைக ளுள்ளோர் பணிந்துவாய் புதைத்து நிற்ப
வரமதி யமைச்சர் தாமு மொருபுடை பணிந்து நிற்ப. (எசு)

ஆலத்தி யெடுப்ப வாழ்த்தி யரசர்வாழ்த் தொலியெ டுப்ப
வேலப்பூங் குழலா ராட லிசைக்குல முழக்க மோங்கப்
பாலிரு மருங்கு வானச் சிலம்பிகள் பயிற்றி நிற்பக்
கோலப்பூங் கொடியின் றூடுங் கொலுவுமண் டபத்தைச் சேர்ந்தான்.

சேர்ந்தபின் மகுட ரத்னச் செம்பொன்மா முடியுஞ்
சூட்டி, வாய்ந்தநூன் மருங்கிற்சீதைமாதொடுமரசுங்காப்பா,
ஞய்ந்தநல் லறிவு கூர்ந்த வரசினத் திளவ லாரோ, டேய்ந்து
பல் கால மோங்கி யிருந்தன னுலகம் போற்ற. (எஅ)

வேறு.

குன்ற வில்லிநங் கோதண்ட ராமலிங் கேசர்
மன்றன் மாமலர்ப் பூசையால் வாய்ப்பதிவ் வளவோ
வின்று மாதவ முனிவரே கேட்குதி ரென்னச்
சென்ற சூதர்சொன் முனிவர்கள் கேட்டுளஞ் சிறந்தார். ()

திருச்சிற்றம்பலம்.

**இராமர் பூசித்துப் பேறடைந்த சருக்கம் முற்றிற்று.**

ஆகச்சருக்கம் ௩-க்கு கூடிய திருவிருத்தம் ௨௦௦.

# அனந்தகுணபாண்டியன் வந்து பேறடைந்த சருக்கம்.

சூதமா முனிவ ரெய்த முனிக்குழாந் தொழுது நின்று
சோதிகோ தண்ட லிங்கர் துணையடி பூசித் தின்னம்
மாதுமை சிவமு மொன்றாய்ச் சிவலிங்க வடிவிற் கோலங்
காதலாய்த் தெரிசித் தோர்கள் கதைவிரித் தருள்வீ ரென்ன.

அன்னமா முனிவர் கேட்ப வாரண வறிவிற் றேர்ந்த
மன்னுமா மகிழ்ச்சி யாலே மாமுனிச் சூதன் சொல்வான்
றென்னிலந் தன்னி லெங்கள் திராவிட முனிவ னெல்லைக்
கின்னிலம் வடபா லாகு மெழில் வில்லி புத்தூ ரென்பாம்.()

தரணியி னுயர்ந்த கோட்டைத் தரணிவந் தணுகி யோங்கும்
அரணமு மகழு நீண்ட வாயிலு மதனுக் கேய்ந்த
விரசத நிலையும் வாரி யிரணியத் தாகு மிந்து
கிரணமும் விலகிக் காட்டுங் கேதன மேடை யோங்கும். (௩)

மாடமா ளிகைய ழங்கன் மகிபதி கோயில் வாயிற்
கூடகோ புரமும் வெற்றிக் கொடிகளுந் துவண்டு வீச
மீடுசேர் மதமா தங்க மிரும்பெனக் குரக தங்க
ளோடிய தண்டச் சூழல் வேகத்தி னூடு தாவும். (௪)

மந்திரித் தலைவர் வேத மறைவல்லோர் தாமு மற்றுந்
தந்திரக் கணக்கர் தாமுந் தமிழ்ப்பல வல்லோர் தாமுஞ்
சந்தகுந் தளமா ருநுங் கவினியற் பாட லாடற்
சுந்தரக் கொலுமா டத்திற் றுலங்கர சாட்சி செய்வான். (ரு)

அந்தமா மனு நாற் புல்லி யாறிலொன் றிறைய தாக்கி
யிந்தமா நிலத்திற் றூனு மெளிமைய ரெவரு மொன்றுஞ்
சிந்தையிற் கருணை கொண்டோன் சீவில்லி புத்தூ ரேந்தற்
பந்தமா மனந்த சீல பாண்டிய னென்னுங் கோவே. (சா)

அறநெறி வழாம லிந்த வாருயி ரெல்லாங் காக்குங்
குறைபறு குணத்தாலப்பேர் கொண்டு செங்கோனன் கோச்சி
முறைமையாய் வாழு மோர்நாண் முனைப்படை யெடுத்
துக் கானிற், றிறன்மலி வீர ரோடு வேட்டைமேற் சென்று
போந்தான், (எ)

வேட்டையிற் பயிலோர் நாளில் வெங்கடுங் கானந் தன்னிற்
கோட்டின மறிபுல் வாயு முயலுங்கைக் கொண்டு பின்னர்
மாட்டுள கரடி வேங்கை பன்றியும் வளைந்து குத்திக்
காட்டினிற் றண்ணீர் தேடிக் கைமாவி னதிக்கண் வந்தான்

வந்தவின் றாகந் தீர்த்து மாநதி தன்னின் மேல்பாற்
சுந்தர வமிர்த லிங்கச் சோதியுங் கோடி தீர்த்தங்

தந்தமா கூபந் தந்தி மாநதி தனையுங் கண்டு
சிந்தையன் பிர்க்க வந்த தென்னவ னிதனைச் செய்வான்.(கூ)

ஙானமுஞ் செய்து மந்த்ர செபங்களு நன்கு செய்தே
கானுறு மலரு மற்றுங் கனகமா மலருங் கொண்டு
மானமர் கரத்தி ராமீச் சுரனையு மறுவில் பூசை
யானவேட் கையினுன் முன்னை நான்முறை யடைவிற் செய்தான்.

ஆறையம் பதியி ஞாதி யமலர்கோ தண்ட லிங்கர்
தேறிய மன்னன் பூசைத் திறத்தினுக் கிரங்கி யேற்றிச்
சீறுசூ கரமா ருனும் விரிஞ்சனுந் தேடி யெங்கு
மீறிலாங் காணு மேனி யெளிமையாய்த் தோன்ற நின்றார்.()

தோத்திரம் புளக மார்ந்து சொல்லுவான் சிவனே நின்னை
யேத்தநான் றவு தந்த வெங்கணு யகனே போற்றி
சாத்திரப் பொருளா நின்ற சங்கரா போற்றி மன்றுட்
கூத்தனே யாறை மேவுங் குழகவென் கோவே போற்றி. ()

அன்பரு ளின்பே போற்றி யருமையா ரமுதே போற்றி
யென்பெருக் கிதழி சூடி யெளியவர்க் கெளியாய் போற்றி
யின்பறை யுமைபங் காளா மேருவில் வீரா போற்றி [றும்.
புன்புலத் தோர்கட் கெட்டாப் பொருவில்பே ரறிவே என்

### வேறு

வேண்டிநின்ற மன்னவனை விமல னோக்கி விதியான மற் றெமைப் பூசை விரும்ப லாலே, யீண்டுனக்கு நல்லரசு

மெண்ணிலாத வின்பசுக புண்ணியமு மியைந்துண்டாமென்,
றெண்டவனுந் திருவாக்கா லருளிச் செய்ய வனந்தகுண
பாண்டியனற் புதமாய்க் கொண்டு, பூண்டுமனந் தெளிந்தங்
கண் விடைபெற் றிப்பாற் புடைபெயர்ந்தங் கீசானபுலப்பா
லங்கண். (௰௪)

வேறு.

வேத வேதியற் குறைபுஞ்சேத் திரங்களும் விதித்துத்
தீதில் காருக பத்தியங் தெட்சிணைக் கினியு
மோது மாகவ னீயமு முச்சூட ரோம்பி
யாதி வேதஞ்சொன் முழக்கறச் சந்தையு மமைத்து. (௰௫)

வேறு.

நேசமொடு மிராமர்பணி நித்தன் றங்க நிகரிலாலயமு
டித்து நியமத் தோடும், வாசமல ரான்மந்த்ர முறையா
லுளும் விழாதறுகா லமும்பூசை வளமு நல்கி, யாசினகர்ப்
பட்டணமும் வடபா லாக வவ்விடத்திற் றன்னரசுக் கோவி
லோங்கி, வீசுபுகழ் பெறச்செய்து விமல னார்க்கு மேடமதித்
திருவிழா விளங்கச் செய்து. (௰௬)

வேறு.

குருமட ங்களுந் துறவிநிட் டாபரர் குழுவுக்
கிருமட ங்களு மூவர்தே வாரங்க ளெழுபண்
டருமட ங்களுஞ் சிவபுரா ணங்கள்சொல் தலமும்
வருமட ங்கல்போ லரசின ரிடங்களும் வகுத்தான். (௰௭)

இனிய பூருவ திசையினிற் காளியு மீச
னனைய மால்தரு மையனைத் தென்வடக் கமைத்து
மனிய பச்சிம பாகத்தின் மழவிநா யகனு
நனிய சண்முக மூர்த்தியு நலமுற வமைத்து. (௰௮)

அன்ன நாற்றிசைக் காவலாப் பதிட்டையா வாகித்
தின்ன வாமுறை கோயிலு மெழில்பெற வியற்றிப்
பன்னும் யோசனைப் பாதியெல் லைக்குறி பரிந்து
மன்னு பூம்பொழிற் சாலைநந் தனவனம் வைத்தான். (௰௯)

வைத்துக் கூபமுந் தடாகமும் வளம்பெற வியற்றிச்
சத்தி ரங்களு மன்னதா னங்களுந் தகவே
நித்த நித்தமுங் குறைபடா நியதியி லளித்துத்
துத்தி வாளரா வேணிரா மேசர்சொல் லுலகில். (௨௰)

இச்சை யிற்பிரி வாற்று கிலாதிகல் வேந்தன்
மிச்ச மாயவ ணரசியற் புரிசைவீற் றிருந்து
பொச்ச நுண்ணிடை மனைவியோ டரசறம் புரிந்து
நச்சி நாடொறு மிராமநா தாவென நவில்வான். (௨௧)

நஞ்சு கந்துயர் கோதண்ட ராமநா யகற்குக்
கஞ்ச மெல்லடி மீதுக்ட் கஞ்சமும் புனைந்து
நெஞ்சு கந்துபூ சித்திடு நேயியான் றனக்கு
மிஞ்சு மாமதிற் கோயிலந் நகரிடை விதித்தான். (௨௨)

விதித்துச் சிதரன் பாகத்தி லிந்திரை விளங்க
மதித்த மந்திரப் பதிட்டையுஞ் செய்துமங் கலமாய்ப்
புதுக்கு மாலயத் திருவர்க்கு நித்திய பூசை
துதித்த லாதிய வாடல்பா டலுஞ்செய்து தொழுவான் (உங)

இப்ப டித்தின மிராமலிங் கேசர்தா ளிறைஞ்சி
மெய்ப்ப டுந்திறல் வேந்தனூர் செய்வினை வியந்து
கைப்ப டுஞ்சிவ புண்ணிய வாழ்வெனக் கருதி
யொப்பி லாக்குறு முனிவனுங் காண்பனென் றுகந்தான். ()

உணர்ந்தெ ழுந்துதன் சீடரோ டோங்குவெங் கானம்
மணங்கொள் பூஞ்சமி வனத்திடை மகிழ்ந்துவந் தருளிக்
குணங்கொ ளேந்தறன் னாட்டிடைக் குறுகவும் வியப்பா
லிணங்கு சீடரோ டெழுந்தன னடந்தன னியவை. (உரு)

அடைந்த கானளி காஞெலி யிசைப்பட வறையும்
மிடைந்த கானமுங் கலுழியும் மிகுஞ்சுர மனைத்துங்
கடந்து நாட்டிடை வரவரக் காவலன் கேட்டு
நடந்து செல்வழி சிறப்பித்துத் தோரண நாற்றி. (உசு)

பந்த ரும்பிளைப் பாறுநல் லிடங்களும் பனிநீர்
சிந்தி வெண்சுதை தீற்றிய கோலமுஞ் செய்து
சந்திரப்பணி மாமலர் நாண்மலர் தளிரும்
முந்த வந்தெதிர் கொண்டனன் முனிக்குளங் குளிர. (உஎ)

வாய்புதைத் தனந்த சில மாறனும் முனிவைப் போற்
றித், தூயவ னிராம லிங்கச் சோதிதன் புராணச் சூட்சி,
யாயது வறிவி லாத வடியனே னறியும் வண்ண, நீயெமக்
கருள வேண்டு மென்றடி தொழுது நின்றான். (௩௬)

நின்றிடுந் தோன்ற லாற்கு நிறைதவ முனியுஞ் சொல்
வான், ரொன்றறு தியுமா யுள்ள சூட்சிகா ரணமாந் தன்மை,
யென்றுமுள் ராவனே யாகு மிறையவ னிராம னென்பா,
ஞென்றிய வுகஞ்ச துர்த்திக் கொவ்வொரு கால்வந் தெய்தி.

ஐந்துமா முகத்தி ஞனை யாறைமா நகரத் தானை
நெஞ்சுறப் பூசை செய்து நேரிரா வணனை வெல்வான்
வெஞ்சமர் செய்ம தாக வேண்டின ஞெழியப் பல்லோர்
தஞ்சமென் றிறைபாற் சூழ்ந்து தாபித்தா ரனேக லிங்கம்.()

இன்னவா றித்த லத்தி லிப்படிப் பதிட்டை செய்து
மன்னவர் சூழ்க்த லிங்கம் மத்தியி லிராம லிங்கந்
தன்னையொப் பான லிங்கந் தரணியி னில்லை மன்னே
முன்னைநற் றவத்தாலன் றிக்காண்பரோ முனிவர்தாமும். (௩௯)

இட்டவிவ் விலிங்கத் தெண்ணெ யாவின்பா னெயத் திட்டும்
பட்டும்பொன் மணிபூண் டங்கப் பவித்திர முந்நூல் சாத்திக்
கட்டிய விண்டை மாலை கமழ்தரச் சாத்தி வறக்கத்
தட்டியவடிசிலூட்டிலவன் றரும்பலத்தைக்கேண்மோ. (௪௦)

இம்மையி லினிய போக வின்பமார்ந் தியல்பின் மிக்காய்ச்
செம்மையாய் மறுமைக் காலஞ் சிவகதி லாயஞ் சேர்த்து
நம்மையி தன்றே திண்ண மாமென்பார்க் குளதே யாருந்
தம்பினி துண்மை கொள்ளார் தமக்கன்றே நிரையந் தானே.

மலையமாமுனிமற் றுஞ்சொல்வான்மகாலிங்கத்தொன்றாய்ச்
சிலைநுத லகில மீன்ற செல்வித்தா னிருந்தால் யாரே
கலைபயின் றேதிக் காண்பா ரென்முனிகருணை பொங்கி
மலைமலி யுருவம் வேறே பதிட்டிப்பா னவில லுற்றான். (சஉ)

மன்னனை நோக்கி யம்மை திருவுரு வகுப்பி பாயென்
றின்னவா றருள வேந்த னின்பமா மகிழ்ச்சி பொங்கிப்
பன்னிய கன்ன லங்கண் சிற்பனைப் பரிந்து கூவி
யன்னவ னுமைக்கு ரூப மழகுற வமைப்பா யென்றான். (சங)

அருமையா லுரைத்த வாற்றா லாகம விதியிற் றேர்ந்த [ஞாய்
வுருவமுங் குறையொன் றின்றி யோவியற் கெழுத வொண்
பருவமா முருவுஞ் செய்து பார்த்திபன் றிருமுன் பெய்த
விருவரு முருவங் கொண்டோ ரினியமா முனிமுன் வந்தார்.

தேவியற் புதமென் றெண்ணி முனிதியா னத்தில் வேண்ட
மேவிய விலிங்க நின்று வேறுரு வுமையே தோன்ற
வாவியே கண்ணே கண்ணி னரியமா மணியே பொன்னே
காவியங் கண்ணாயென் றுகழலிணை யிறைஞ்சிப்போற்றி. (சரு)

குறுமுனி யிறைஞ்ச லோடுங் கோதையா ளுமையு நோக்
மறுவிலிவ் வுருவ மென்று மகிழ்ந்தன மென்று கூறி
நறவுதார் வேந்த னுக்கு நன்மையென் றருளிச் செய்ய
நிறைதவ மென்று போற்றி நின்றன ரிருவர் தாமும். (ச௬

இருவர்க்குந் தெரியா நின்ற விராமலிங் கேசர் பங்கி
லுறீவத்திற் பதிட்டை வந்தாட் குவந்தகி லாண்ட மென்னு
பருவத்தாய்ந் துயிரைக் காக்கும் பண்புடை நாமஞ் சாற்றி
திருவுக்குந் திருவாய் நின்ற தேவிக்கா லயமுஞ் செய்தார்.(

ஆலயஞ் செய்த பின்ன ரகிலாண்ட தேவி யாட்கும்
பாலலோ சனன்கோ தண்ட ராமலிங் கேச ருக்குஞ்
சீலமார் திருக்கல் யாணம் விதிப்படி சிறக்கச் செய்து
சாலமங் கலநாண் பூட்டிக் கோலமுந் தரிசித் தாரால். (சஅ)

இராமர்பூ சித்த ராம லிங்கத்தை யிறைவி தன்னைத்
திராவிட முனிவன் றானும் விடைகொண்டு தென்ன நாளும்
பராபர னகில மீன்ற பசுங்கொடி யுமைக்குத் தாழ்ந்து
தராதலம்புகழப்பூசைநடத்துவாயெனத்தார்வேந்தன், (சகூ)

கும்பமா தவனைப் போற்றி யருளிறைக் கூறு மெந்தாய்
தம்பமாக் கேட்டுயர் தேயா னரகினிற் றாழா வண்ண
நம்பனே யருளிச் செய்தீ ரென்றுநல் லொழுக்கம் வேண்டிச்
செம்பொற்பா தங்கள்போற்றவருளித்தென்மலைக்குச்செல்வான், (

தென்மலை முனியை மாறன் விடைகொண்டு தேவர்
போற்றும், பொன்மலைச் சிலையி ராம நாதர்பூங் கழல்கள்
போற்றித், தன்மலத் தன்மை நீங்கித் தனதுபொற் குவைக
ளெல்லா, நின்மல னாலயத்துக் காமென நேர்ந்தா னன்றே.

வேறு.

இந்தத் தலத்தி லரசியலு மினிய மனைவி புத்திரரோ,
டந்தத் திறத்து மவரவர்க்கு நிறையாந் தன்மை யனைவோர்த்
தார், சிந்தைத் தனுரா மேசனுக்குந் தேவி யகிலாண் டவரி
டத்தும், முந்து சித்தப் பத்தியினுன் முதிர்ந்து சிவப்பே
றடைந்தானே. (௫௨)

திருச்சிற்றம்பலம்

அனந்தகுணபாண்டியன் வந்து பேறடைந்தசருக்கம்

முற்றிற்று.

ஆகச்சருக்கம் ௯-க்குக்கூடிய திருவிருத்தம் ௨௯௨.

# அகத்தியமுனி பூசித்த சருக்கம்.

புல்ப்படு மைந்தும் மும்மை மலமறப் பொருந்தி யேவ
னலப்படுஞ் சூதர் தானு நைமிசா ரணிய நண்ணத்
தலத்தினிற் றகைமை யேய்ந்த தவவன முனிக்கு ழாங்க
சலத்திற்பாத் தியாதியீந்து தாளிணை வணங்கிப் போற்றி. (௧

வணங்கியொன் றிசைப்பா ராறை மாதகர்ப் பொரு
ளுதி, யணங்கொடு குறியி லிங்கத் தொருபொரு ளா
தேவைக், குணங்கொடு சிவத்தாற் பூசை செய்துபே றடை
தோர் கொள்கை, யிணங்கிய திருவுள் ளத்தா லியம்பெ
லியம்புஞ் சூதன். (௨

## வேறு.

பொதியை மாமுனி யகத்தியன் றென்றமிழ்ப் புலவோ
னதிக மாதவ னினைதியா னப்பொரு ளாறைப்
பதியி ராமலிங் கேசனைப் பூசிக்கும் பரிவான்
மதிகொள் கூடமா மலயமு மியானைமா மலையும், (௩

கடந்து சீடரோ டெழுந்தனன் நைமிவனக் கானி
லடர்ந்த கானவுத் தியானமுங் கலுழியுங் கண்டு
தொடர்ந்த நாட்பல வைகிநற் குழுவொடுந் தகட
ரிடங்க ளும்பல கடந்துதென் றுறையி லெய்தி. (௪

## வேறு.

வந்தற் புதமா மிராமீசர் மலர்த்தாள் வணங்கி மகிழ் வோடு, தந்தி நதியின் முறைநானந் தற்ப ணாதி முதலான, முந்தை விதியி னனுட்டித்து முடித்துத் தியான முறையி ருந்து, கந்த சந்த மலரானுங் கமலத் தானு மன்பாலும். (௬)

ஆகம விதிவ ழாம லருச்சித்து முனியா னந்த
மோகமாய்ப் பாடி யாடி முறைமுறை யன்பு பொங்கிப்
பாகமாய்ப் பிதக்க ணங்கள் சூழ்ந்துமுன் பணிந்து போற்றி
யேகமாய்ச்சிவத்யானத்திலிருந்தின்ப நதிந்லிமை பெற்றான்.

அருட்சிவ மோக மாகி யாவர்க்குந் தன்போ லுள்ளம்
பொருட்பட விரங்குமன்ன தானமும புரிந்து.செய்யுங்
கருத்துநன் னலமாத் தேடுங் காசுபொன் கட்டி யாவுந்
திருப்பணிக் காக்கு மன்னன் சிவபத்த னெனவு மானோன் (எ)

வில்லிபுத் தூரின் மன்னன் விடையவ னுறை யீச
னலலருட் சேவை கண்டோ னகருமிங் கமைத்து வாழ்வோன்
வல்லவ னனந்த சீல மாறனோர் வாய்மை குன்றாச்
சொலலுமாங்கவனைக்காணுமாசையுந்தொடங்கிச்செல்வான்.

## வேறு.

அப்பொழுது முனிசெயலை யரசன் கேட்டு வளவளா வமைச்சரொடு மன்பு தாங்கி, யொப்புவமை யில்லாத பர

வசமே லேற வுடல்புளாங் கிதமடைய வுடனே தேடிச்
செப்பரிய வந்தமுனிக் கெதிரே வந்துசேவடியி னன்மலை
ரைத் திருந்துமன்பா, லிப்புவன மெய்ப்புலிக்கு மேலா மெய்
றே யினிமைபெறத் தூவிவீழ்ந் திறைஞ்சி நின்றான். (௯

வேறு.

நின்றமன் னவனை நோக்கி நெறிதவ ருத கோவே
நன்றுடன் சுகமோ வென்று நற்றிரு வாக்காற் கேட்ப
வின்றெழுந் தருளுந் தேவ ரிணையடித் தெரிச னத்தா
லன்றுமின்றென்றுமின்பசுகத்தையேயடைந்தே மென்றான்

உலகெலா மளந்த கீர்த்தி யுடையமன் னவனீ யிந்தத்
தலமிசைப் பத்திசெய்யுன் றனைக்காண வந்தே மிங்கு
நலமெனத் துறவோன் செப்பலோதனித் தலமுற் காதை
சொலவருட் கருணை செய்வீ ரென்றடி தொழுது நின்றான்

ஆங்கது கேட்பா யென்றங் கறவனு மருளிச் செய்வா
னோங்கிய நெடியமாய னிரண்டாய வுகங்க டோறுந்
தாங்கிய மவுலி வேந்தாய்த் தரையிடைப் பிறந்தி ராம
னீங்கெனை யீசனுறை யிறைவனைப் பூசித் தேத்தி. (௧௨

வார்சடை மதலை யானு மகிழ்ந் தொரு கருணை யாலே
கார்முக மருள வாங்கிக் கம்பத்தா னரக்கன் றன்னைப்
போர்முகச் சமரில் வெல்வன் புண்ணியப் பதிபு ரீந்தே
பாரின்மிக் குயர்ந்த தின்னம் பகருவே னரச ரேறே. (௧௩)

ஆறையம் பதினா யீசர்க் கடுத்தசூழ் ஞாங்க ரெங்கும்
பேறுபெற் றுயர முன்னோர் கோடிமேற் பரதிட்டை லிங்கம்
வேறுவே றமைத்த லாலும் மிக்கவித் தலத்துக் கொப்பாய்க்
கூறவே றிலதா மென்று கும்பமா முனியுங் கூறி. (கச)

சிவக்குறி யிலிங்கந் தன்னிற் றேவியு மைக்க மாகும்
புவிக்குய ரிவ்வி லிங்கப் பொருளினுக் கபிடே கங்கள்
சுவைக்கதி நசனைவேத் யஞ் சொர்னமா மணிபட் டாடை
கவைப்பொருண்மாலையன்பிற்செலுத்துவோர்கதியைச்சொல்வாம்.

இம்மையி னிறைந்த செல்வ முதலிய வினிய போகச்
செம்மைசேர் வாழ்வு முண்டாஞ் சிவப்த மறுமைக் குண்டாந்
தம்பிலொப் பாரு மில்லை யுண்மையாந் தனைகமைத் தாகு
மம்மவிதென்கொனம்மாலறிந்துறைசெய்யற்பாற்றே. (கசு)

என்றருந் தவனுங் கூற வேந்தலற் புதமங் கெய்தக்
குன்றமா மலையன் மற்றுங் கூறுவா னுலகி லுள்ளோர்
சென்றுகட்புலத்திற்காண்டுந்தெரிசனம்பெறவும்வொண்டு
நன்றுறவுமைக்குரூபஞ்செய்விப்பீரெனநவின்றான். (கஎ)

## வேறு

இன்ன வாறு முனியருளு மிதுவே யுய்யும் படிநமக்குச், சொன்ன திருவாக் கெனவுணர்ந்து தூயோன் பணியே மேற்கொண்டு, பன்னு விதிநற் சிற்பர்தமைப் பணித்தா

னுருவம் விதிப்படியே, யன்ன தொழிலோர் செய்தமைத்தா ரரசரேறு மகங்களித்தான். (கஅ)

அரசன் றனுஞ் சிற்பவிதி யவருஞ் சிலைபு மறவன்பால், விரவு காத லொடுஞ்சென்று மிக்க வுருவங் கொடுபோந் தார், பெரிய வருளை சமைந்தனெ முனியும் பேரற் புத மெய்ந்திந், திருவா லயமுந் தேவியுமைக் கமைப்பீ ரென்னச் செப்புதலும். (கசு)

அந்தப் பணிகொண் டனந்தருண மாற னமைத்தா லயமுஞ், சிந்தை தெளிந்து மனமகிழ்ந்து செழுந்தண் கயமா நதிமூழ்கிச், சந்தி முறையி னீறணிந்து தருமந் திரந் தோ டொருமூன்று, முந்தச் செய்து தேவிதனை முறையா லிருந்து தியானித்தான். (உ0)

முனிவன் தியான முறைக்கிரங்கி முதல்வி முதல்வ னிடத்திருந்து, கனியு முள்ளக் கருணையினால் வெளிவந் தாற் றுள் கனங்குழலும், பனிமா மதிசேர் திருமுகமும் பரந்த கருணைத் திருநோக்குந், தனிமால் விடைமேன் மரகதத்தின் சாயை யுருவந் தனிவிளங்கி. (உக)

## வேறு.

தோன்றுசக ளத்துருவாஞ் சுந்தரநற் கோலந் தூய்திரு வழகொழுகுந் துணையடித்தா மரையி, னீன்றநாண் மலரா லும் விளைவுறுமன் பாலு மிறைவிமந்திரத் தாலுமருச் சனை

களவ ணியற்றித், தென்றருநற் றமிழாலுந் தெளிந்துபல
போற்றிச் செல்வியே யகிலமெலாஞ் சிறப்புயர்ந்து வாய்ப்ப,
வென்று புரக் தருளுமகி லாண்டவல்லித் தாயே யிவ்வுருவி
லெழுந்தருளி யிருந்தருளல் வேண்டும். (உஉ)

வேண்டுமெனப் பொதியையமர் முனிபணிந்து வேண்ட
விளங்குருவாய் வெளிவருமத் தேவியுரை செய்வா, ணீண்டு
னக்கு வேண்டும்வரங் கேளளிப்போ மென்ன விருடியகத்
தியன்வணங்கி யெம்முதல்வி யுன்னை, டாண்டரா மீசனை
மனுதினமு மடியே னகமலர்ந்து தெரிசிக்க வருடரவும் வே
ண்டுந், நீண்டபாா சம்பிடித்தோ ருணைத்துதிக்கிற் சிறுந்
தீவினைக ளறக்கரிந்து திருப்பெறவும் வேண்டும். (உரு)

எவரேனு நின்பூசை புரியுமவர்க் கிங்கே யெண்ணங்கள்
கவலற்ற வியல்பருளி மெய்ம்மைமத், தவமேவி யித்தலத்தில்
வைகுமவ ரியார்க்குஞ் சந்ததியித் திரசெல்வந் தழைத்தருள
வேண்டுங், கவிமாலை மலர்மாலை சாற்றுமவர் தமக்குங் கற்ப
கமா யற்புதநீ கருணைசெய வேண்டுந், சிவமடையுந் துறவி
யரித் தலம்வசிக்க வேண்டுஞ் செல்வியென முனிவணங்கத்
தேவிமகிழ்ந் தீந்தாள். (உச)

**வேறு.**

தென்னனு மிருபதந் தொழுது செவ்வியா
யின்னவா றருள்செய வேண்டு மேனென

வன்னையு மப்படி யருளி னேமெனச்
சொன்னமா மாரிக வேிப் போற்றினான். (உரு)

வேறு.

அருளியங்கு திருவாருவி லிருவருமுன் காண வப்பொ
ழுதே பிரசன்ன மாகவந்தா ளனையு; மொருமங்கைமை யற்புத
மொன்றதிசயித்துக் கோயி லுள்ளெழுந்த ருள்வித்தா கமவி
தியுங் தவறு, திருமைபெறத் தனுராம லிங்கேசர் தமக்கு
மெழிலுறவே விருந்தவிக் கினியபூ சனையுந், திருவளரப்
பூசித்து வேண்டிநின்று முனியுந் திருநாம மகிலாண்ட
கேசியெனப் புனைந்தான். (உசு)

வேறு.

இறைவர்தனு ராமலிங்க ரிறைவியையும் வேண்டி
மறைமுனியும் விடைகொண்டு மாறனுக்கா ருளா
னிறைந்துயரு நலமருளி நிறக்திவழிக் கொண்டே
வறுமொதிகைய வரையிலெழுந் தருளியுறை வின்றான்.()

திருச்சிற்றம்பலம்.

அகத்திய மாமுனி பூசித்த சருக்கம் முற்றிற்று.
ஆகச்சருக்கம் ௪-க்கு கூடிய திருவிருத்தம் உ௭௯.

# இராசசேகரபாண்டியன் தெரிசித்த

# சருக்கம்.

சூல பாணியூர் சிவக்கதை தெளிந்தநற் சூதன்
ஞால மீதுயர் நைமிசா ரணியத்தி னண்ணச்
சால வம்முனி வோர்பணிந் தரன்புகழ்ச் சாரதை
சீல மாய்த்திரு வுளமருள் செய்தது தெளிந்தோம். (௧)

ஆறை யம்பதி யண்ணலா ரரும்பெரும் பூசை
பேறெனப் புரிந் தருச்சனை செய்துபே றடைந்தோர்
வேறு ளாரையுங் கேட்பது விரும்பினோ மென்னக்
கூறு வோமென வன்னமா முனிவனுங் கூறும். (௨)

எண்ணி றைந்தபே ராறையி னிறைவனை யிறைஞ்சித்
திண்ண மாகிய பெரும்பத மடைந்தனர் திறத்தில்
வண்ண மோர்கதை மற்றுள மாக்கதைக் கதிக
புண்ணி யக்கதை நீவிரே கேட்டுளம் புரிவீர். (௩)

காசிக் கங்கைக்கு மதிகமா நதிகதி கொடுக்கும்
வாசி யாயது தாம்பிர பன்னிமா நதிக்கோ
ரேசி றென்கரை மணப்படை வீடென வியம்புந்
தேசப் பட்டணங் குபேரன்வாழ் புரியெனச் சிறக்கும், (௪)

மஞ்சு லாவிய வளர்நெடும் புரிசையு மாகம்
மிஞ்சு பூங்கொடி விசிய விருதுசேர் சிகரி
தஞ்ச மென்றிக லார்வரு கடைத்தலை வாயி
லெஞ்சொல் சித்திர மேடையு மலங்கனின் றிலங்கும். (௫)

தெருவுந் தேருஞ் சிவாலய மும்புடை சிறக்கு
நிருபர் கோயிலும் பூசுர ரகரமு நெருங்கும்
புரையி னற்குடியேய்குடி யாவையும் பொருந்தி
மருவு மங்கல மணமலி வளங்க ளோங்கும். (௬)

புந்தி தேர்மதி யமைச்சரும் பொருபடைச் சிலம்பர்
தந்தி ரத்தொழி லோர்களும் மற்றுளோர் தகவும்
பந்தி வாசிக டொகுதியு மாதங்கம் பலவு
மிந்து சேகரன் பணிக்கென மனத்துளோ னிறைவன். (௭)

ஒருவ னெண்ணிலா வுயிர்க்கிடர் வரப்பொறா வுளத்தன்
தரையி னீதியி னறிலொன் றிறைகொளுந் தக்கோன்
மருவ லார்பணி வேலவன் சங்கரன் மலர்த்தாள்
பரவு மிராசசே கரனொரு வழுதிபார்த் திபனே. (௮)

இன்ன தன்மைய னிருட்புலர் காலையு னெழுந்தோர்
கன்ன லாறெனும் வேலையிற் கருணைக்கண் ணுதலார்
மன்னு மாலவா யிறையவன் மலர்ப்பதம் வணங்கத்
துன்னு மாசையா லஞ்சன்மா மேற்கொடு தோன்றி. (௯)

நீத்த நித்தமுஞ் சொக்கரங் கயற்கணோ ணேசப்
பத்தி யான்மற வாதநற் றெரிசனம் படைப்பா
ளித்த கைத்தணு ளாண்டுநூற் றெண்பதெண் ணிறைய
முத்த மர்க்குறப் படையினுந் தெரிசன மொழியான். (௧௦)

## வேறு.

மற்றும்பற் பலநா ளஞ்சன் மாமிசை வழிபோய்ச் செல்வா
னற்றைநா ளொன்றி லாறை யம்பதிக் கண்டயும் வேலை
யுற்றதா யாசந் தன்னு லுளந்தளிற் சுந்த ரேசர்
நற்றுணைப் பாத மெண்ணி நவிலுவா னைந்து நின்றே. (௧௧)

என்னனு றேப்பால் வந்த விவைதவிர்த் திப்போ தையா
மன்னிய விறலுந் தாது மகிழ்ந்துகாத் தருளென் றேத்து
மன்னகா லேயினிற்கூட லரன்றிரு வருளால் விண்மேற்
பன்னிய வாக்கு நீதான் பதறுத லொழிக வென்றும். (௧௨)

காப்பது நானீ யஞ்சேல் கடறுசெல் பொழுதி னோக்கும்
ஏற்பது வருத்து மாற்றுன் முயன்றுநீ மயங்க வேண்டாம்
பூப்பதி மன்ன கேண்மோ பொருந்துமா நகரிவ் வாறை
நாப்பணி லுதி லிங்க நாமென வறிவா யென்றும் (௧௩)

## வேறு.

இத்தலத்தினில் ராமலிங்கரை யேமெனச்சொலு வார்களி
னித்தமுங்குறு முனியுமற்றுள நீதிமாதவ ரெண்ணிலார்

சத்தியப்பொரு ளொன்றுபூசை தியானமும்புரி தன்மையா
லுத்தமத்தவ ளக்கிரிக்குமு லாவுவாருள தாகுமால், (க௪)

வேறு.

முன்னம்யா வருக்குந் தோன்று மூலமா யிருப்போ மென்று
மன்னுநான் குகத்துக் கோர்கால் வராகமா விராம னாக
மன்னியப் பூசை செய்ய வார்சிலை யளிக்கு மாற்று
லன்னகோ தண்டராம லிங்கமா மருச்சித் தேத்தாய். (க௫)

வேறு.

என்றெழுந்தவின் வாணிமெய்ப்பொரு ளிராசசேகர மாறனும், நின்றுகேட்டுள மன்புபொங்கி நெகிழ்ந்தசிந்தை முகந்துடன், கன்றுபெற்ற மெனக்கனிந்திரு கண்ணினீர்த ருண்மையாய்த், தொன்றுநான்முக லென்னையாளுநற் சுந்தராவெனத் துதிசெய்தான். (க௬)

துதித்துநெஞ்சினி லிடைவிடாததி யானமாகவே சூழ்ந்துடன், மதித்தபேரறி வமைச்சரோருடன் மற்றைநமேற் றிசை பற்றியே, நதிக்குமேல்கரை யின்மருங்கினி னுதராமை யிலிங்கரை, விதிக்குமாலுக்குந் தேறுணைத்திரு மேனிகண் டருண் மீறுவான். (க௭)

மெய்விதிர்த்துள நைந்துநைந்து விழிக்கண்மாரி துளித்தெழக், கைகுவித்து விழுந்துபூமிசை காதலோடுவணங்கி

தின், றையனேனயென தாறைமேவிய வற்புதப்பொரு ளாகிய,
தூய்யனேயறிவிலியனேற்கருடுலங்குசோதியென்றோதிஞன்

ஓதவேதனு ராமலிங்க ருவப்பொடும்பொழி கருணேதா
னேதுவாகவின் மீதுவாணி யெழுந்தபேரருள் விளேயுமோர்
சோதிசுந்தரர் தாமுநாமெனுஞ் சொற்றசத்திய மாமென
நீதியிற்குறி லிங்கநம்மை நினேந்துபூசை யியற்றெனும். (கக)

வேறு.

இதுவு மெந்தமை யாண்டவா றென்றதி சயித்து
மதுவ ருந்தவு மலரைநே டியமது கரம்போற்
புதும லர்க்கொடு பூசனே புரியவும் விரைவின்
முதிரு மன்பிஞற் றும்பிமா நதிபினின் மூழ்கி. (உ0)

வேறு.

தொல்லையா னந்த கூப மாகிய துகடீர் தீர்த்த
நல்லவை யென்ன வாடி ஞன்மறை கூறுந் தொல்லே
யல்லறீர் விதியால் வெண்ணீ றணிந்தனுட் டானஞ் செய்தா
மல்லலா லயத்தைச் சூழ்ந்து வலம்பெற வணங்கிப் பின்னர்

சுந்தர ராம லிங்கச் சோதியைத் துணேவி யோடு
மந்திர விதியா னல்ல மலரிஞன் மூற்று யர்ந்த
சந்திர மூலரால் ரத்ந பரணத்தாற் றகும்பட் டாலுஞ்
சிந்தையு ளன்பி ஞலுஞ் சிறந்தபூ சனேகள் செய்வார். (உக)

மாதங்க வரைவில்லேந்தி வரும்பெரு மானே போற்றி
மாதங்கமுரித்துப்போர்த்தமழுப்படையுடையாய்போற்றி
மாதங்க நதியாய் போற்றி வள்ளலே போற்றி யெந்தாய்
மாதங்க முடையாய் போற்றி மன்னவா போற்றி யென்ன.

நிருபனு மன்பி னாலே நிறைகணீ ரொழுகப் போற்றும்
பருவமுந் திருவுள் ளத்திற் பாங்குறத் தரிப டாம
லிருவருந் தேடிக் காணு விறைதனு ராம லிங்கர்
கருணையாலிரங்கிக்கோலங்காட்டுவான்கவின்கொள்கோலம்.

வேறு.

வெண்ணிலா வெறிக்கு நெடுஞ்சடை முடியும் விளங்கிய கருணைமா முகமுங், கண்ணொரு மூன்றுஞ் சங்கவார் குழையுங் கறைமிட றுடையகந் தரமுந், திண்ணிய வரைபோற் றிரண்டவெண் டோளுந் திருநீறு குலவிய மார்பும் நண்ணிய பதமு முமையிடப் பாலு நரைவிடை மேலெழுந் தருள்வான். (உ௫)

கண்டுகண் ணாரத் தெரிசித்துக் கனிந்து கரணமும் பரவச மடையப், பண்டுள வசங்க ளணுகிலா நேசப் பற்றுமோர் கலந்தொரு மையினாற், றண்டர ளம்போற் றுளைநீர் வார்ந்தாழ்ந்தெழுந் தஞ்சலி கூப்பிக், கொண்டுளக் காதல் குலவிமெய்ப் புளகங் கூச்செறிந் தாடினன் குறித்து. (உ௬)

## வேறு.

ஆடிய பாதா போற்றி யாறையம் பதியாய் போற்றி
நாடிய வடியார்க் கின்ப நாயகா போற்றி யெங்கள்
கூடலம் பதியி தென்னக் கொண்டவா போற்றி வாடா
வேடணி கூந்த லாள்பா லிறைவவென் கண்ணே போற்றி

அம்மையே யறமெண் ணான்கு மவனியி லாற்றல் செய்து
செம்மையா யிறைவன் பூசைத் திறத்தையுஞ் சிறப்பிற் காட்டு
மும்மையா முலக மீன்ற முதல்வியே முன்னின் றீங்கே
யெம்மையாண் டருள வந்த வினியபே ரருளே யென்றும். ()

இறைவனை யிறைவி தன்னை யினியபே ரன்பி னாலே
முறைமுறை வணங்கிக் கைகள் கூப்பிமுன் னின்ற நீதி
நிறைதரு மாறன் றன்னை நிமலனா ரருளி னோக்கிக்
குறைவிலா வரத்தைக் கேளென் றருள்செயக் கூற லுற்றான். ()

நீயுமன் னையுமா மென்ற னெஞ்சினிற் றோன்றி நிற்ப
வாயுமென் னறிவாற் பூசை யயர்ப்பிலா தியற்ற வேண்டுந்
தாயொடு தந்தை மக்கள் தாரமென் றெடுத்துச் சொன்ன
மாயையின் மயங்கிப் போகா வண்ணமு மருள வேண்டும். ()

## வேறு.

ஏந்த றானு முறாதியிவ் வண்ணமே
தேர்ந்து விண்ணப் பஞ்செய்து தொழுதெழக்
கூந்த லாளுமை கேள்வன் குறுநகைத்
தாய்ந்து கேட்டவை யாமளித் தோமென்றான். (௩௧)

வேறு.

வரங்கொடுத் தருளி வைபம் வாழ்ந்திட வருமி லிங்கத்
திரங்கிய கருணை நாத னுறைந்தன னிப்பான் மன்னன்
பரம்பொரு ளெந்தை சுந்த ரேசன்வாழ் பதியுந் தென்பாற்
றிரந்தரு நாம மூன்றென் மதுரைமா நகருஞ் செய்தான். ()

புதுங்க ரேசங்கச் செய்து புண்ணிய ராம லிங்கர்
மதகரி நதியின் மூழ்கி மந்திர விதிநீ றிட்டுப்
பதமலர் வருந்தக் காலம் பலவுநா ளுளுஞ் சென்று
கதிதருஞ் சேவை செய்து நாட்பல கழிந்த பின்னர். (௩௩)

வேறு.

மிக்கநகர் மணப்படைவீ டடைந்து நீடு வேந்தன்மனு வழுவாது விளங்கக் காத்து, மிக்கறுகு நதிமதியு மணியும் வேணி யத்தர்தனு ராமலிங்க ரடிக்க ளுளும், புக்கடந்தரு ஞ்சேவை புரிந்து போற்றிப் பூதலத்தி லெனிதுவந்த புகழ் ளோங்கித், தக்கவோ தனமளித்துந் தனமளித்தும் பூமி தானங்க டகவளித்துந் தன்னை யொப்பான். (௩௪)

இன்னவா றெழுகுபல வாண்டுஞ் செல்ல விருங்கதியை யெய்தவருங் கால மெய்த, மின்னுவார் செஞ்சடையார் கைலை நாதர் விட்டகண நாதர்விமா னமும்வந் தெய்த, மன்னவனுந் தொழுதேறிக் களித்துத் தேவர் வாழ்த்தொலிக ளொடும்பவெள்ளி வரைக்கே சென்றான், கன்னபரம் பொருளி னிணை யடிக்கீ ழின்ப மகலாத பேரின்ப மடைந்தா னன்றே.

என்றுதவ வடிவினிறை சூதன் சொல்ல விருடியர்கேட டிருகரமுஞ் சிரமேற் கூப்பிப், பொன்றுதலுந் தோன் றுதலு மில்லா முத்திப் புரவலனே கரவறியாப் புனி தர் வாழ்வே, இன்றடைந்தோ மென்றுமடை யாவின் பத்தை யிறைவதிரு வாறைநக ரெந்தா யீங்கே, நன்று நன் றுன் றிருவருளென் றேத்திப் போற்றி நலஞ்சிறந்தார் புலன்சிறந்த நலத்தி னோரே. (கூசு)

வேறு.

பாரிணங்கு மரசோங்கப் பரிந்துமழை சொரிந்தோங்க
வாரணங்கள் மறையவர்க ளானினங்க டழைத்தோங்க
பூரணரா மேசர்தமைப் பூசிப்பார் தழைத்தோங்க
தாரணியு ணல்லறமுஞ் சைவமுமே தழைத் தோங்க (கூஎ)

திருச்சிற்றம்பலம்.

இராசசேகர பாண்டியன் றேரிசித்த சருக்க முற்றிற்று.

திருவாறைத்தலபுராண முற்றிற்று.

ஆகச்சருக்கம் அ-க்குக் கூடிய திருவிருத்தம் கூகஅ.

# அரங்கேற்றல் செய்தார் பெயரும், செய்வித்தார் பெயரும்.

திருவளர்பாற் கடலமுதைக் கடைந்து மாயோன் றேவர்களுக் கன்றுதவுஞ் செயல்போற் காஞ்சி, வருநகரி னந்தியின்கோத் திரத்திற் றோன்றி வளரேகாம் பரநாத குரவனுறைப், பெருநகர்மான் மியத்தையிங்குப் புராண மாகப் பெயர்த்துரைத்தா னவன்றனக்குப் பௌத்திர னான, வருள் பெறுமேகாம்பரனுங் குரவன் றானு மவையதனி லரங்கேற்றல் செய்தா னன்றே.

சீரோங்கு ராசைவல்லி நகரில் வாழ்வு சிறந்துலவு சாத்தனுடைக் கோத்திரத்திற், பாரோங்கு சிதம்பரபுண் ணியன்றா னீன்ற பகர்சாமி நாதனெனும் பண்புமிக்கோன், காரோங்கு மாறைநகர்ப் புராணந் தன்னைக் கதிபெறவே யரங்கேற்றல் செய்வித் துய்ந்தான், பேரோங்கு பொழில்புடைசூழ் நகரத் தோறும் பிரபலமாய்க் கேட்டின்ப வாழ்வுற் றாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்டுணை.

# திருவாறைத்தலபுராண வசனம்.

## இராமர் பூசித்த சருக்கம்.

ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபராய் விளங்கிய சூதவிருடிநைமிசாரண்ணிய வாசிகளுடன் அளவளாவிக் கொள்ளற்கா யங்ஙன மெழுந்தருள, உடனே இருடிகுழாமெழுந்து, விதிப்படி வணங்கி மாதவக்குன்றே! இந்நிலவுலகினில் சிவாலயமான்மிய மெங்கட்குணர்த்தி, யாம்பவித்திரமடையும்படிக்குக் கிருபை பாலித்தீர்: அஃதன்றி எத்தலங்களினும் முதற்றலம் திருவாறை க்ஷேத்திரமென்றும் தேவர் பூசித்து வருகிற மகிமைபெற்ற தென்றும் புகன்றீர். அத்தலத்தில் மானிடர்கள் பூசித்திருக்கும் புராதன சரிதங்களுளவாயின், அஃதையும் புகன்றருள்வீரெனக் கேட்கச் சூதவிருடி சொல்வதானார்.

ஆதியில் இரண்டாவதாகிய திரேதாயுகத்தில் திருமால், மூர்க்கனாகிய இராவணாரண்ணியத்தையழித்து, இந்நிலவுலகினும் அறப்பயிர் தழைத்துச் செழிக்கும்படிக்கு, அயோத்திக்கரசனாகிய தசரதச்சக்கிரவர்த்திக்கு முதற்குமாரனாகத் தோன்றி, இராமன் என்று பெயர் புனையப்பெற்று, பரதர்,

இலக்குமணர், சத்துருக்கர் என்னு மனுசர்களுடன்" அறிவரு ளாதர வடக்கம் வாய்மை மெய்த்—துறவு நல்லொழுக்கமே தூய்மை யென்றிவை—யுறவொடுகுழவியாயுடன்வளர்ந்திட." வளர்ந்து, தனக்கசப்த வாக்கியம்போதித்த விசுவாமித்திரர் யாகந்தடைபடாவண்ணங் காத்து, அவர் சொற்படி தனுவை யொத்து முறித்துச் சீதையை மணம் புணர்ந்திருந்தார். தசரதர் தனது முதற்குமாரனுக்கு நித்தியாநித்திய வஸ்து விவேகந்தோன்றித் துறவில் விருப்புற்றவரா யொழுகும் அவருளப் பாங்கறிந்து விரைவில் முடிசூட்ட நினைந்தார். உடனே கூனியின் துர்ப்போதனையால், தனது துதியை மனைவியாகிய கைகேசி, துணைவனிடம் முன்னரே பெற்றிருக்கும் இரண்டு வரத்தில், தனது குமாரனாகிய பரதன் நாடாளும்படிக்கொன்றும், இராமன் வனம்புகும்படிக்கொன்றும் வேண்டினுள், இஃதறிந்த தசரதர் பலவாறு நீதிமொழி புகன்றும், கைகேசி கேட்காமல், முன் புகன்றவண்ணம் புகல, பழைய சாப விதிப்படி தசரதர் புத்திர சோகத்தால் பிராணத்தியாகஞ் செய்வதற்கு முன், சிற்றன்னையான கைகேசியினுத்தரவுப்படி

"ஆழிசூழுலகமெல்லாம்பரதனேயாளநீபோய்த்
தாழிருஞ்சடைகடாங்கித்தாங்கருந்தவமேற்கொண்டு
பூழிவெங்கானநண்ணிப்புண்ணியத்துறைகளாடி
யேழிரண்டாண்டின்வாவென்றியம்பினனரச
னென்ருள்."

" மன்னவன்பணியன்றாகினும்பணிமறுப்பனோவென்
பின்னவன்பெற்றசெல்வமடியனேன்பெற்றதன்றோ
வென்னினியுறுதியப்பாலிப்பணிதலைமேற்கொண்டேன்
மின்னொளிர்கானமின்றேபோகின்றேன்விடையுங்கொண்
டேன்." என்றார் கம்பரும்.

இராமர், சீதையும் இலக்குமணரும் பின்பற்றிவரத்தண்ட காரண்ணியம்புகுந்து சின்னாட் கழித்தனர்.

பின்னரம்மூவரும் "மூர்த்தி தலந்தீர்த்த முறையாற் றொடங்கினற்கோர்—வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே." என்னும் மேதாவியின் வாக்கின்படி கோதாவரியில் தீர்த்தமாடி, விருப்பாட்சீசரைப்பணிந்து, திருக்காளத்தி மலையைத் தெரிசித்துப் பொன்முகலி நதியில் ஸ்நானஞ்செய்து, அங்ஙனுள்ளமயிலேறும் பெருமானை வாழ்த்தி, அந்நதிக்கருகிற்றன் பெயராலிலிங்கப் பிரதிட்டை செய்து வணங்கி, அப்பால் காஞ்சிநகரேகாம்பரநாதரைத் தோத்திரித்து, அருணகிரிவாழ்வைப்பூசித்து, விருத்தாசலத்தேவையடி பணிந்து, கனகசபை நடராஜமூர்த்தியை விசுவாசித்து, திருவாரூரிறைவரை வேண்டி, திருவிடைமருதூரண்ணலைத் தொழுது, குடந்தை நகர்ப் பெம்மானைப் போற்றி, திருவ

யாறர் சரணம்பரவி, காவிரி நதியின் மூழ்கி, திருவானைக்கா வெண்ணாவலானை யர்ச்சித்து, அவ்விடத்து இலக்குமணரால மைக்கப்பெற்ற பன்னகசாலையில் வசித்தார்கள்.

இவர்களிங்ஙனம் வசிக்க, சூர்ப்பநகை வந்து இராமரு டன் தகாதமொழிபுகன்றமைக்காக, அவளது மூக்கு, செவி, தனம் இவ்வுறுப்புகளைப் பேரறிவறிந்த இலக்குமணர் வாளா லரிந்தார்.

"ஊக்கித்தாங்கிவிண்படர்வெமென்றுருத்தெழுவாளை
நூக்கிநொய்தினின்வெய்திழையேலெனநுவலா
மூக்குங்காதும்வெம்முரண்முலைக்கண்களுமுறையாற்
போக்கிப்போக்கியசினத்தொடும்புரிகுழல்விட்டான்."

என்றார் கம்பரும்.

தனதங்கம் பங்கமானதைப் பொறுமல் அவனுள்ள கரன், தூடணன், திரிசிரனென்னும் இராட்சதர்களுடன் சூர் ப்பநகை சொல்ல, அவர்களுஞ் சீறிப் போர்புரிவதற்குப் புகு ந்தார்கள். இஃதறிந்த இராமரும் சீதையைத்தன்னனுசன் காவலுட்படுத்தி, தன்னொருவில்லால் ஒரு முகூர்த்தகாலத் தில் யுத்தத்துக்கு வந்த சேனைகளைத் தூளாக்கி, அவர்கள் வலிமையப்பாழாக்கி, அம்மூவரையும் வானுலகத்துக்கிரையாக்கி வைத்தார். அப்பால், சீதையும் இலக்குமணரும் மனக்களி

ப்பினராயுடன் கூடிவர அவணீங்கிய காகுத்தரும் தாயுமா னேசுவரரைப்பணிந்து, கடம்பவனம் புகுந்து மாறியார்டும் பெருமானைவணங்கிப்போற்றுவார்.

(1) அமரருக்காகஅழல்விடமுண்ட
நிமலவுன்பங்கயநித்தமும்போற்றி.

(2) மார்க்கண்டேயர்வாழவன்றெமனை
மூர்க்கனைக்காலான்முடித்தவபோற்றி.

(3) பாலகற்கந்நாட்பாற்கடலளித்த
மூலமேகருணைமுதல்வபோற்றி.

(4) காலாந்தரத்துக்கழியாதொருவனுய்ச்
சூலந்தாங்குமென் துணைவபோற்றி.

(5) சுரர்பதிவந்துதொழுதெழுமெங்கள்
பராபரபாசபசுபதிபோற்றி.

(6) அயன்றரும்புதல்வர்க்கந்நாளிற்சிவ
மயமெனுந்தேசிகமாணவபோற்றி.

(7) தேவதேவதிருவருட்பொழியும்
மூவாவெளியின்முதல்வபோற்றி.

(8) நன்மலரயனுநாரணனுந்தொழும்
பொன்மலரடியைப்போற்றிபோற்றி.

என்றுவந்தித்து,வாழ்த்தித்துதித்து,நேசித்துப்பூசித்து விடைபெற்று

"பற்றியபழியினீந்தியிந்திரன்பழியைத்தீர்த்த
வெற்றிகொள்விடையினானைமீளவும்வந்துபோற்றி
யற்றிரளனையகோதைகற்பினுக்கரசியோடுஞ்
சுற்றியசடையிராமன்றென்னகரடைந்தானிப்பால்."

என்றார்பரஞ்சோதி முனிவரும்.

அப்பால் திருப்பரங்குன்றத்தில் தேவர்சிறை மீட்டும் பெரு மானைப்போற்றித் தென்பால் வில்லிபுத்தூரடைந்தார். ஆங்கு இளையபெருமாளால் கட்டப்பெற்றபன்னகசாலையில் சானகி ரமணரும் சானகியும் வசித்தார்கள்.

இப்பால் கரதூடண திரிசிரர் மடிந்ததையறிந்த சூர்ப்ப நகை இலங்காதிபதியாகிய இராவணனுடன் நடந்த வர்த்த மானங்களைச் சொல்லினாள். உடனே இராவணன் தனது மாதுலனாகிய மாரீசனைப் பொய்ம்மானாக ஏவ, அவனும் நிச மான்போன்று வைதேகியாரிருக்கும் இடத்திற்புக்கி நடித் தான். இஃதுமாயமென்றறியாத சானகியும், தன்னெசமா னனிடஞ்சென்று எம்மானே! இம்மான் எனக்குக் கொடுப்பீ ரென்றிரந்து வேண்டினாள். அங்ஙனமே சீதாபதியும் ஒப் பற்ற விற்றாங்கி, அம்பறாத்தூணிகட்டி, சானகியை இலக்கு மணர் காக்கச்செய்து, பொய்ம்மான்பின் தேவர்பெருமான் சென்றார். அம்மான் அகப்படுவதுபோற் பாவனைகாட்டி நெடுந்தூரம் மாயாவல்லபத்தாற் சென்றது. இம்மானைவிட்

டுவிடாத திருமாலும், மனமாலடைந்து செல்போழ்து, தென்ஞறை க்ஷேத்திரத்தில் பகல் பதினெட்டு நாழிகைக்குமேல் வந்து நீர்வேட்கை மிகுதியாலவ்வடவியில், பிரவாகம் வரும்படிக்குக் கங்காதர மூர்த்தியைப் பிரார்த்தித்தார்.

“நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வு—மூரும்
வருந்திருவும் வாணளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ் சிவந்த தாமரையா டான்.”

என்னு நீதிநூற் கிணங்க, அந்நிமிடமே பொதிகாசலத்துக்கடுத்த யானைமலையி னடிவாரத்தில் துப்புர வமைந்த அகத்தியமடுத்தீர்த்தத்தினின்று வெள்ளந்திரண்டு பலவிருக்கங்களை யீர்த்துக்கொண்டு சொலற்கருந்தகைத்தாய் வந்தது. அந்நதியில் தாசரதியும் நித்தியகர்மானுட்டானங்களை நிறைவேற்றிப் பிதிர் தர்ப்பணமுதலியதூஉஞ் செய்து அந்நதிக்கு யானைநதி (கயத்தாறு) யென்று பெயரிட்டு அந்நதி தன்னிடத்தில் மூழ்குவோர்களதெண்ணங்கள் சித்தியடையவும் புண்ணியங்கை கூடவும், அப்பால் பிறவித்துன்பமாறவும் தானேரேதுவாகுமென்று புகன்றார். உடனே அசரீரி நமத் திருமுன்பு நதிவரும்படிக்குச் செய்தமையா லுன்து வேண்டுகோட்படி இந்நதி புண்ணிய நதியேயாம்: இதுவுமன்றி உனதிச்சையே நமதிச்சையாதலால் இதில் மூழ்கு

வோர்க்கு வேண்டும் காமிய நிட்காமியப்பயனை யளிப்போம் என்று சொல்லிற்று. சீதாபதியு மற்புதமடைந்து, திருவருட்பயனைத் துதித்துத் தொழுது நிற்கக் கயத்தாறு தென்பால், திரும்பிச் சித்திராநதியுங் குறுமுனி கரகத்தூறுஞ் சிறப்புப்பொருந்திய தாம்பிரவன்னியுந் தன்னுடன்வந்து கலந்துகொள்ள, சமுத்திரத்திற் சங்கமமாயிற்று. அத்திநதி வாருதியிற் கலப்புற்றமை யானவ்வாருதிக்கும், அத்தியென்று பெயரடையப் பெறுமாயினந்நதியின மகிமையை யென்னாற் சொல்லத்தக்க தன்றென்று நைமிசாரண்ணிய வாசிகட்குச் சூத விருடிபுகன்று மேனடக்குஞ் சரிதத்தைச் சொல்வாரானார்.

“ நோய்ப்பிறப்பிலாதகண்ணுதலைப்பூசியா
வாய்ப்புறத்தலைக்கொருமதிபெறுநர
ாய்ப்பிறப்புற்றதினறிஞ ரெள்ளுறு
நாய்ப்பிறப்பாற்றவு நன்றுநன்றரோ.”

என்னுஞ் செய்யுட்கிணங்கச் சிவபூசா துரந்தரராகிய இராமரும் அவ்வன் பூசிக்கவேண்டுமென்றுன்னிப் பாவித்துத் தியானஞ் செய்தார். பெருமை நிறைந்த ஆறைநாயகராகியும் பஞ்சபூதம் சோமன் சூரியன் இயமானனாகிய எட்டு வடிவமுந்தானாகியும் இவைகளல்லனாகியும், பரிபூரணமாய் எங்கு நிறைந்த பரமேஸ்வரன், அருவுருவத் திருமேனி

கொள்ளக்கருதிச் சிவமயமாய் மங்கள நிறைந்த அமிர்த சொரூபமாய் அன்பரிதயாம் பரத்தினின்றுருகச்செய்யுந் தெளிவுமிகுந்த தவப்பயனாய், பார்க்கப்பார்க்கத் திருவருளின் வடிவமே வடிவமாகிப் பழுத்துத் ததும்பிக் கருணை வழிந்தொழுகுந் திருமேனி, "ஓதரிய சிவலிங்க வொளியாய்த்தோன்ற." கண்ட சீதாபதியும் வீழ்ந்தழுது தொழுது நாவுதடுமாறிக் கூவி யோடியாடிப்பாடி வாடி யொருவாறு தெளிந்துபோற்றுவாரானார்.

(1) அன்பரகத்தொளியாய்நிறைந்தும்மவர்
முன்புநின்றருளும் முதல்வபோற்றி.

(2) காதலடியார் கருணையுளத்தெம்
மாதுடன் வளரும்மணியே போற்றி.

(3) பாண்டியர்வாழப்பசுபதியாகி
வேண்டியதளிக்கும்விமலபோற்றி.

(4) பெருமருணீக்கிப் பிழையாவகத்தத்
திருவருள்வடிவாந்தேவபோற்றி.

(5) தொண்டர்முன்வினையாற்றயருறப்பெறினுங்
கண்டறியாதகருணைபோற்றி.

(6) ஆதியிலொன்றாயப்பாலருளருட்
பாதிமாதுமையாம்பரனேபோற்றி.

(7) முறையிடத்தேவர்முன்னுணையிடத்தைக்
கறையிடற்றொளித்தகள்வபோற்றி.

(8) நயத்தாருடையுழ்நலியப்புரியுங்
கயத்தாறுடையவென்கண்ணேபோற்றி.

(9) துன்பமறுத்துத்துகளைத்துடைத்து
இன்பம்புகுத்துமிறைவபோற்றி.

(10) தேன்றைநாயகவுமாதேவிநாயகதிரு
வாறைநாயகவுன்னடியிணைபோற்றி.

என்று துதித்துச் சிவபூசைக்கு வேண்டு முபகரணங்கள் கொண்டுவந்து, அந்நதிநீரபிடேகித்தாலதனில்வரும்புற்புதம் அனுசிதமென்றெண்ணிக் கங்காதீர்த்தத்தால் அபிடேகிக்க நினைத்து அது இங்ஙன்றோன்றும்படிக்குஅமிர்தலிங்கரைவேண்டி ஆற்றலுடன் தன்றனுவாற் றென்கிழக்கி லூன்றினர். இப்படிக்கிங்ஙன் இராமர்வில்லையூன்றப் பெருங்கூபமொன்று தோன்றி அதன்வழித்தாய்க் கங்காநதி பொங்கித் தன் முன் புக்குக் கடலேழு மெழுவதுபோற்கண்டு தன் திருக்கரத்தாலிக் கூபந்தினளவாய் நிற்கக் கடவதென்றமைத்து, இக்கங் காநதிவரும் போழ்து கோடிநதியுடன் வரலால் கோடிதீர்த்த மென்று ஒருநாமஞ்சாற்றிச் சித்தமகிழ்ந்தக்கோடிதீர்த்தத்தினின்றும் திருமஞ்சனம் ஆட்டுவித்துச் சொன்னமலரும் வெண்மைபொருந்திய எருக்குட னெட்டுமலரும், அர்ச்சித்துப்

பாலன நிவேத்தித்துத் தூபதீபங்காட்டி உடல் பொருள் ஆவி யென்னு முப்பொருளும், உடையவனிடத்திற் கொடுத்துப்போற்றுவாரானார். பிறைசூடும்பெம்மானே! அமிர்தலிங்க வாழ்வே! அடியார்க்கெளியபசுபதி! என்னை யடிமைகொண்டருளுமுமாமகேசா! பரம்பொருளே! சங்காரமூர்த்தி யென்று துதித்து, ஐந்துதிருமுடியும், பஞ்சானனமும், ஐம்மூன்று திருபா நோக்கமும், தசக்கரத்தில் சூலப்படையும் வச்சிரமும் வாளும் மழுவும் அபயமும் வலக்கரத்தும், பணியும் பாசமும் மணியும் தழலும் அங்குசமும் இடக்கரத்தும், நீறுதுலங்கிய லலாடமும், பானிறத் திருமேனியுமுடைய பசுபதியின் சரணாரவிந்தத்தைத் தனதகத்திற் பாவித்துச் சந்திரசேகரா! அர்த்தநாரீச! ரிஷபவாகனா! நிருத்தகல்யாணா! பிட்சாடா! காமபுரதகனா! காலகாலா! கங்காதர! கரியுரித்தோய்! சௌந்தரா! வீரபத்திரா! ஆலமுண்டோய்! கிராதா! கங்காளா! சண்டப்பிரசண்டா! திருமாற் காழியளித்த அருண்மூர்த்தி! விக்கியேசுரருக்கருளுமாற்கந்த! அருமையாகிய திருப்பாதத்தை யுடையவனே! சுகாசனக்கடவுளே! தக்ஷிணாமூர்த்தி! இலிங்கோற்பவா! மாலயன்தேடுந்தாணுவே! என்று துதித்துத் தலையன்பா லெழுந்து அடியேனையாண்டருள வேண்டுமென்று பிரார்த்திக்கும் இரவிகுலாதிபன் பக்திக்கிரங்கித் திருவாரைநாயகர் நதிமதிச்சடையும், சங்கக்குழையும், பேரார்ந்த நிறைந்த திருமுகமும், திரிநேத்திரமும், காளகண்

டமும், சதுர்ப்புஜமும், ஒருபாலுமையும், இணைப்பொற் சரணும்புயமுந் தோன்றக்கண்ட சுரரும் முனிவரும் சுரேந் திரனும் கற்பகமலர்களை யிறைத்துக் கொண்டு பூமியில் வந்து வணங்க பிரம விஷ்ணுக்கள் சேவித்து நிற்க ரிஷபா ரூடராய்க் காட்சி கொடுத்தருள வெழுந்தருளினர். அவ் வருட்காட்சிகண்ட இராமர் சிரமேலிரு கரமுங்கூப்பி ஆனந் தக்கண்ணீரொழுகத் தடைபடாத ஆனந்தத்துடன் பரவச மாகி நிரதிசானந்த வாழ்க்கை யுட்பட்டுச் சொற்குழறிக் காலத்திரயத்தும் வேற்றுமையின்றிய திருவடியிற்றாழ்ந்து போற்றுவாரானர்.

(1) சங்கராபோற்றிதாணுவேபோற்றி
பொங்கரவணியும்புனிதாபோற்றி.

(2) எளியவர்க்கெளியவிறைவாவென்றும்
அளிவளருள்ளத்தருளேபோற்றி.

(3) திருவாறைவாழச்சிறந்தடியார்க்கரு
மருவாரைமாய்க்குமைந்தபோற்றி.

(4) சடைமுடியத்ததனிமலைக்கரத்த
கடைகொடியஞ்சக்கரத்தபோற்றி.

(5) சென்னிதன்முகவுயிர்சிந்துமப்போழ்து
முன்னிலையவர்பெறுமுதல்வபோற்றி.

(6) கடுக்கைமாலையனேகராசலநதியாய்
உடுக்கையொண்கரத்தாரொருவபோற்றி.

(7) சம்புவேஅடியார்தருவேஅயனரி
உம்பர்நாயகமேவுமாபதிபோற்றி.

(8) கைலையின்வாழ்வேகரதலப்பொன்னே
வெயிலியன் மணியேவிமலமேபோற்றி.

(9) ஞானவாருதியேநற்பதங்கடந்த
மோனமார்நிதியேமுதலேபோற்றி.

(10) அருவவுருவவருவுருவவுயிர்ப்
பருவம்பார்த்தருளுய்பராபரபோற்றி.

என்றிவ்வாறு துதிக்கும் நாசரதியின் தலையன்பிற்கிரங்கி நல்லது உனதுபூசை ஸ்துதி வணக்கம் பத்தி அன்பிவைகட்குமகிழ்ந்தனம் துஷ்டனாகிய இராவணனை நீயே சென்றழித்து விடவேண்டு நியதியால் அக்காலத்து வேண்டுங்கோதண்டமிப்போழ் துனக்குக் கொடுத்தோமென்றுரைப்பபற்றபரமேஸ்வரனுக்ஞாபிக்க, உடனே காகுத்தரும் வீழ்ந்து பணிந்தேற்று என்னையாளுந்தன்மையிவ் வழித்தெனத்தேறி அடலற்றவெற்கு அடலளிக்குங் கோதண்ட மளித்தருளு மெந்தாய்! நின்திருநாமம் கோதண்டராமலிங்க மெனப்புனைந்தருளவேண்டு மென்று பணிய, சகூநாதனும் உனதெண்ணமே நமதெண்ணமாதலினவ்வண்ணமே அமைக, வென்ன, பின்

னரும் எம்மையாளுமிறைவாபோற்றி. கோதண்டராமலிங்காபோற்றி ஆதிபாண்டரங்கத்தரசேபோற்றி. நீறணிந்தொளிருநின்மலா போற்றி. சடைமுடிதரித்த சங்கரா போற்றி. ஏறுகேதனத்தெம்மானே போற்றி. ஆறையம் பதிவாழரனே போற்றி. ஐந்தெழுத்தாம் பெயரய்யாபோற்றி. யென்று துதிக்கும் இராமற்கு விடையளித்தப்பரமேஸ்வரனும் சோதிமயமான அவ்விலிங்கத்தமர்ந்தருளினார்.

இப்பால் ஜானகி ரமணரு நீரருந்தித் தாகந்தீர்ந்து உத்தேசித்துவந்த மானைத் தொடர்ந்து பிடிப்பே னென்று விடைபெற்றுத் தென்மேற்குத் திக்கில் அம்மானைத்தொடர்ந்துபின் செல்ல அப்பொய்ம்மானும் நிருத்தபுரிப்பக்கத்து வாயு வேகம் போல் வஞ்சகத்துடன் செல்லச்சீறி யோரத்திரம் ஏவினார். அவ்வத்திரம் பட்டுயிர் போமுன் மானாகவந்த மாரீசன் துதிப்பதானான். சீராமாவுன் சேவடிபோற்றி. பாற்கடன்மீது பள்ளிகொண்டருளி, அறிதுயிலமர்ந்தவரியே போற்றி. வருந்தாவமுதவரவே போற்றி. என்பிழை பொறுத்தாளிறைவ போற்றி. கமலக்கண்ணார் கடலேபோற்றி, மலைக்குடைகொண்ட மானேபோற்றி. மாயாவொளிமணிவண்ணாபோற்றி. வாசுதேவா வாவா போற்றி. பஞ்சாயுதப்படைப்பரனே போற்றி. அன்னவாகனத்தனத்தா போற்றி. உலகளந் திருவடியுடையாய் போற்றி. தசரதன் செல்வவுன் சரணம் போற்றி. கழையூதியகருங்கண்ணா போற்றி. திருமா

துறைதிருமாலேபோற்றி. சுரர்முதலோர்நிதந்தொழுமடிபோற்றி. அரவச்சயனத்தமர்ந்தாய்போற்றி. வைகுந்தத்துறை வாழ்வேபோற்றி. சீதரா போற்றி யென்தெய்வமேபோற்றி முகிலுடைவண்ண முதல்வபோற்றி. தாசரதியுன் தாளிணை போற்றி. சீதாபதியுன் திருப்பதம்போற்றி. சரணம் சரணம் சாமி சரணம். மரணம் வந்ததுவுனை வாழ்த்தினேன் சரணம். என்று பற்பல துதிகள் விளம்பி அடியேன் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, இவனொருவன்று திருவருட் கண்பார்வையாலவனைச் சீதாபதி பார்க்க, மாரீசன் முடிவடைந்தான். ஆனலிது ராக்ஷதர்மாயம், பின்னுற் றெரியவரும் என்ற இராமரும் நடனமாடும் பெருமானுறையும் பொன்னம்பலமிதுவே யெனக் கருதி, அந்நின்மல மூர்த்தியைக்கருத்திலிருத்தி, அந்தக்கரண வொற்றுமையுடனனந்தித்து, திருவாலய முன்னர் வந்து பணிந்து, இவ்வுலகி லரிய பேறளிக்கும் சிதம்பரமென்று சொல்லத்தக்கதிதுவேயென்று தோத்திரித்து, உண்மைநிறைந்த அகங்குளிர அன்பாலுருகிக் காதலோடும், பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் துதிக்க ஆனந்தத்தாண்டவம் புரியுந் திருவடியைத் துதிப்பதானர். இரத்தின சபையினாயக போற்றி. கனக சபையின் கனியே போற்றி. இரசித சபையினிறைவா போற்றி தாம்பிர சபையின் தலைவா போற்றி. சித்திர சபையின் தெயவமே போற்றி யென்றும்; திருவாலங்காடு, சிதம்ப

ரம், திருவெண்காடு, திருப்பாரி சாதவனம், திருவாரூர், திருவாலவாய், திருப்பாதாளீச்சுரம், திருவிடைமருதூர், திருக்குடந்தை யென்னுமொன்பதுநடன க்ஷேத்திரங்களினுஞ் சிதாகாயமென்னுஞ் சிதம்பரம் அரியபேற்றைக்கொடுக்குமென்று வணங்கி யிப்பாற்றிரும்பி, தன்னை யடிமைகொண்டருளுந் திருவாறைக் கோதண்ட ராமலிங்கரிடஞ் சார்ந்துபோற்றி விடைபெற் றப்பதியகன்று, வடமேற்குத் திக்கில் உமாதேவி, சங்கரநாராயணர் வடிவத்தைத்தெரிசிக்க ஆயிரம்பருவம் தவம்புரிந்த புன்னைவனநாதரைப்போற்றுவாரானார்.

(1) சங்கரசங்கரதாளிணைசரணம்
மங்கையோர்பங்குறைவானேசரணம்.

(2) நினைவனவெவையவைநேரிலளிக்கப்
புனைவனத்துறையும்புனிதாசரணம்.

(3) உரனறியுமையவளொண்டவத்திற்கா
யரனரியாயுறையையாசரணம்.

(4) புற்றுடைமண்ணைப்பொற்புவியோருய
விற்றுடையாயறிவேனேசரணம்.

(5) கூட்டும்பவப்பிணிகூடாதருண்மருந்
தூட்டும்வயித்தியமுடையாய்சரணம்.

(6) வேதாசரணம்விகிர்தாசரணம்
தாதாசரணம்தாயேசரணம்.

(7) மாணுசரணம்மரியாய்சரணம்
பாணுசரணம்பழையாய்சரணம்.

(8) ஊன்றான்பிறிதென்றுள்குவாருள்ளே
தோன்றாத்துணையாந்துணைவாசரணம்.

(9) மருணிலைவீட்டிமலமறுத்தாறினற்
கருணிலைகாட்டடிக்கடியேன்சரணம்.

(10) ஒன்றினைப்பற்றியுணர்வாருணர்விற்
கென்றுமொன்றாயிசைவாய்சரணம்.

என்றிவ்வாறுபோற்றிய இரவிகுலாதிபன் விடைபெற்றவணீங்கி, சரிவலம்வந்து வணங்கும் பால்வண்ணநாதரைத் துதித்து, ஏற்றடியும் இறக்கடியுங் காட்டியருளும் தெய்வதானம் நச்சாடை தவிர்த்தவரைப்போற்றி, ஆங்ககன்றுபுதுவை வயித்தியநாதரைப்பணிந்து வில்லிபுத்தூர் மார்க்கம் புகுந்த போது விற்றாங்கிய இலக்குமணர் ஓடோடியும் வந்துரைப்பதானார்.

அண்ணா அண்ணா இராவணன் மாயைச் செய்கையால் நீர், பிரிந்ததுபோல என்னையும் பிரியச்செய்வித்து உமது திருத்தேவியாரைத் தேரில்வைத்துக்கொண்டு போனான்

போஞனென்று தாளில் வீழ்ந்து புலம்பித் துன்புற்று வாய் புதைத்துநின்று மெய்ந்நடுங்கிக்கண்ணீர் துளிப்ப அழுதுரைத்தார். நடந்த விருத்தாந்தங்களைக் கேட்டவுடன் இராமரும் நெஞ்சயர்ந்து மனமாலடைந்து "கேட்டிலுறுதி கூட்டுமுடைமை." என்றொருவாறு தேறிப் புகல்வாரானுர். தம்பி! நீயேன் மனக்கவலையடைகின்றனை, வாருதிகடந்து இலங்கைக்கோட்டையைத் தூள்கோட்டையாக்கி இராவணனையும் செயம் புரியும் இக்கோதண்ட மென்றதன் வரலாறெடுத்துக் காட்டிப் பிராரத்த வினையைக் கடந்தவரார்? "உள்ளியதெள்ளியராயினு மூழ்வினை-பையநுழைந்துவிடும்." ஆதலின் இலங்கை நகரத்தைநோக்கி யுத்தசன்னத்தராய்ப் புறப்படுவோமென் றஸ்திரசஸ்திரராய்ப் பெயர்ந்து திருவாறை நாயகரை இராமரும் இலக்குமணரும் வந்துதெரிசித்தார்கள்

இவ்வண்ணம் பெயர்ந்துவந்த அவ்விருவரும் யானைநதியில் தீர்த்தமாடி கோதண்டராமலிங்கரிடஞ்சென் றெங்கட்குக் கோதண்டமளித்த பசுபதி! எமதெண்ணத்தை முடிக்கவல்லதெய்வமே! யென்று துதித்து விடைபெற்றப்பால், சித்திர நதியில் மூழ்கிக் கயிலாச நாதரைத் துதித்து, தெற்கில் திரும்பித் தாம்பிரவன்னியில்மூழ்கி நெல்லையப்பரைத் தெரிசித்து, அப்பால் திருச்செந்தூரில் வதனாரம்பம் என்னும் கடற்றீர்த்தமாடித் துதிப்பதானுர்கள்,

வேலாயுதக்கரவேளேபோற்றி. குறுமுனிக்குகந்தருள் குருவே போற்றி. மயில்வாகனத்துறை மணியேபோற்றி. பூதரந்தகர்த்த புலவாபோற்றி. கடப்பமாலைக் கந்தாபோற்றி. கயிலைநாதர் கண்மணி போற்றி. விண்ணோர் சிறைவிடும் வேலாபோற்றி. சூரனை மாய்த்தருள் சூராபோற்றி. சரவணபவாவுன்றாளிணைபோற்றி. திருப்பரங்குன்றத்தேவாபோற்றி. வள்ளிக்குகந்த மணாளாபோற்றி. செந்திநகர்வாழ் தெய்வமே போற்றி. ஆவினன்குடியினமர்ந்தாய் போற்றி. ஏரகத்துறையுமெந்தாய்போற்றி. சோலைமலைவாழ் சுவாமி போற்றி. குன்றுதோறாடல் கொண்டாய்போற்றி. கணபதிக்குகந்த கனிட்டாபோற்றி. ஞானபண்டிதனே நாளும்போற்றி. என்றுதுதித்து விடைபெற்று இதற்கப்பால் வடபுறம் திரும்பிய தசரதன் செல்வர்கள் உத்தரகோசமங்கை மூதூரெய்தி அங்கணுள்ள மங்களேசுரனைத்துதித்துத் திருப்புல்லாணி வழியிற்கூடி சுக்கிரீபன், அநுமான், அங்கதன் முதலிய வானரப்படைத்தலைவர்களின் துணைபெற்றுச் சமுத்திரக்கரையில் வந்தடைந்தார்கள்.

இவ்வாறு மூன்றுநாளில் வானரசேனைகளைக்கொண்டு பத்துயோசனை அகலமும் நூறுயோசனை நிகளமுமுள்ள சேது செய்து, இதற்குமுன் இலங்கைக்குச்சென்று சானகியின் அடையாளங்கொண்டுவந்த அநுமானால், அவ்விடத்தளவுகளைக்கேட்டு அபயமென்றடைந்த விபீஷணனுக்கு

அபயஸ்தங்கொடுத்து இராமலக்குமணராகிய இருவரும் வானரசேனை சூழும்படிக்கு அச்சேதுவழிபற்றி இலங்கைக்குச் சென்றக் கோட்டையை முற்றுகை போட்டார்கள்.

"நேமியுங்குலிசவேலும்வாயுவு நெருப்புக்கண்ணு
ளுமவேருனுமற்றைநான்முகன்படையுநாணத்
தீமுகங்கதுவவோடிச்சென்றவன்சிரத்தைத்தள்ளிட்
பூமழைமாரிசிந்தப்பொலிந்ததப்பகழிப்புத்தேள்."

இலக்குமணர், இராவணன் புதல்வராகிய இந்திரசித்து, அதிகாயன் இவர்களையும், இவர்களுடன்வந்த சதுரங்கசேனைகளையும், மற்றும்பல வரக்கர்களையும் யுத்தஞ்செய்து கொன்றார்.

"முக்கோடிவாணுளுமுயன்றுடையபெருந்தவமுமுதல்வன்முன்னு, ளெக்கோடியாராலும்வெலப்படாயெனக்கொடுத்தவரமுமேனைத், திக்கோடுமுலகனைத்துஞ்செருக்கடந்தபுயவலியுந்தின்றுமார்பிற், புக்கோடியுயிர்பருகிப்புறம்போயிற்றிராகவன்றன்புனிதவாளி."

இராமர், இராவணனையும் அவனனுசனாகிய கும்பகர்ணனையும் இவர்களுடன்வந்த சதுரங்கசேனைகளையும் மற்றும் பலராட்சதக்கும்பல்களையும் இராவணனுக்கு உதவிபுரியவந்த மூலபெலங்களையும் யுத்தஞ்செய்து வீரசொர்க்கங் குடி

யேற்றி வைத்தார். ஆனால் இவர்கள் புரிந்த மறத்தொழில் அறமாவதெங்ஙனமெனில்,

"அரனடிக்கன்பர் செய்யும் பாவமு மறமதாகும்
பரனடிக்கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்
வரமுடைத்தக்கன்செய்தமாவேள்வி தீமையாகி
நரரினிற்பாலன்செய்தபாதகநன்மையாய்த்தே"

என்னுஞ் சித்தியாராற்றெளியத்தகுவது.

இப்பால்ராக்ஷதகுலாந்தகராகிய இராமலக்குமணர்கள், தம்மை முன்னரேவந்தடைந்த விபீஷணனுக்கு இலங்கைப் பட்டங் கட்டுவித்து, இராவணன் காவற்குள்ளிருந்த சானகியைச்சிறைவிடுவித்தழைத்துக்கொண்டு, அயோத்தியைநோக்கிப்புறப்பட்டார்கள். இந்தப்பிரகாரம் சேனாசமூகந்தம்மைச் சூழும்படிக்குச்சேதுவைக் கழித்திப்பால், இராமர் தனுவின் கோட்டாற்கிழித்துத் தனுக்கோடியென்னும் தீர்த்தக்கட்டம் ஏற்படுத்தி அவண் பரமேசுவரனைப் பூசிப்பதற்குக் காசிக்கங்கையை வரவழைத்துத் தனுக்கோடியில்தீர்த்தமாடி அனுட்டித்துத் தன் பெயராலிலிங்கம், பிரதிட்டைசெய்து திருவாறை நகரில் கோதண்டமேய்ந்த பழையகோதண்டராமலிங்கமிவரென்றேத்திப் போற்றுவாரானார். சேதுவினை யூந்த தெய்வமே வாழ்க. எம்மையாண்டருளுமிறைவன் வாழ்க. பசுபதியாகும் பரமன் வாழ்க. காதணிகுழையான்

கருணைவாழ்க. திருநீலகண்டத் தெய்வமே வாழ்க. கோதிலாவமுதே குறைகழல் வாழ்க. என்பவம் போக்கு மிறைவன் வாழ்க மனமாலகற்று மணியே வாழ்க. கண்ணே கருத்தே களிப்பே வாழ்க. தேடாவமுதே திருவே வாழ்க. என்று வாழ்த்தி விடைபெற்று இராமரும் இலக்குமணரும் வைதேகியாரும் சதுராங்கசேனை சூழ்ந்துவரும்படிக்கு அயோத்திமா நகரம்நோக்கி வருவதானார்கள்.

ஆங்குப் பதினன்கு வருடமாக ஊண் உறக்கமின்றி நந்திக்கிராமத்தில் வசிக்கும் பரதாழ்வான் தெரிந்து மனமகிழ்ச்சிகொண்டு, பூரணகும்பம்வைத்து சுண்ணத்தால் வெள்ளையாற்றி ரதவீதிகளெல்லாம் பற்பலவாத்திய முழங்கச் செய்து ரதாரூடனாய் எதிர்கொண்டுசென்று தாய்ப்பசுவைத் தவறவிட்டகன்று கண்டதை யொத்துப்பணியும் பரதாழ்வானையெடுத்து வாழ்த்திப் பற்பல அரசரும் அமைச்சரும் போற்றித் தன்னைச் சூழ்ந்து வரும்படிக்கு ரதமேறி அயோத்தி நகரத்தைப் பவனிவந்து ஆலத்தியெடுப்பவரும் கட்டியங்கூறுவாரும் நாட்டியஞ் செய்வாரும் இசைபாடுவாரும் நிறைந்தகொலுமண்டபத்தைச் சார்ந்து,

" அரியணையனுமன்றாங்க வங்கதனுடைவாளேந்தப்
பரதன்வெண்குடைகவிக்கவிருவருங்கவரிவீச
விரைசெறிகுழலியோங்கவெண்ணெயூர்ச்சடையன்றங்கள்
மரபுளோர்கொடுக்கவாங்கிவசிட்டனேபுனைந்தான்மௌலி."

என்றார் கம்பரும்.

தனதாசிரியரால் இரத்தினக்கிரீடம் சூட்டப்பெற்றுநுண்ணியமருங்குடைய சீதையோடு, பரதர் இலக்குமணர் சத்துருக்கர்களும் தன்னைவாழ்த்த இராமச்சந்திரன் இவ்வுலகரசாண்டிருந்தார் என்று நைமிசாரண்ணிய வாசிகட்குச் சூதவிருடி சொல்லியருளினார்.

இராமர் பூசித்த சருக்கம் முற்றிற்று.

# அனந்தகுணபாண்டியன் வந்து
## பேறடைந்த சருக்கம்.

——(::)——

தவவடிவினராய் ஜீவகோடிகளுய்யும்பொருட்டு மூவாறுபுராணங்களையும் புகன்றருளின சூதவிருடி, நைமிசாரண்ணியத்துக் கெழுந்தருள அவ்விருடியர் சமூகமெழுந்து வீழ்ந்துநமஸ்கரித்துத் தவவுருவே! குணமலையே! சர்வோத்தமா! இதுவதுவென்னும் பகுப்பினின்றியாம் மூழ்கிப்போகாவண்ணம் சத்தியுஞ் சிவமுமொன்ருய்த் தெரிசித்துப் பேறடைந்தாரியாரேனுமுளரேல், அவரது சரிதத்தையும் அப்படிக்குப் பேறடைந்த க்ஷேத்திர மகிமையையும் கேட்டடியே முய்யும்பொருட்டுத்திருவுளம்பற்றியருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அவ்வண்ணமே சூதவிருடி சொல்லலுற்றனர்.

மனுதர்மத்துக்கொப்ப "தென்புலத்தார் தெய்வம்விருந்தொக்கலுறென்றாங்—கைம்புலத்தாறோம்பறலை". யென்றபடி ஆறிலொருகடமைவாங்கி, தன்னுயிர்போன் மன்னுயிரை பேணிபெறச்செய்து, சதுரங்கசேனையுடனே தந்திரிகள் மந்திரிகள் தன்னைச் சூழும்படிக்கு வில்லிபுத்தூர் என்னும் நகரத்தை ராஜதானியாகக்கொண்டு, இவ்வுலகத்தை அரசாண்டுவருகிற அனந்தகுணபாண்டியன் என்றோரரசனிருந்தான். இவ்வரசன் க்ஷத்திரிய தர்மத்தின்படி வேட்டைக்கோர் நாட்சென்று புல்வாய், முயல், மான் முதலிய சாதுமிருகங்களை வலையுட்படுத்தியும், கரடி, புலி, பன்றி முதலிய துஷ்டமிருகங்களைக் கொன்றும் வருகிறபோது நீர்வேட்கை யதிகரித்துக் கானகமெலாமுசாவிக் கயத்தாற்றுக்குவந்து நீரருந்தி அக்கரையிலிருக்கும் சுந்தரலிங்கத்தையும் அதனருகிற் கோடிதீர்த்தமென்னுங்கூபத்தையுங்கண்டு தன்னுளடங்காத பெருங்காதல்கொண்டு, அந்நதியிலும்தீர்த்தத்திலும் ஸ்நானம் பண்ணி மந்திரகர்மங்களினாலும் புட்பமுதலிய வுபகரணங்களினாலும் முன்னை நூன்முறைப்படி பூசித்தான். இவ்வாறு பூசிக்கும் வழுதியின் தலைபன்பிற்கிரங்கித் திருவாறை நாயகர் உருவத்திருமேனியுடன் இடபாரூடராய்க் காக்ஷிகொடுத்தருளினார். பிரமவிட்டுணுக் கட்குங் கிடைத்தற்கரிய காக்ஷியையுளக்கண்ணேயன்றி ஊனக்கண்ணாலுந் தெரிசித்து வீழ்ந்து வீழ்ந்தெழுந்து போற்றி"னைந்துருகி நாக்குளறி உரோமாஞ்சலிகொண்டு துதிப்பதானார்.

(1) தேவதேவதிருவாறைநாயக
மூவாமுதல்வர்முதல்வசரணம்.

(2) உன்னையறிந்தென்னுளத்திற்றுதிக்க
அன்னைபோன்றின்னருளருளாய்சரணம்.

(3) நூற்பொருளேபுலனுகராப்பொருளே
நாற்பொருளேயுமைநாதாசரணம்.

(4) இன்பொடுதுன்பேஇதமகிதம்மே
முன்பொடுபின்பேமுடிவேசரணம்.

(5) மாதர்மக்கண்மனைபொருணீத்தார்
போதத்துறையும்புனிதாசரணம்.

(6) என்னைப்படைத்தாற்றியையப்படைப்பான்
றன்னைப்படைத்ததாயேசரணம்.

(7) ஒருபொருளிருபொருண்முப்பொருளொன்றி
வருபொருளேயேவாழ்வாய்சரணம்.

(8) இதுவதுவென்னுமேழைமைவிட்டார்க்
கதுவதுவாகுமையாசரணம்.

(9) உன்னையறியேனூழ்வினையைக்கொளே
னென்னையறியேனேழைசரணம்.

(10) தீந்தாமெனுநடஞ்செய்பூங்கயநதி
வேந்தேவுனையறிவேனோசரணம்.

என்றிவ்வாறு துதித்து வீழ்ந்து வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து நானுபக்கங்களினு மோடித் துள்ளிக்குதித்தாடினன். இப்படிக்கானந்தமேலிட்டிருக்குங் குணசிலனை விமலனருட்பார்வையா னோக்கி வழிவழித் தொண்டாகவரும் பஞ்சவனே! உனது பூசை, தோத்திரம், வணக்கம், உள்ளன்பிவைகளைக் கொண்டருளி இவ்வுலகவாழ்வினின் றனுபவிக்கச்செய்தப்பால் அவ்வுலகவாழ்வையளிப்பதுந்தவிர,நமதுமுன்புக்கு நீயிருந்தரசுபுரிதற்கிசைந்த பட்டணமுதலிய ராசபோகமு மமையுமென்றருளி யவ்விலிங்கத்துள் மறைந்தார்.

உடனே இஃதற்புதமென்றறிந்த மீனகேதனன் ஈசானதிசையில்வேதியர்க்குறைவிடமும்,மூன்றக்கினியும்வளர்க்கும் ஓமகுண்டமும், வேதபாராயணஞ்செய்யும் பாடசாலைகளும் நியமித்து, தன்னை யாட்கொண் டருளின கோதண்டராமேசற்கு ஒப்பற்ற திருவாலயங் கட்டுவித்து வேதாகமப் பிரகாரம் நாடோறும் ஆறுகாலப் பூசையுங் குறைவின்றி நடந்தேறும்படிக்குத் திட்டஞ் செய்து, மேடமதியில் உற்சவம் ஏற்படுத்தித் துதித்தான்.

இவ்வாறுசிவபுண்ணியம் புரிந்துவரும்அனந்தகுணபாண்டியன் அவ்விறைவனதாஞைப்படி ஆங்குத்தர திசையில் தானிருந் தரசாட்சி புரிவதற்கேற்ற மாடமாளிகை கூடகோபுரங்கள் கோட்டை கொத்தளங்கள் மகளிர் விளையாடு

செய்குன்று முதலியனவமைத்து அப்பட்டணத்தில் பரமாசிரியர் தங்கு மடங்களும், சிவசமய குரவர்கள் திருவாய் மலர்ந்த தேவார திருவாசகங்களைப் பண்ணடைவுடன் எடுத்தோது மிடங்களும், புராணப்பிரசங்கஞ் செய்யுந் தலங்களும், அன்னசத்திரம், ஏழைகள் தங்குமுறையுள், அகதிச் சிறுவர்கள்கற்கும் பாடசாலை, தீராநோய்நீக்கும் வைத்திய சாலை, மரச்சாலை, ஆயுதச்சாலை, அறச்சாலை, பொதுவிடம், வாவி, கூபம், நந்தனவனம், உத்தியானவனம் முதலியனவு நியமித்தப்பால் கீட்டிசையிற் காளியும், தெற்கிலும் வடக்கிலும் அரிகரபுத்திரரும், குடதிசையிற் கணேசரும் கோட்டையைச் சூழ்ந்திருக்கும்படி பிரதிட்டை செய்து, ஆங்காங்கு கோவிலுங் கட்டுவித்து, ஒரேயோசனையுடன் அரையோசனை விரிவிலமைந்துள்ளதாகிய அந்நகரத்திலிருந்து "துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்—மற்றையவர்கடவம்." என்னுமுயர்ந்தோர் மொழிக்கிணங்க இல்லறம் வழுவாது அரசுபுரிந்திருந்தான்.

இவ்வாறு ஆறைநாயகரை நாடோறுந் தெரிசித்து அரசியல்புரிந்து வருநாளில் ஆதியில் தன் நேத்திரத்தைப் புட்பமாகக் கொண்டு பரமசிவத்தைப் பூசிக்குஞ் செய்கையால் அச்சக்கிரபாணிக்கும் பெரியபிராட்டிக்கும் தனது நகரத்திலுள் கோவிலும், சிகரிகளும், கோட்டைகளும் நிருமித்து நாடோறும் பூசை, நைவேத்தியம், ஆடல்பாடல்களும் செய்

வித்துத் தர்ம சாஸ்திரத்தின்பிரகாரம் அரசியல்புரிந்து, இராமநாதா என்னுஞ்சப்தத்தை இடைவிடாத வாய்ப்பாடமாகக்கொண்டு வருகின்ற சற்குணத்தோன்றலாகிய அனந்தகுண பாண்டியனது சரித்திரத்தைச் சூதமுனிவர் நைமிசாரண்ணியவாசிகட்குப் பின்னுஞ்சொல்வதானார்.

இவ்வாறவணரசியல் புரிந்துவரும் தென்னவர் பெருமானை அகத்தியர் அகத்தியம் பார்ப்பதற் குன்னி, தனது சீடர்களுடன் சமிவனமார்க்கமாகக் கானுறும் பாலைவனங்களும் கடந்து ஆசூர்வளநாட்டில் வருகின்றன ரென்பதைத் தெரிந்த மீனவனும், தோரணங்கள் கட்டுவித்து மார்க்கத்தில் பந்தரிட்டு, தண்ணீர்ப்பந்தர்வைத்து, இளைப்பாறுமடங்கள் கட்டுவித்துப் பனிநீரால் புழுதியடக்கி மூத்துச் சுண்ணத்தாற் கோலமிட்டு எதிர்கொண்டு சென்று உயர்ந்தசாதிப் புட்பங்களா லம்முனிவருபய தாமரையி லருச்சித்து வணங்குங் கைதவனைக் கடாலிங்கனமாகத் தழுவியெடுத்துஎன்னையாளாகவுடைய பரமசிவத்தை அன்பினாற் பூசித்துப்பவநேசியாச் சிவநேசி! நீ வாழ்க வென்றாசீர்வதித்தனர்.

இவ்வாறாசீர்விதிக்கும் பொதிகை முனிவரரைத்தொழுதுநின்று வாய்புதைத்துக் கடல், மலையிவைகள் வலிமையை அடக்கும் கரதலப்பே ராற்றலுடைய மேருவே!உமதுபயத் திருவடி இங்ஙன மெழுந்தருளவும் உமதருமைத் திருமேனி

யைக் கண்டு பூசிக்கவுமியான் செய்ததவமிஃதெனவறிந்தி லேன். இஃதன்றி,

“ பலன்கள்வேண்டியபரிசெலாநல்கிடும்பரமதத்துவஞானி
நலன்கொணுமமெசெபித்திடுமந்திரநயந்தவனீராடுஞ்
சலங்கொடீர்த்தமாமவன்றிருமேனியேசகலதெய்வமாஞ்செவ்வாய்
மலர்ந்தவாசகமறுபிறப்பெனவருமயற்பிணிமருந்தாகும்.”

என்ற மேற் செய்யுட் கேற்ப உமது மகிமையை யென்னால் சொல்லத்தரமன்றென்று துதித்து நின்றான்.

இவ்வாறு பூசித்து நேசிக்கு மன்னவர் பெருமானைக் குறுமுனி நோக்கிப்புன்னகைகொண்டு நின்போல் கோடாத செங்கோல் கொண்டிவ் வுலகாண்டவரியாருமிலரென்று சொல்லித் திருவாறைக் கறைமிடற் றண்ணலைப் பூசிக்கு முறைதெரிந்து விசுவாசிப்பவர் காமியம் நிட்காமியம் இரண் டையும் பெறுவதற் கையமில்லை யெனத்தெளிந்த முனிவர் பெருமான், கயத்தாற்றினும் கோடிதீர்த்தத்திலுந் தீர்த்த மாடி, பால்போன்ற வெள்ளிய நீறணிந்து கரந்தைமாலை யணியுஞ் செவ்விய சடாடவியுடைய கோதண்டராமலிங்கற் குத் திருமஞ்சனம் ஆட்டுவித்து, பூசோபகரணங்களால் விதிப்படி பூசித்து, ஆறைநாயகா அன்பர்க்குரியவா பக்தி வலைபிற்படும் பராபரனே மறைப்பொருளே இவ்வுலகமெ ன்னுமிருட்டறையிற்புக்கி வழிதெரியா துழலுஞ் சீவகோடி

கட்குள்ளத் தொளியாய் நின்று வழிகாட்டும் ஞானதேயனே உவமையின்றிய பேரானந்த வாழ்வே சுகவடிவே யெனத் துதித்து அங்ஙன் திருக்காப்பின் முன்பதாக விற்றிருந்தார்.

இவ்வாறு சிவபூசைத் தொழின்முற்றி யிருந்த கலசயோனியை அனந்தகுண பாண்டியன் சோடசோபசாரஞ் செய்து வணங்க உளமகிழ்ந்த மாதவன் தராபதி! நீ யடைதற்குரியன வெவையு மெளிமையில் வாய்க்குமென் றாசீர்வதித்துப் பின்னுஞ் சொல்லுவார். உமது சித்தவிருத்தி யெல்லாஞ் சந்திரசேகரப் பெருமானிடமென்றியாங் கேட்டு உம்மைப்பார்க்கும்படிக்கிவ்விடத்துக்கு வந்த காரியம் என்றுஞ் சொன்னார். இவ்வசனங்கேட்ட அரசர்கோ னெழுந்து பரமதயாளுவே நின்றெரிசனத்தாலியானெல்லா நலனும்பெற்றுய்ந்தனன் என்று வணங்கும் வழுதியை முனிவர் பெருமானோக்கி நிர்மலானந்த வாரியாகிய ஈசனிடத் தன்புடையாற் கெடுஞ் குறைவென்னு முனிவர்கோனை அனந்தகுண பாண்டியன் வணங்கிச் சொல்லலுற்றான்.

இவணெழுந்தருளிய கோதண்டராமேசரது பழைய சரித்திரத்தை முழுமகனாகிய அடியேனறியும்வண்ணஞ்சொல்லியருள்விரென்றிறைஞ்சி நின்றான். இவ்வகை வணங்கு மிறைவனை நோக்கிக் குருமுனி சொல்லுவார். என்றும்பழமையுமாயும்சுயம்புவாயுமுள்ள இவ்விலிங்கோற்பவரைச் சதுர்

யுகத்துக் கொவ்வொருதரம் இராமன் பூசித்துக் கோதண்டம்பெற்று இராவணனைச் செயமடைவான். மற்றும் பலவரசர்கள் அநேக லிங்கங்களைத் தாபித்து வேண்டும் பலனைப்பெற்றனர். இவ் விராமலிங்கரையுஞ் சூழவிருக்குஞ் சுந்தரவிலிங்கங்களையும் பூசிப்பதெளிமையல்ல. புலன்கடந்தமுனிவருக்கும் அருமையாயிருக்குமானால் ஏனையோர்க் கெங்ஙனம்? ஆனால் பூர்வ புண்ணியமிச்சத்தால் வாய்க்கும். இவ்வாறுவமையற்ற இலிங்கோற்பவற்கு நேயத்தாலும் பாலாலு மஞ்சனமாட்டுவித்துப் பட்டுவஸ்திரம் சாத்தி இரத்தினாபரணம் முந்நூல் பத்மமாலை யிவைகளாலலங்கரித்து வற்கவகை நைவேத்தியஞ்செய்து பூசிப்பார் பெறும்பேற்றைச் சற்குணத்தரசே! கேளெனச் சொல்வதானார்.

இம்மையிற் போகபோக்கிய நிறையச்செய்து, மறுமையில் கயிலாசீங் காணியாக்கும் என்று, வருபிறப்பைநீக்குந் திடஞானிகளதுபாயமு மிஃதே: இதன்றி ஐயம் திரிபுடையார் நரகத்துக் காளாகுவரென்று கும்பமுனிவர் பின்னுஞ் சொல்லுவார். இவ்விலிங்கோற்பவரும் உலகமாதாவாகிய பரமேஸ்வரியும் ஒன்றாயிருந்தா லியாவரறிந்து பூசிப்பார்? ஆகலால் உமையாளை மற்றோர் வடிவத்தில் வீற்றிருக்கும்படிவேண்டுவாம். ஆதலிற்பூதலத்தரசே! திருவுருவம் வகுப்பிப்பாயென்ன,உளமகிழ்ந்த பாண்டியனும் அந்நிமிடமே சிற்பனைக்கூவி உமையாட்குத் திருவுருவம் வகுப்பாயென் றுத்தர

வளித்தான். அப்பணியைச் சிரமேற்றாங்கி ஆகமவிதிவழுவின் றித் திருவுருவமைத்து வந்ததைப்பார்த்திவனறிந்து முனி வற்குணர்த்தினான். அவரு மித்திருவுருவ மிக வற்புதமென் றறிந்து யோகதாரணையிலிருந் துமையைவேண்ட அவ்விரா மலிங்கத்தினின் று முமாதேவி வெளிவந்து தோன்றினாள். இவ்வண்ணம் காட்சிகொடுத்தருளிய உமாதேவியை என்னு யிரே! கண்ணே! கருத்தே! கண்மணியே! பொன்னே! பொ ருளே! புலன்கடந்த பெருவாழ்வே! எமது பசுபதியின் பாக த்துறையும் அம்மே! நீவிரிருவரு மொன்றாயிருந்தாலறிவா ரறிவரறியாற் கெங்ஙனமென்று தொழுமுனிவரைநோக்கி, நின்னால் நியமிக்கப்பெற்ற இத்திருவுருவத்தைச் சீவகோடிக ளுய்யும்பொருட்டு யாமிருக்கு மிடமாகக் கொண்டனமென் று சொல்லி, ஆனாலிஃதெல்லாம் அனந்தகுணபாண்டியனது நன்மையென்றுமாதேவியார் அத்திருவுருவத்திலெக்கியமா னாள். சீவகோடிகளது பக்குவாபக்குவந்தெரிந்துபராமரிக்குங் கருணைப்பிராட்டிக்கு அகிலாண்டநாயகியெனத் திருநாமம்பு னைந்து திருவாலயமுஞ்செய்வித்து கோதண்ட ராமேசற்கும அகிலாண்டநாயகியார்க்கும் திருக்கல்யாண மகோற்சவஞ்செ ய்து திருமங்கலஞ் சாற்றி அகத்தியரும் பாண்டியனுந் தெரி சித்தார்கள்.

இப்பாலிறைவ னிறைவியிடம் விடைபெற்ற "பொதி கைமுனி பாண்டியனே! இப்பரமேஸ்வரற்கும் பரமேஸ்வ

ரிக்கும் நாடோறும் குறைவின்றித் திருமஞ்சனம், அர்ச்சனை, பூசை, நைவேத்தியமுதலியன நடத்துவாயென் றுரைப்ப தைகேயேற்ற மன்னவன் குணவரையே! யானரகிற் றுழாவண் ணமிதோபதேசஞ்செய்த பரமாசிரியரே! உமது திருவாக்கி ன்படி நடததிவருகிறேன், எற்கெக்காலங்களினும் தீயவழி யிற்செல்லாத இதயமொன்றைத் தந்தருள வேண்டுமென் று பிரார்த்திக்கும் பாண்டியற் கருளித் தனது சிட்டருடன் அகத்தியர் தென்மலை கெழுந்தருளினர்.

"ஒழுக்கமன்பருளாசார முபசாரமுறவுசீலம்
வழுக்கிலாத்தவந்தானங்கள்வந்தித்தல்வணங்கல்வாய்மை
யழுக்கிலாத்துறவடக்கமறிவொடர்ச்சித்தலாதி
யிழுக்கிலா வறங்களானுலிரங்குவான்பணியறங்கள்."

என்னுஞ் செய்யுளிலமைந்த குணத்தொகுதிகளும் வ னைபவும் ஒருங்கேயமைந்த அனந்தகுணத்தோன்றல்தனது பொற்குவைகளெல்லாந் திருவாலயப பணிவிடைக்களித்து புன்மலக்கட்டுவிட்டு மனைவி மக்களுடன்கூடி இல்லறம் நட த்திவந்த அருமைபோலக் கோதண்ட ராமேசர் அகிலாண்ட நாயகியாரிடத்தும் பகதி முதிர்ந்து சிவானந்தப்பேறுபெற்றி ருந்தான் என்று நைமிசாரண்ணியவாசிகட்குச் சூதவிருடி சொல்லியருளினர்.

அனந்தகுணபாண்டியன்வந்துபேறடைந்த சருக்கம் முற்றிற்று.

உ

# திருவருட்டுணை.

## அகத்தியமுனிவர் பூசித்தசருக்கம்.

பஞ்சேந்திரியங்களையும் மும்மலங்களையுமவித்தவராகிய சூதவிருடி நைமிசாரண்ணியம் வந்தருளத் தவத்தொழினிறையும் நன்னிலம்வாய்ந்த முனிவர் சமூகமெழுந்து வணங்கிப்பாதோதக முட்கொண்டொன்றிசைப்பதானார்கள். திருவாறைநகர்ப் பழம்பொருளாகிய உமையைக்கியதேவை நற்குணத்துடன் பூசைசெய்து பேறுபெற்றவர்வேறுமுளரேல், அவர்களது சரிதத்தைக் கிருபைநிறைந்த உமது திருவுள்ளத்தாற் சொல்லியருளவேண்டுமென்று பிரார்த்திக்கச் சூதவிருடி புகல்வதானார்.

பொதிகைமலை வாசியாகிய அகத்தியரென்னுந் தமிழ்த்தல்லி திருவாறைப்பதிக் கோதண்டராமலிங்கேசரைப் பூசிக்குமெண்ணங்கொண்டு தென்மலை, யானைமலை முதலியன கடந்து தன் சீடர்களுடன் சமீவனமடைந்து கானாறுகண்டு ஆங்குச் சின்னாள்வசித்துத் தன் சமூகத்துடன் பவித்திர க்ஷேத்திரம் பலகடந்து வந்தருளினார். இவ்வாறு திருவாறைப்பதிக்கு வந்தருளிய அகத்தியர், இராமேசரது பாததா

ம்மையை வணங்கி அகங்குளிர்ந்து கபத்தாற்றினுங் கோடி தீர்த்தத்தினுந் தீர்த்தமாடி, தருப்பணாதி விதிப்படிஅனுட்டித்து முடித்துத் தியானித்து, புட்பத்தாலு முதகத்தாலும் அன்பாலும் "ஆகமவிதி வழாமலருச்சித்து" ஆனந்த பரவசமுற்றுப் பாடியாடிஅன்புநிறைந்து தோத்திரித்துவணங்கி,

"பாவமுமறமுமொத்துப்பக்குவம்பருவமுற்றிங்
காவியைம்புலனைப்பற்றுதகமுகமாகியென்று
மோவியம்போன்றிட்டன்னவுணர்வுணராமைபோக்கிற்
சீவனுஞ்சிவனும்வேறோதிருப்புலிவனத்துளானே."

என்ற செய்யுட்படி சிவோகம்பாவித்து ஞானயோகிருந்து தற்பதநிலை யடைந்தவனைதானாய்ப் பேரின்பவாழ்வடைந்திருந்தார்.

இவ்வாறு குறுமுனியுறையு நாளில், அருண்மழை பொழியும்பரமசிவம் தானுகச்செய்யுங்கருணைக் கோரேதுவாகிய அன்னதானத்தைச் செய்கின்ற நற்குணமுடையவனும், தீமைநீங்கியவழியிற் சேகரித்த பொருளைச் சிவாலயத்துக்கும் சிவனடியார்கட்கும்ஏழைகட்கு முதவும் தலைமை பெற்ற வள்ளன்மையுடையவனும், சிவபத்தனாகி வில்லிபுத்தூரிலரசாண்டிருந்தவனும், திருவாறைப்பீசரை நாளுஞ் சேவித்தற்பொருட்டு அவரது திருவாலய முன்னர் நகரமுண்டுபண்ணி அதில் வசிப்பவனுமாகிய அனந்தகுணபாண்டியனை முன்

னரே தெரிந்தவராதலில் அவனது சம்பாஷணைக்குக் காதல் கொண்டவராய் அவனிடஞ் செல்வாராயினர்.

அப்பொழுது முனிவர் பிரான் வரவை யொற்றராற் கேள்வியுற்ற அனந்தகுணத் தோன்றல், அமைச்சர் தன்னைப்புடை சூழ்ந்துவர அன்பு நிறைந்து உவமையற்றபரவசப்பட்டுப் புளகாங்கிதமடைந்து எதிர்சென்று நடந்து, அவரதுபயபாதத்தில் மெல்லிய புட்பத்தாலர்ச்சித்து, இப்புவி யெப்புவிகட்கு மேற்றமுடையதென்று விழுந்துபணிந்து நின்றான். இப்படிக் கன்புடன் வணங்கி நிற்கு நிலக்கிழவனை, மாதவனோக்கி உண்மைநெறிதவறாதவரசே! நீயும் உனது மனைமக்களும் மற்றுள்ளோருஞ் சுகமாவென்று கேட்பத் தேவரீர் திருப்பாதகோவவெழுந்ருளியவிசேடத்தால், அன்றுமின்றுமென்றுஞ் சுகமடைந்துளே மென்றரசர் கோன் புகன்றான். உலகநிறைந்த சற்கீர்த்தியுடைய சத்தியகீர்த்தி! நீசிவநேசத்தில்முதிர்ச்சிபெற்றபக்த னொன்றிங்ஙனம் வந்தபடிக்குன்னைப் பார்த்தனமெனக்கும்பயோனிபுகன்றார். இவ்வாறு புகலும் முனிவர் கோனைநோக்கிச் சிவக்கொழுந்தை யகத்துட்கொண்ட தவக் கொழுந்தே! உமதுவாக்கால் ஆனந்தநாயகரது சரிதத்தையின்னும் புகல, அருட்கருணை செய்வீரென்றடி தொழுதான்.

இவ்வாறு வினவும் அரசர்கோனை நோக்கி முனிவர் கோன் சொல்வார். திருமாலிரண்டாவது யுகமாகியதிரேதத்

தில் தயரதன் கான் முளையாய்த் தோன்றித் தாபதவடிவத்துடன் வந்து இவ்வாறைநாயகரைப் பூசிப்பர். அவர்பூசித்தற்கிரங்கிய பரமேஸ்வரன் கோதண்டங் கொடுக்கப் பெற்றுத் தசக்கிரீவனுகிய துஷ்டராக்ஷதனைச் செயமடைவார். இராமரால் பூசித்ததும், எத்தலத்தினு முயர்ந்ததும், உமையைக் கியபாவமடைந்திருப்பது மித்தலமேயென்று சொல்லிப் பின்னுஞ்சொல்லுவார். ஆறையம்பதிக்கோதண்டராமேசரைச்சூழ்ந்த பக்கங்களிலெல்லாம் பல பேர்கள் தங்கள் தங்களிஷ்டகாமியம் நிறைவேறும் வண்ணம் ஒரு கோடிக்கு மேல் இலிங்கங்களைப் பிரதிட்டைசெய்து வேறு வேறு ஸ்தாபித்த இத்தலத்துக் கொப்பாய்ச் சொல்ல வேறில்லையென்று சொல்லி, இச்சிவலிங்கத்தில் பரமேஸ்வரியுமைக்கியப் பட்டிவண் சிறந்திருப்பதா லிவ்விலிங் கோற்பவர்க்குத் திருவபிடேகஞ்செய்து, உருசியுடைய நைவேத்தியமூட்டி, சொன்னமணியாலலங்கரித்து, பட்டுவஸ்திரஞ் சாத்தி, புட்பமாலையணிந்து பூசிப்பார் பெறும் பேற்றைச்சொல்வதானர்.

" உருவளர்வயதுபூமியுயர்தவங்கருணையூக்கம்
பெருநிதியொழுக்கஞ்சீலம்பிள்ளைகள்மானங்கல்வி
பொருமலிவிசயம்வீரம்புண்ணியம்மாதர்போகந்
திருமலிபுகழிரெட்டுஞ்சிவகனொருவன்பெற்றான்."

என்னுஞ் செய்யுளிலமைந்து கிடந்த சோடசமும் பெற்று மறுமைக்காலத்திலுவமையற்ற சிவபோகவாழ்வடை

வார்கள். இது சத்தியஞ் சத்தியம். அம்மம்ம! நம்மாலறிந்து சொல்லத்தக்கதன்றென்று கூறக்கேட்ட குணசீலனும், அற்புதமடைந்து ஆனந்த பரவசமுறமலயமாமுனிவர் மற்றுஞ் சொல்லுவார். ஆலயத்துள்புகாதமரபினரும், சென்று தரிசிக்கச்சக்தியற்றவரும், தெரிசித்துய்யும் பொருட்டல்லவா உற்சவ மேற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதலால் உற்சவ காலங்களிலியாவருங் கண்டு தெரிசிக்க உமாதேவியார்க்குத்திருவுருவம் வகுப்பிப்பாயென்றுமுரைத்தார்.

இவ்வாறுரைத்த அகத்தியருத்தரவைச் சிரமேற்றாங்கி அவரது திருவுளப்பாங்கின் பிரகாரம் சிறபசாஸ்திரிகளை வரவழைத்துப் பரமேஸ்வரிக்குத் திருவுருவம் வகுக்கும்படிக் கரசர் கோன் புகல அவ்வண்ணமே செய்தமைத்தனர். பின்னர்க் குணபாண்டியனுமகங்களித்துச் சிற்பருந்தானுந் திருவுருவத்தைக் கொண்டு போந்தார்கள். இச்சகளவடிவைப்பார்த்த முனிவர் பிரானுந்திருவருளே வடிவமாய்ச்சமைந்த தென்றற்புதமடைந்து திருவாலயஞ் சமைப்பியுமென்ன, அவ்வுரையின்படி சற்குணத் தோன்றலுங்கட்டி முடித்தான்.

உடனே அகத்தியர் இதயங்களிந்து மகிழ்ந்து கயத்தாற்றில் தீர்தமாடி சந்தியாவந்தனஞ் செய்து செபம் பண்ணுவதுடன் திரியாங்கசுத்தி செய்து உமாதேவியைத்தியானித்தார் இப்படிக்குத் தியானிக்குமகத்தியரது பக்திக்

கிரங்கிப் பரமேஸ்வரரிடத்திருந்து ததும்பி நிறைந்த கருணைப்பிரவாகவடிவத்துடன் பரமேஸ்வரி தோன்றினாள்.

பூரணசந்திரன்போன்ற திருமுகமும், கிருபை நிறைந்த விசாலாட்சமும், மரகதவொளி தவழுந் திருமேனியும் இலங்கித் துலங்க விடைமேற்றோன்றிய சகள வடிவாகிய எம்பிராட்டியினிணைப்பதத்தி லன்றலர்ந்த புட்பங்களாலும், மந்திரத்தாலும், அன்பாலுமர்ச்சித்து இனிமைபொருந்திய தமிழ்ப்பாவாற்போற்றி, அகிலமெல்லாங் காத்தருளும் அகிலாண்டவல்லி யிவ்வுருவி லுலகமுய்யும்பொருட்டு எழுந்தருளியிருந் தருளவேண்டுமென்று பொதிகைமாமுனி பணிந்து வேண்ட, அவ்வாறுருகவென்று கடாக்ஷித்துப் பின்னர் உமாதேவி சொல்லுவாள்.

அகத்தியமுனிவனே! நினக்கின்னும் வேண்டுவன கேளளிப்போமென்ன, ஆதிபராசத்தி! நீயுமிம்முதல்வரும் அடியேனகத்திருந்து தெரிசித்தியானும்பும்படிக்கும், பிசாச முதலிய துஷ்டதேவதைகளது சிற்றத்துக்குள்ளானோர் இவண்வந் துன்னைத் துதிக்கிலவ்வியல்பு நீங்கிவாழ்வடையும்படிக்கும், யாவரேனும் உன்னைப்பூசித்து விசுவாசிப்பாராயினவர்களெண்ணம் நிறைவேறும்படிக்கும், இத்தலவாசிகட்குப் புத்திர மித்திர செல்வந் தழைத்தோங்கும்படிக்கும், நின்மேற் கவிமாலை சாற்றுவோர்கட்குக் கற்பகமாய்வேண்டுவன அளிக்

கும்படிக்கும், கிருபைபாலிப்பதுடன் சிவோகம் பாவித்தங்ஙனமாய துறவியரித்தலத்தில் வசிக்கும்படிக்குங் கருணைபுரிய வேண்டுமென்று கும்பமுனிவர் பிரார்த்திக்கப் பரமேஸ்வரி அப்படிக்குங் கிருபைபாலித்தாள்.

அங்ஙனம் அனந்தகுணபாண்டியன் பணிந்து முனிவர் பிரானெண்ணமமுகிதே: எனதகவமைதிபு மஃதே; அம்மே! என்று பிரார்த்திக்கப் பரமேஸ்வரியு மாகுகவெனச் சொன்னமழைபொழிந்து அரசர்கோன்றுதித்து வணங்கினன். இவ்வாறு தலைவியவ்விருவருக்கும் வரமளித்துப் பிரசன்னமாகத்தோன்றி யாவருமத்புத மற்புதமென்று துதிக்கத் திருவுருவத்திலைக்கியமானாள். உடனே திருவாலயத்துள் எழுந்தருளச்செய்து கோதண்டராமேசரையும் அகிலாண்டநாயகியாரையும் பூசித்து விடைபெற்ற அகத்தியர் அனந்தகுணபாண்டியனுக்கு வேண்டுவனவருளி அவனுறையும்படி செய்து தன்சீடர்களோடு பொதிகாசலத்துக் கெழுந்தருளினரென்று நைமிசாரண்ணியவாசிகட்குச் சூதவிருடி சொல்லியருளினார்:

திருச்சிற்றம்பலம்.

அகத்திய முனிவர் பூசித்த சருக்கம் முற்றிற்று.

௨

# திருவருட்டுணை.

## இராசசேகரபாண்டியன் தெரிசித்தசருக்கம்.

நிரதிசானந்த வாழ்வைக்கொடுக்குஞ் சிவபுராணத்தின் மான்மியங்கள் தெளிந்த சூதவிருடி நைமிசாரண்ணியத்துக் குவந்து வந்தருள அவ்விருடியர்பணிந்து மாதவனே! உளவிருளகற்றுமாதவனே! உமது வாக்கால் பரமேஸ்வரனது சரித்தைப் புகல யாங்கள்கேட்டுய்ந்தனம். அதுபோல் திருவாறை நகர்ப் பெம்மானைப்பூசித்துப் பேறடைந்தசரித்தை இன்னுங்கேட்டுய்வதற்கு வேண்டினோமென்று புகலச் சூதவிருடி கூறத்தொடங்கினர்.

இலக்கத்தாலளவுபடக்கூடாத பேர்கள் திருவாறைநகர்ப்பெம்மானைப்பூசித் திகபரபேற்றைப் பெற்றனர். அவர்களுள் மகிமைபெற்ற வோரரசன் பூசித்துப் பேறடைந்த சரித்தைப் புகல்வேன். அஃதையுமதகவமைதியாக்கக் கடவீரெனக் கூறிச்சொல்லுகின்றார். காசிக் கங்கையினும் அதிகமகிமையைக் கொடுக்குந் தாம்பிரவன்னிநதியின் தென்கரையில்மணப்புடைவீடென்று பலருஞ்சொல்லத்தக்க பட்டணமொன்றுளது. அஃதழகாபுரியினுஞ் சிறந்த வமைதிகளும்,

மேகங்கள் தவழுங் கோட்டைகளும், ஆகாயத்தை யளாவிநி ற்கும் வெற்றிக்கொடிகள் கட்டப்பெற்ற கோபுரங்களும், அபயமபயமென்று பலவரசர் காத்திருக்கும் பலவாயில்களும், அழகிய உபரிகை பிரகாசிக்கும் இரத வீதிகளும், இரதமும், சிவாலயமும், பக்கங்களெல்லாம் பிரகாசிக்கும் பலவர்ண்மனைகளும், வேதியர் கிரகங்களும், குற்றமற்ற மன்பதை வசிக்கும் பல மறுகுகளும் நிறைந்து எவ்விடத்தும் மங்கல சப்தம் நிறைந்துகொண்டிருக்கும் பெருமை வாய்ந்ததாம்.

இப்பட்டணத்திலிருந் தரசாண்டு வருந்தோன்றல் காலந்தெரிந்துரைக்கும் மந்திரிகளையும் தறுகண்ணமைந்த தந்திரிகளையும் புடைகாப்பினரையு முடையனாய், குதிரைக்கூட்டங்களையும் யானைத்தொகுதிகளையும் மற்றும்பல படைகளையும் பரமசிவத்தினது பணிவிடைக்காகவே யமைத்தும், தன்னுயிர்போன் மன்னுயிரோம்பி, ஆறிலொரு கடமைகைக்கொண்டு, பகைவர் வணங்கப்பெற்று, பரமேஸ்வரனது சரணாரவிந்தங்களைத் தனதிதயாம்பரத்திலலர்த்தி இவ்வுலகாண்டுவரும் இராசசேகரபாண்டியனென்றோ ரரசன் இருந்தான்.

இவ்வரசன் நாடோறும் ஆதவனுதயத்துக் காறுநாழிகை முன்னரெழுந்து திருவாலவா யிறைவனை வணங்க முதிர்ந்த பக்தியுடன் அஞ்சல்வைத்து யானைமீதேறிச்செல்

வான். இவ்வாறு மீனாட்சி சுந்தரேஸ்வரரை பொவ்வொரு தினமுஞ்சென்று தலையன்புடன் மறவாது தெரிசித்து வருகின்றநாளில், தனக்கு விருத்தப்பருவம் புகுந்து வயதுநாற்றெண்பதாகியுந் தினந்தினமுஞ் சொக்கநாயகரைச் சென்று தெரிசிக்குஞ் செய்கையிற் குறைவின்றிநடந்தேறுநாளிலோர் நாள், திருவாறையம்பதிக்குச் சமீபித்தவுடனுபாச மிகுதியாற் களைத்துச் சோமசுந்தரரை நினைத்துச் சர்வஜீவதயாபரனே! உன்னை நாடோறும் வந்து வணங்கித் துதிக்க எனக்குக் கிழப்பருவத்தி லேற்படுந்தளர்ச்சிவருத்துகின்றது ஆதலாலித்தளர்ச்சியை மாற்றி யௌவனவளர்ச்சியைக் கொடுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

அச்சமயத்திற் கூடலேஸ்வரனது கருணையால், இராசசேகர வழுதி! நீ யஞ்சேல் சற்றுப்பொறு, உனது மூப்புப் பருவத்தில் நாடோறும் வனசஞ்சார மேற்படுகின்றதனால் நினக்கிவ் வருத்த முண்டாயிற்று. ஆதலிற்கேள்:இத்திருவாறை க்ஷேத்திரத்தின் மத்தியில் சுயம்புவாகியும் பழமையாகியு முள்ள இவ்விராமலிங்கரை நாமென்றறிவாய். நாடோறுங் குறுமுனி முதலாயினோர் பூசிக்கும்மான்மியநிறையப்பெற்று, அம்முனிவர் இச்க்ஷேத்திரத்துக்கும் கைலாசகிரிக்குமு் ஆகாயகமனஞ் செய்துகொண்டிருப்பார்கள்; இஃதன்றி ஆதிபிலியாவருந் தேறற்கருமையாய் ஆதிமூலமாய்

நான்குகத்துக்கொருதரம் திருமாலிராமனாகத் தோன்றிப் பூசித்துக் கோதண்டம் பெறுகின்றமையால், இக்கோதண்ட ராமலிங்கத்தை நாமென அறிந்து வணங்கக் கடவாயென் றாகாயவாக்குண்டாயிற்று.

இவ்வாக்கைக்கேட்ட வழுதியு மன்பு பொங்கி நெகிழ்ச்சியடைந்த சிந்தையுடன் கற்றுவெனக்கசிந்து ஆனந்தக்கண்ணீர்பாயப் பழையகாலந்தொட்டெம்மை யடிமைகொண்டருளுஞ் சௌந்தரபாண்டியனே யென்று துதித்து இதயத்தினிமிடமும் மறவாத தியான முடையவனாய்த் தன்னைச் சூழ்ந்துவருமமைச்சர்களுடன் குடதிசையிற் றிரும்பி, நதிக்கு மேல்கரையில் பிரம விட்டுணுக்கரிய பரமசிவத்தி னுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தைக்கண்டு கூசி மெய்ந்நடுங்கி நாக்குழறி விண்மாரி யென்னக் கண்மாரி துளிக்கக் கைகுவித்துப் பூமியின்மீது விழுந்து வணங்கி யெழுந்துஐயனே! என்னன்னையே! கிடைத்தற்கரிய அரும்பொருளே! பரிசுத்தனே! நித்தியனே! எண் குணக்கடலே! பரமதயாளுவே! திருவாறை நகரீசா! அறிவிலேற் கறிவுறுத்துவான் நின்னருட்டரிசனங் காட்டுமண்ணலே யென்று துதித்தான். அங்ஙனமே கோதண்ட ராமேசனது கருணையால் பஞ்சவனே! திருவாலவாய்ச் சோமசுந்தரமாகிய நாமே இவ்விலிங்கமென்று பூசிக்கக்கடவாய் இதில் எவ்வளவேனுஞ் சந்தேகங் கொள்ளவேண்டாமென் றாகாயவாக்குண்டாயிற்று.

இவ்வாப்த வாக்கியங்கேட்ட இராஜசேகர பாண்டியனும், என்னை யாளாகவுடைய பரமசிவத்தின் செயலெனக்கருதி, மதுவருந்தத் தேடிச்செல்லும் வண்டினம்போல் நாண்மலர்கொண்டு பூசிக்கும் விருப்பால் இவ்வாலயமுன்னருள்ள யானைநதியில் மூழ்கி, ஆலயத்துட் கோடிதீர்த்தமாகிய கூபத்தானஞ்செய்து, நான்குவேதத்தினுஞ் சொல்லப்பெற்ற பழமையாகிய ஆகமவிதிப்படி விபூதியணிந்து, நித்திய கர்மானுட்டானஞ்செய்து, வளப்பம்பொருந்திய திருவாலயத்தை வலப்பிரதக்ஷணஞ் செய்து, கோதண்டராமேசுவரரையும் அகிலாண்டநாயகியாரையும் மந்திரவிதிப்படி புட்பங்களினலர்ச்சித்துப் பழுத்த அன்பாற் றுதிப்பானானன்.

யானையுரிபோர்த்த இறைவனே! உன்னை வணங்குகிறேன். மழுவாயுதக்கரனே உன்னைப் போற்றுகிறேன். கபத்தாற்றுக்கிறைவனே உன்னைத்தொழுகிறேன். குறைவில்லா வள்ளலே உன்னைக் கும்பிடுகிறேன். அர்த்தநாரீச்சுரனே உன்னைப் பணிகிறேன். சிவலோகத்தரசே உன்னைத்துதிக்கிறேன். அன்பர்க்கருகிலுள்ளவனே உன்னை வேண்டுகிறேன். மூவா முதல்மூர்த்தி உன்னைச் சேவிக்கிறேன். எங்குநிறைந்த பூரணனே உன்னைத் தோத்திரிக்கிறேன். வினைகடந்தவிமலா உன்னை ஸ்மரிக்கிறேனென்றின்பக்கண்ணீரொழுகும் பாண்டியனது பேரன்புக்கிரங்கி அரியயற் கெட்டாத அடி

முடிதோன்றக் கோதண்ட ராமேசர் தன் திருக்கோலங் காட்டுவாராயினர்.

வெள்ளியபிறையொளிதவழுஞ் சடாமகுடமும், கருணைப்பிரவாக நிறைந்தொழுகப்பெற்ற திருமுகமும், துஷ்டர் சிஷ்டர்களை நிக்கிரக பரிபாலனம், பண்ணுந் திரிநேத்திரமும், தோட்டைசயீர் திருசெவியும், திருநீலகண்டமும், எண்புயமும், பரவைசுவரிய நிறைந்த திருமார்பும், அழகிய பாததாமரையும் இலங்குஞ் சகளத்திருமேனியுடன் பரமேஸ்வரியொருபுறந்தோன்ற இடபாரூடராய்த் தோன்றியருளினர்.

இராசசேகரபாண்டியன் கண்டான், களித்தான், காதல் கொண்டான், பரவசமடைந்தான், மலக்கட்டு விட்டுப்பழுத்த அன்புடைந்தொழுதுவதுபோற் கண்ணீர் விட்டுளறினன், மயிர்க்கூச்செறிந்தான், ஆடினன், பாடினன், அங்குமிங்குமோடினன், துள்ளிக்குதித்தான், யான்பிறப்பிறப்பென்னுந் துன்ப வாருதியைப் பிழைத்துப் பிழைத்தேனென்றொருவாறுதெளிந்து துதிப்பானாயினன்.

(1) அத்தாசரணம் அரனேசரணம்
சுத்தாசரணம் துணைவாசரணம்.

(2) வந்தாய்சரணம் வாராய்சரணம்
எந்தாய்சரணம் எட்டாய்சரணம்.

(3) நின்றாய்சரணம் நில்லாய்சரணம்
குன்றாய்சரணம் குறைவேசரணம்.

(4) மறைபேசரணம் வழியேசரணம்
நிறைவேசரணம் நிகராய்சரணம்.

(5) உருவேசரணம் ஒளியேசரணம்
அருவேசரணம் அடியேன் சரணம்.

என்றும், நடனஞ்செய்யுங் குஞ்சிதபாதா! ஆறையீசா! மெய்யடியாரிதயத்திற் பழுத்தொழுகும் பேரின்பக்கனியே பழமையாயுள்ள திருவாலவாய் போல ஈங்கெழுந்தருளு மெம்மானே! நித்தியகல்யாணிமணாளா! எனதகக்கண்ணொளிக்கொளி யுதவுங்கண்ணே யென்றும், முப்பத்திரண்டறம் வளர்த்ததாயே! பரமேஸ்வரனைப் பூசித்திவ்வுலகமுய்யும் பொருட்டுப் பூசித்துக்காட்டிய எம்பிராட்டி! எண்பத்து நான்குலக்கயோனிபேதங்களாகிய சீவகோடிகளைத் தன்கருப்பத்தில்வைத்துப் பெருமந் பெற்ற கன்னியே! என்னையடிமைகொள்ளத் திருவருளே வடிவமாகவமைந்த அகிலாண்ட நாயகி யென்றும், இவ்வாறிறைவனையு மிறைவியையுந்துதித்துமுறைமுறைவணங்கிச் சிரமேற்கரங்கூப்பியஞ்சியொடுங்கிமேற்சொலவறியானுய் நிற்குமாறனை நின்மலகர்த்தாவாகிய பரமேஸ்வர னருட்பார்வையானோக்கிப் பேரன்புடையவழுதி! நினக்குவேண்டும் வரங்கேளென்ன இராசசேகரபாண்டியன் கேட்பதானான்.

சிவலோகசுந்தரசே நீயும் பரமேஸ்வரியு மெனதிதயத்தி னீக்கமின்றி நிறைந்திருக்கவும், யானறிந்து பூசிக்கவும், தாய் தந்தை தாரம் மக்கள் என்று சொல்லும் பாயாபந்தத்திற் சிக்காமலிருக்கவும் வேண்டுமென்று பூமியில் விழுந்து விண் ணப்பஞ்செய்ய, அதற்குமாபதியிரங்கி நீ வேட்டவரங்க ளைத் தந்தோமென்றருளி இவ்வுலசத்தாரறிந்து பூசித்து விசு வாசித்து வாழ அவ்விலிங்கத்தமர்ந்தருளினர். நைமிசாரண் ணிய வாசிகளே! யென்று சூதவிருடி பின்னுஞ்சொல்லுவார். இராசசேகரபாண்டியன் சுந்தரேசபுரம் என்னு நகரத்தை யும் தென்பால் தென்மதுரை யென்னு நகரத்தையும் புதி தாகச் செய்து அதிலிருந்தரசியல் புரிந்து சுபத்தாற்றிறு டோறு மூழ்கி ஆகமவிதிப்படி விபூதியணிந்து உருத்திரசா தனத்துடன் கோதண்டராமேசுரரையும் அகிலாண்டநாயகி யாரையும் பூசித்துப் பலநாட்களித்தான்.

"அன்புசிவமிரண்டென்பரறிவிலார்
அன்பேசிவமாவதாருமறிகிலார்
அன்பேசிவமாவதாருமறிந்தபின்
அன்பேசிவமாயமர்ந்திருப்பாரே."

என்னுந் திருப்பாசுரப்படி அன்பே யுருவமாகிய வழுதி, ன்னர் மணைப்படை விடாகிய தனது ராசதானியைச்சேர் மனுநீதி தவறுமற் செங்கோல்தாங்கி இராச்சிய பரிபா ஞ் செய்தும், உருத்திராக்ஷம் அறுகு கங்கை பிறைச்சந் ணிவைகளை யணிந்தொளிருஞ் சடாடவியுடைய கோதண் ாமேசரது சரணத்திற் குறையாத அன்புடன் நாடோ ந் போய்ப்பணிந்தும், இவ்வுலகத்தினிறைந்தோங்கு மன் ானம் தனதானம் பூதானமுதலியனகொடுத்தும் பன் கழித்த பின்னர், பரலோகத்துக்குச் செல்லு நியதி ம் வந்தவுடன் சிவகணநாதர் விமானத்துடன் வந்தழை இவ்வுலகப்பற்றுவிட்டுத் தொழுது விமானமேறிச் சிவ ம்வாழ்த்தத் திருக்கைலாசஞ்சென்று பரமேஸ்வரனது தாமரை நீழலிற்கலந்து பேரின்பவாழ்வடைந்தான். சசேகரபாண்டியனென்று சூதவிருடிசொல்லக்கேட்ட சாரண்ணியவாசிகளெழுந்து திசைநோக்கி யிருகரங்க ஞ் சிரமேற்கூப்பி நாசோற்பத்தியில்லாத பேரின்ப டிறைவா! ஒளிப்பில்லாத பரிசுத்தரது வாழ்வே! எக்கா னுமடையப்பெறுத இன்பத்தை யிக்காலத்தடைந் ம் திருவாறை நகரீசா! உன்றிருவருள்மகிமை யிருந்த நன்றாயிருந்ததென்று போற்றிப்புலனடக்கிய அவ்வி ர்குழாம் நித்தியானந்தவாழ்வைப்பெற்றிருந்தார்கள்.

சீர்தழைக்குங் கயத்தாற்றுத் தலமகிமைத் திறனறிந்
தினமுங் கேட்கிற், கார்தழைக்க மழைபொழியு நீர்செழிக்
மூர்தழைக்குங் காவுற் றோங்கும், பார்தழைக்கு நேரிழை
கும் பாரிழைக்குஞ் செய்கிடைக்கும் பசையு மில்லா, வே
தழைக்கு மெனிலப்பாற் றன்றிளைக்கும் வாழ்வினையா
விளம்பற் பாற்றோ.

திருச்சிற்றம்பலம்.

இராசசேகரபாண்டியன் தெரிசித்த சருக்கம்

முற்றிற்று.

குறிப்பு:—இவ்வசன சரித்திரங்கள் பெரும்பாலும் மூ
பாடத்தின் பொழிப்பாயிருக்கும்.

# பிழை திருத்தம்.

| பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | 2 | மெய்ம்மையகிய யாமுனை | மெய்ம்மையாகிய யமுனை |
| 5 | 5 | முடியென்றன் | முடியென்றான் |
| 34 | 1 | சுக்காசனை | சுகாசனை |
| ,, | 8 | நிரதிசானந்தம் | நிரதிசயானந்தம் |
| ,, | 13 | தெரித்தார்கள் | தெரிசித்தார்கள் |
| ,, | 22 | நாக்குளறி | நாக்குழறி |
| ,, | 1 | இஃதெனறறிந்திலேன் | இஃதென்றறிந்திலேன் |
| ,, | 4 | நிரதிசானநதம | நிரதிசயானந்தம் |

டில் பேஜ் 16வது வரி விவேபாநு—விவேகபாநு.